விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

க.பொ.த (சா/த)
பரீட்சை
மாதிரி வினாத்தாள்
விஞ்ஞானம் - I
தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் - II
உள்ளே...

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 கார்த்திகை 04 சனிக்கிழமை (19.11.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 336

# இனவாதிகள் மீது கடும் நடவடிக்கை

## பொலிஸ்மா அதிபருக்கு ஜனாதிபதி உத்தரவு



(கொழும்பு)

நாட்டில் இனவாதம் பேசும் அனைவருக்கு எதிராகவும் தயவு தாட்சண்யம், இன, மத பேதம் பார்க்காமல் நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ்மா அதிபருக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தர விட்டுள்ளார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## வரவு செலவுத் திட்டம்
## 107 மேலதிக வாக்குகளால் 2ஆம் வாசிப்பு நிறைவேற்றம்

(கொழும்பு)

2017 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு, 107 மேலதிக வாக்குகளினால் பாராளு மன்றத்தில் நேற்று மாலை நிறைவேற்றப் பட்டது. வரவு செலவுத்திட்ட இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பின போது 162 வாக்குகள் ஆதரவாகவும் 55 வாக்குகள் எதிராகவும் அளிக கப்பட்டுள்ளன.

7 உறுப்பினர்கள் வாக்கெடுப்பின் போது சபையில் பிரசன்ன மாகி யிருக்கவில்லை.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு, இலங்கை 24ஆம் பக்கம் பார்க்க....

## சைவமும் தமிழும் இணைந்ததான முதல்வரை வடக்கு பெற்றுள்ளது
## யோகேஸ்வரன் எம்.பி. பெருமிதம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாணம் இன்று சைவ சமய வாழ்வியலை மறந்து மாறிக்கொண்டு உள்ளது என தெரிவித்துள்ள தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன், ஒரு சைவ சமயத்திலுள்ள தமிழரை, சைவமும் தமிழும் இணைந்த பெருமகனை நீங்கள் இந்த மண்ணில் ஒரு மாகாண சபை முதல்வராக பெற்று இங்கு கொண்டு வந்து இருத்தி வைத்துள்ளீர்கள் எனவும் கூறியுள்ளார்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் முப்பதாவது ஆண்டு நிறைவையொட்டி ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மாநாடு மற்றும் குருபூசை ஆரம்ப நிகழ்வு நல்லூர் 23ஆம் பக்கம் பார்க்க....

## யாழ்.பல்கலை மாணவர்கள் படுகொலை
## கைதான சந்தேகநபர்களிடம் வாக்குமூலம் பெற அனுமதி
### டிசெம்பர் 02 வரை விளக்கமறியல் விதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் பொலிஸாரால் சுட்டுக கொல்லப்பட்ட வழக்கில் கைது செயயப்பட்டுள்ள சந்தேக நபர்களை பொலிஸாரின் ஒழுக்க விதிமுறை கோவையின் அடிப்படையில் வாக்குமூலம் பெறுவதற்கு யாழ்.நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் திருமதி சறோஜினி இளங்கோவன் அனுமதி வழங்கியதுடன், சந்தேக நபர்களை எதிர் 24ஆம் பக்கம் பார்க்க....

## கடும் மழையுடன் சீரற்ற காலநிலை

(கொழும்பு)

வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பு நிலை காரணமாக கடும் மழை மற்றும் பனி மூட்டத்துடனான காலநிலை இன்னும் சில தினங்களுக்கு தொடரும் என வளிமண்டலவியல் திணைக்களம தெரிவித்துள்ளது.

தெற்கு, சப்ரகமுவ, மத்திய, மேல், கிழக்கு, வடக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் கடும் இடியுடனான மழை பெய்வதற்கான அதிக சாத்தியம் உள்ளதாகவும் எச்சரிக்கை விடுக் 23ஆம் பக்கம் பார்க்க....

## கஞ்சா செடியை பயிரிட்டவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மணியம்தோட்டம் பகுதியில் சட்டவிரோதமாக கஞ்சா செடியினை பயிரிட்ட ஒருவரை யாழ்.பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

அத்துடன் அவரிடமிருந்து கஞ்சா செடியினையும் பொலிஸார் மீட்டுள்ளனர். இந்நிலையில் இச் சம்பவம் தொடர்பாக 24ஆம் பக்கம் பார்க்க....



## புதையல் தோண்டிய 10 பேர் கைது!

(முல்லைத்தீவு)

## மாணவர்களின் கல்வியை குழப்ப வடக்கில் தீய சக்திகள் முயற்சி!

**முதல்வரை வடக்கு பெற்றுள்ளது**

## யோகேஸ்வரன் எம்.பி. பெருமிதம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாணம் இன்று சைவ சமய வாழ்வியலை மறந்து மாறிக்கொண்டு உள்ளது என தெரிவித்துள்ள தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன், ஒரு சைவ சமயத்திலுள்ள தமிழுரை, சைவமும் தமிழும் இணைந்த பெருமகனை நீங்கள் இந்த மண்ணில் ஒரு மாகாண சபை முதல்வராக பெற்று இங்கு கொண்டு வந்து இருத்தி வைத்துள்ளீர்கள் எனவும் கூறியுள்ளார்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் முப்பதாவது ஆண்டு நிறைவையொட்டி ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மாநாடு மற்றும் குருபூசை ஆரம்ப நிகழ்வு நல்லூர்

23ஆம் பக்கம் பார்க்க....

## பொலிஸ்மா அதிபருக்கு ஜனாதிபதி உத்தரவு



(கொழும்பு)

நாட்டில் இனவாதம் பேசும் அனைவருக்கு எதிராகவும் தயவு தாட்சண்யம், இன, மத பேதம் பார்க்காமல் நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ்மா அதிபருக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டுள்ளார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

**யாழ்.பல்கலை மாணவர்கள் படுகொலை**

## கைதான சந்தேகநபர்களிடம் வாக்குமூலம் பெற அனுமதி

### டிசெம்பர் 02 வரை விளக்கமறியல் விதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் பொலிஸாரால் சுட்டுக கொல்லப்பட்ட வழக்கில் கைது செயயப்பட்டுள்ள சந்தேக நபர்களை பொலிஸாரின் ஒழுக்க விதிமுறை கோவையின் அடிப்படையில் வாக்குமூலம் பெறுவதற்கு யாழ்.நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் திருமதி சறோஜினி இளங்கோவன் அனுமதி வழங்கியதுடன், சந்தேக நபர்களை எதிர்

24ஆம் பக்கம் பார்க்க....

## கடும் மழையுடன் சீரற்ற காலநிலை

(கொழும்பு)

வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பு நிலை காரணமாக கடும் மழை மற்றும் பனி மூட்டத்துடனான காலநிலை இன்னும் சில தினங்களுக்கு தொடரும் என வளிமண்டலவியல் திணைக்களம தெரிவித்துள்ளது.

தெற்கு, சப்ரகமுவ, மத்திய, மேல், கிழக்கு, வடக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் கடும் இடியுடனான மழை பெய்வதற்கான அதிக சாத்தியம் உள்ளதாகவும் எச்சரிக்கை விடுக்

23ஆம் பக்கம் பார்க்க....

## கஞ்சா செடியை பயிரிட்டவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மணியம்தோட்டம் பகுதியில் சட்டவிரோதமாக கஞ்சா செடியினை பயிரிட்ட ஒருவரை யாழ்.பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

அத்துடன் அவரிடமிருந்து கஞ்சா செடியினையும் பொலிஸார் மீட்டுள்ளனர். இந்நிலையில் இச் சம்பவம் தொடர்பாக

24ஆம் பக்கம் பார்க்க....



ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மாநாடு...

செய்திகள் உள்ளே...

## புதையல் தோண்டிய 10 பேர் கைது!


(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ அத்தியட்சகர் காரியாலய பிரிவிற்கு உட்பட்ட முள்ளியவளை பொலிஸ் பகுதியில் உள்ள அடர்ந்த காட்டுப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் புதையல் தோண்டும் முயற்சியில் ஈடுபட்ட பத்து பேரை பொலிஸார் புதையல் தோண்டுவதற் குரிய உபகரணங்களுடன் கைது செய்துள்ளதாக முல்

24ஆம் பக்கம் பார்க்க....

## மாணவர்களின் கல்வியை குழப்ப வடக்கில் தீய சக்திகள் முயற்சி!

### விக்னேஸ்வரன் எச்சரிக்கை



(யாழ்ப்பாணம்)

வடமாகாண மாணவர்களின் கல்வியைக் குழப்புவதற்கு, தேவையற்ற பல தீய சக்திகள் முனைப்புடன செயற்பட்டு வருவதாக வடமாகாண சபை முதலமைச்சர் சி.வி.விக்னேஸவரன் குற்றம்சாட்டியுள்ளார்.

இவ்வாறானவர்களின் செயற்பாடுகளை

24ஆம் பக்கம் பார்க்க....

## ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளுடன் இலங்கையர் 32 பேர் இணைவு

### நீதியமைச்சர் விஜேயதாச தகவல்

(கொழும்பு)

இலங்கையில் வாழும் வசதி படைத்த நான்கு முஸ்லிம் குடும்பங்களைச் சேர்ந்த 32 பேர் ஐ.எஸ். ஐ.எஸ் ஆயுதக் குழுவில் இணைந்துள்ளதாக அரசாங்கத்தின் நீதி மற்றும் பௌதத விவகார அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

இதனால் இலங்கையில் ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பு தொடர்பிலான அச்சம் காணப்படுவதாகவும அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய நீதி அமைச்சர், வசதி படைத்த 4 குடும்பங்களைச் சேர்ந்த 32 பேர் சிரியாவுக்கு சென்று ஐ.எஸ். ஆயுதக் குழுவில் இணைந்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

24ஆம் பக்கம் பார்க்க....

## வடக்கு முதலமைச்சருக்கு எதிராக சிங்களத்தில் காணொளிப் பாடல்

(யாழ்ப்பாணம்)

வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை கடுமையாக தாக்கி சிங்கள மொழியிலான காணொளிப் பாடல் ஒன்று சமூக வலைத்தளங்களில் வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த பாடல் காணொளியில் முதலமைச்சரை போன்று வேடமணிந்த ஒருவரும், ஒரு பெண்ணும், புலி

23ஆம் பக்கம் பார்க்க....



# பாரிய சவால்களுடன் பயணம் தொடரும்!

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு



(கொழும்பு)

இலகுவான சவால்களுக்கு அல்லாமல் பலத்த சவால்களுக்கு முகம்கொடுத்து அவற்றை வெற்றிபெறச் செய்வதே இன்று தாய் நாட்டுக்காகச் செய்ய வேண்டிய பணியாகும் என தெரிவித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, வரலாற்றில் இடம்பெற்ற குறைகளை சரிசெய்து தாய் நாட்டுக்காக புதிய பயணத்தை மேற்கொள்வதற்கு நாட்டின் இரண்டு பிரதான அரசியல் கட்சிகளும் இன்று ஒன்றுபட்டுள்ள நிலையில் எத்தகைய விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டாலும் நாட்டினதும் மக்களினதும் வெற்றிக்காக அப் பயணத்தைத் தொடர்ந்தும் முன்கொண்டு செல்வதாக குறிப்பிட்டார்.

நேற்று முற்பகல் புலத்சிங்ஹல மதுராவல பிரதேசத்திற்கு விஜயமொன்றை மேற்கொண்டு பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதனைத் தெரிவித்தார்.

பிரிவினையைப் பார்க்கிலும் ஒற்றுமை முக்கியமானதாகும் என்றும் இலங்கையின் வரலாற்று அடிப்படைகளையும் சிரேஷ்ட கலாசாரம் மற்றும் கீர்த்திமிக்க வரலாற்றுப் பாரம்பரியங்களையும் பேணி அரசர்கள் காலத்திலிருந்த இலங்கையின் கீர்த்தியை மீண்டும் நாட்டில் ஏற்படுத்தி ஒரு ஐக்கிய இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

மேலும் இலகுவான சவால்களுக்கு அல்லாமல் பலத்த சவால்களுக்கு முகம்கொடுத்து அவற்றை வெற்றி பெறச் செய்வதற்காக நாம் போராடி வருகிறோம். இதற்கு நாட்டு மக்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

முதலில் ஹொரண கல்வி வலயத்தில் மதுராவல மகா வித்தியாலயத்தின் புதிய கேட்போர்கூடத்தை மாணவர்களிடம் கையளிக்கும் நிகழ்வில் ஜனாதிபதி கலந்து கொண்டார்.

பாடசாலைக்குச் சென்ற ஜனாதிபதியை மாணவர்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். ஜனாதிபதி மாணவர்களுடன் சுமுகமாகக் கலந்துரையாடி தகவல்களைக் கேட்டறிந்தார்.

புலத்சிங்ஹல மதுராவல ஹென்றி ஜயவர்த்தன ஞாபகார்த்த பொது நூலகத்தையும் ஜனாதிபதி திறந்து வைத்தார். இந்த நிகழ்வை நினைவு கூரும் வகையில் நூலக வளாகத்தில் சந்தன மரக்கன்று ஒன்றை நாட்டி வைத்த ஜனாதிபதி, புதிய நூலகத்தின் முதலாவது வாசகருக்கான உறுப்பினர் அட்டையையும் வழங்கிவைத்தார்.

இந் நிகழ்வில் அமைச்சர் மகிந்த அமரவீர, மேல்மாகாண ஆளுநர் கே.சி.லோகேஸ்வரன், முதலமைச்சர் இசுரு தேவப்பிரிய, மாகாண அமைச்சர் ரஞ்சித் சோமவனச ஆகியோரும் கலந்து கொண்டனர். (செ)

## மரண அறிவித்தல்

### விநாயகமூர்த்தி சிவகுமாரன்

(ஓய்வுநிலை ஆசிரியர்-உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி)



வீரபத்திராயன் கரணவாய் தெற்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட விநாயகமூர்த்தி சிவகுமாரன் (ஓய்வுநிலை ஆசிரியர் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி) 17.11.2016 அன்று அகாலமரணம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விநாயகமூர்த்தி-பரமேஸ்வரி ஆகியோரின் சிரேஸ்ட புதல்வனும், பாலாம்பிகையின் (உப அதிபர் -மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி), அன்புக் கணவரும் சங்கவியின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற பாலசிங்கம்-சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், சாந்தநாயகி, குகதாசன், சீதாதேவி, பாலகிஸ்ணன், சரவணபவன், கிருபானந்தன், பரமேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவநாதன், மகாகணபதி, இந்துமதி, ஜெயதேவி, முல்லை ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற ரவிசங்கர், அருணா, சத்தியேந்திரா, ஆரணி ஆகியோரின் அன்பு மாமனாரும், லாவண்யா, லக்சியா, சேபினியா, கணியன் ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20.11.2016 (ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணிக்கு கரணவாய் தெற்கு வீரபத்திரறாயணில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கிறாய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-வி.பரமேஸ்வரன் (சகோதரன்)

021 226 3658

(சி-6429)

## ஆசிச் செய்தி

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் 30ஆவது ஆண்டு நிறைவையொட்டி ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மாநாடு மற்றும் குருபூசை நிகழ்வை 18.11.2016ஆம் திகதி-21.11.2016ஆம் திகதி வரை நடாத்திக் கொண்டிருக்கும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்கு விழா சிறப்புற நடைபெற எமது மனமார்ந்த வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சோ.கேதீஸ்வர சர்மா
செயலாளர்
சர்வதேச இந்து
குருமார் ஒன்றியம்

ஆனைப்பந்தி
யாழ்ப்பாணம். (6646)

# உதவிப் பொலிஸ் பரிசோதகரின் பூதவுடலுக்கு ஜனாதிபதி அஞ்சலி



(கொழும்பு)

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமடைந்த குருணாகல் பொலிஸ் நிலையத்தின் குற்றத்தடுப்புப் பிரிவில் கடமையாற்றிய உதவிப் பொலிஸ் பரிசோதகர் ரத்ன பண்டா தசநாயக்கவின் பூதவுடலுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இறுதி அஞ்சலி செலுத்தினார்.

உதவிப் பொலிஸ் பரிசோதகர் தசநாயக்கவின் பூதவுடல் வைக்கப்பட்டிருக்கும் குருணாகல் மதுராகல இல்லத்துக்கு நேற்று பிற்பகல் சென்ற ஜனாதிபதி பூதவுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தியதுடன் குடும்ப உறுப்பினர்களுக்கு தனது அனுதாபங்களையும் தெரிவித்துக் கொண்டார். (செ-11)

# தமிழில் தேசிய கீதம் பாடமுடியும்

## எதிர்மனுவை தள்ளுபடி செய்தது நீதிமன்றம்

(கொழும்பு)

இலங்கையின் தேசிய கீதம் தமிழ் மொழியில் பாடப்பட்டதற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த அடிப்படை மனித உரிமை மீறல் மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படாமலேயே உச்சநீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின்படி தேசிய கீதம் தமிழ் மொழியிலும் பாடுவதற்கான உரிமை அளிக்கப்பட்டுள்ளதாக உச்சநீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையின் 68ஆவது சுதந்திர தின நிகழ்வின் போது அரசாங்கம் தமிழ்மொழியில் தேசிய கீதத்தை இசைப்பதற்கு எடுத்த நடவடிக்கை சட்டவிரோதமானது எனத் தெரிவித்து உச்ச நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

கம்பஹா மாவட்டத்தின் களனி பிரதேசத்தைச் சேர்ந்த ஐந்து பேரினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கை நேற்று 18 ஆம் திகதி விசாரணை செய்ய நீதிமன்றம் தீர்மானித்திருந்த நிலையில் நேற்றையதினம் மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது சட்டமா அதிபரின் வியாக்கியானத்திற்கு அமைய இந்த மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளாமலேயே நிராகரிப்பதாக உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அத்துடன் இலங்கை அரசியலமைப்பின்படி தேசிய கீதத்தை தமிழ்மொழியிலும் பாடுவதற்கான உரிமை வழங்கப்பட்டிருப்பதாக சட்டமா அதிபர் தமது வியாக்கியானத்தில் சுட்டிக்காட்டியிருப்பதாக உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது. (செ)

## விக்கி-பொதுபல சேனா மீது நடவடிக்கை

(கொழும்பு)

வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் வடக்கில் இனவாதத்தை பேசினாலும், தெற்கில் பொதுபல சேனா இனவாதத்தை தூண்டினாலும் இருவருக்கும் எதிராக சட்டநடவடிக்கை எடுக்க வேண்டுமென ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

அடுத்த வருடத்திற்கான வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான ஐந்தாம் நாள் விவாதம் நேற்றைய தினம் நாடாளுமன்றத்தில் நடைபெற்றது.

இந்த விவாதத்தில் கலந்துகொண்டு உரைநிகழ்த்திய இராஜாங்க அமைச்சரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகப் பேச்சாளருமான டிலான் பெரேராவே இதனைக் கூறியிருந்ததுடன்,

மீண்டுமொரு இனவாதத்திற்கு நாட்டில் இடமளிக்கக் கூடாது என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார். (செ-11)

## ஊக்குவிப்பு நிகழ்வு

திருமதி கமலாசனி கிருஸ்ணபிள்ளை ஞாபகார்த்த மாணவர் கல்வி, சேமிப்பு ஊக்குவிப்பு வழங்கல் நிகழ்வு இன்று காலை 10 மணிக்கு புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் கனகரத்தினம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வட மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (செ)

# போர்க்குற்ற விசாரணைக்கு அனைத்துலக அழுத்தமில்லை



## அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவிப்பு

(கொழும்பு)

**போருடன் தொடர்புடைய குற்றச்சாட்டுக்கள் குறித்த விசாரணைகளை மேற்கொள்வதற்கு அனைத்துலக சமூகம் எந்த அழுத்தங்களையும் கொடுக்கவில்லை என்று அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.**

இந்த விவகாரத்துக்கு தீர்வு காண்பதற்கு அரசாங்கம் எடுக்கும் முயற்சிகளை அனைத்துலக சமூகம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. முன்னர், தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் ஒரு மணித்தியாலத்துக்கும் மேலாக இலங்கை விவகாரம் குறித்து ஆராயப்பட்டது. ஆனால், மனித உரிமைகள் நிலைமைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதை அடுத்து, இப்போது வெறுமனே 15 நிமிடங்கள் தான் ஒதுக்கப்பட்டு விவாதிக்கப்படுகிறது. முன்னதாக, இலங்கை பொருளாதாரத் தடையை நோக்கி சென்று கொண்டிருந்தது. இப்போது, நாம் சரியான பாதையில் செல்கிறோம் என்பதை அனைத்துலக சமூகம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. போருடன் தொடர்புடைய விவகாரங்களுக்கு சொந்த திட்டங்களின் அடிப்படையில் தீர்வு காண்பதற்கு அனைத்துலக சமூகம் கால அவகாசம் அளித்துள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-10)

## மகிந்த ஆட்சியில் நடந்த அடுத்த மோசடி அம்பலம்

### பொன்சேகா பாராளுமன்றில் ஆக்ரோஷம்

(கொழும்பு)

கோடி கோடியான மோசடியில் ஈடுபட்ட மகிந்த தற்போது நல்லாட்சி தொடர்பில் குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றார். இது வேடிக்கையான விடயம் என அமைச்சர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் வரவு செலவு திட்டம் தொடர்பிலான விவாதம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இவ்விவாதத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மகிந்த ஆட்சியில் 100 பில்லியன் வரையிலான பணம் கொள்ளையிடப்பட்டது. அவை எங்கே போனது? என முடிந்தால் கூறுங்கள். அவை அனைத்தும் மக்களுடைய பணம்.

யுத்தம் செய்தோம் எனக் கூறுகின்றார் மகிந்த. ஆனால் அவர் யுத்தம் செய்தது கடன் பெற்றுக் கொண்டே. 2020 வரை அவர் யுத்தத்திற்கு பெற்றுக்கொண்ட கடன்களை செலுத்த வேண்டிய நிலை ஏற்படும். ஆனால் அவருடைய சொந்தப்பணத்தில் யுத்தம் செய்தவரைப்போல் மார் தட்டிக் கொள்கின்றார்.

தொழிலாளர்களுக்கு சேர வேண்டிய பணம் மற்றும் துறைமுகங்களில் கொள்ளையிட்டது போன்றவை சுமார் 1000 கோடிகளாகும். அவை எங்கே என கூறுங்கள். நாட்டையே கொள்ளையிட்டு ஆட்சி செய்து விட்டு இப்போது நல்லவர்களைப் போன்று வேடமிட்டுள்ளார்.

நாடு பூராகவும் வாள் ஒன்றினை வைத்துக் கொண்டு புதையல் தோண்டித்திரிந்தவர் மகிந்த.

அதேபோல் யுத்தம் நடந்த போது வெளி நாட்டுக்கு சென்று பதுங்கிக் கொண்டவர் முன்னாள் பாதுகாப்பு செயலாளர்.

அவர் இராணுவ வீரர்களுக்கு சேர வேண்டிய 450 கோடி பணத்தை கொள்ளையிட்டவர். மற்றும் நாட்டில் தற்போது புதுப்புது குழுக்கள் உருவாக காரணமும் முன்னாள் பாதுகாப்பு செயலாளரே.

அவர் மூலமாகவே நாட்டில் குழப்ப நிலைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. தனி இலாபத்துக்காக ஆட்சி நடத்திய வெட்கம் இல்லாதவர்களே கடந்த கால ஆட்சியாளர்கள்.

மேலும், மகாநாயக்க தேரருக்கு மதிப்பை கொடுக்க வேண்டும். இல்லாவிடின் நரகத்திற்கு போக வேண்டிய நிலை ஏற்படும் என மகிந்த குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஆட்சியின் போது மல்வத்து பீடத்தினை இரண்டாக பிளவு செய்வேன் என எச்சரிக்கை விடுத்ததும், அதன் மீது குண்டு போடுவேன் எனவும் தெரிவித்தது யார்? என்பதை மறந்து விட்டு மகிந்த கருத்துகளை வெளியிட்டுள்ளார்.

இவ்வாறாக நாட்டையே அதல பாதாளத்தில் தள்ளிய திருட்டு ஆட்சியை நடத்தியவர்கள், தற்போது புத்தகங்களை வெளியிட்டு, மற்றவர்களை விமர்சித்து வருகின்றனர் எனவும் சரத் பொன்சேகா ஆக்ரோஷமான பாணியில் மகிந்த தரப்பினர் மீது பல்வேறு விதமான குற்றச்சாட்டுகளை சுமத்தினார். (இ-10)

## இனிமேல் இப்படி நடக்கக்கூடாது

### ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் சீனத் தூதுவர் வலியுறுத்தல்



கொழும்பு துறைமுக நகரத் திட்டம் இடைநிறுத்தப்பட்டது போன்ற சம்பவங்கள் இனிமேல் மீண்டும் இடம்பெறாதிருப்பதை ஜனாதிபதியும் பிரதமரும் உறுதிப்படுத்த வேண்டும் என்று சீனத்தூதுவர் ஜிஷியாங் லியாங் வலியுறுத்தியுள்ளார்.

அண்மையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் சந்தித்த போது இந்த விடயத்தை தாம் தெளிவாக வலியுறுத்தியுள்ளதாக சீனத் தூதுவர் தெரிவித்தார். கடந்த புதன்கிழமை கொழும்பில் நடந்த முதலீடு மற்றும் வர்த்தகத்துக்கான சீன - இலங்கை வர்த்தக கூட்டத்தில் உரையாற்றிய போதே சீனத் தூதுவர் இவ்வாறு தெரிவித்தார்.

துறைமுக நகரத் திட்டம் இடைநிறுத்தப்பட்டதால் இரண்டு நாடுகளுக்கும் இழப்பு ஏற்பட்டது. இதுபோல மீண்டும் இடம்பெறக் கூடாது. சட்ட ரீதியான உடன்பாடுகளின் மூலம் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். ஆட்சி மாற்றம் ஏற்படும் போது பொருளாதார உடன்பாடுகள் குறித்த கொள்கைகளில் மாற்றம் ஏற்படக்கூடாது என்றும்சீனத்தூதுவர் தெரிவித்துள்ளார். (இ-10)

## மகிந்தவின் சீனப் பயணத்துக்கு தேவையான உதவிகளை வழங்குக

### பிரதமர் ரணில் உத்தரவு



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சீன விஜயத்திற்கு தேவையான உதவிகளை செய்து கொடுக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார். எதிர்வரும் 23 ஆம் திகதி முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சீனாவிற்கு விஜயம் செய்யவுள்ளார். இந்த விஜயத்திற்கு தேவையான வசதிகளை செய்து கொடுக்குமாறு பிரதமர், வெளிவிவகார அமைச்சிற்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

சீன அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ அழைப்பின் அடிப்படையில் மகிந்த சீனாவுக்கு விஜயம் செய்யவுள்ளார். எனவே மகிந்தவுக்கு தேவையான வசதிகளை செய்து கொடுக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவுறுத்தல் வழங்கியுள்ளார். எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் ஒரு வார காலம் மகிந்த சீனாவில் தங்கியிருப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

## வெளிநாட்டிலுள்ளோரும் வாக்களிக்கச் சந்தர்ப்பம்

### ஆராய விசேட குழு நியமனம்

வெளிநாட்டில் உள்ள இலங்கையர்களுக்கு எதிர்வரும் தேர்தல்களில் வாக்களிப்பதற்கு அவகாசம் வழங்குவதற்கான வாய்ப்பு குறித்து ஆராய்வதற்காக விசேட பாராளுமன்ற தெரிவுக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் தலதா அத்துகோரள தலைமையிலான இந்தக் குழுவில் 20 பேர் உள்ளடங்குகின்றனர். சபாநாயகர் கரு ஜயசூரிய நேற்று முன்தினம் இந்தக் குழுவை நியமித்தார்.



இந்தக் குழுவில் சுசில் பிரேமஜயந்த, டிலான் பெரேரா, சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே, ஹர்ஷ டி சில்வா, ரஞ்சன் ராமநாயக்க, டக்ளஸ் தேவானந்தா, காமினி லொக்குகே, மகிந்த யாப்பா அபேவர்த்தன, கெஹலிய ரம்புக்வெல, சுனில் ஹந்துன்நெத்தி, பிமல் ரத்நாயக்க, ஜே.சீ.அலவத்துவல, எஸ். சிறிதரன், எம்.ஏ.சுமந்திரன், அரவிந்தகுமார், நாலக்க பிரசாத் கொலொன்ன, சந்திம கமகே, முஜிபுர் ரஹ்மான், ஞானமுத்துநேசன் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். (இ-10)

# வலுவான நிலையில் இந்தியா; தடுமாறுகின்றது இங்கிலாந்து






விசாகப்பட்டினத்தில் நடைபெற்று வரும் 2-வது டெஸ்டில் இந்தியா முதல் இன்னிங்சில் 455 ஓட்டங்கள் குவித்து வலுவான நிலையில் உள்ளது. மேலும் இங்கிலாந்து 5 விக்கெட்டுக்களை இழந்து தடுமாறி வருகின்றது.

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 2-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி நேற்று முன்தினம் விசாகப்பட்டினத்தில் தொடங்கியது. நாணயச சுழறசியில் வென்று துடுப்பாட்டத்தை தேர்வு செய்த இந்தியா, முதல் நாள் ஆட்ட முடிவில் 4 விக்கெட் இழப்பிற்கு 317 ஓட்டங்கள் குவித்தது. புஜாரா 119 ஓட்டங்கள் குவித்து ஆட்டம் இழந்தார்.

விராட் ஹோலி 151 ஓட்டங்களுடனும், அஸ்வின் ஒரு ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். நேற்று 2-வது நாள் ஆட்டம் தொடங்கியது. தொடர்ந்து விளையாடிய விராட் ஹோலி 167 ஓட்டங்கள் எடுத்த நிலையில் மொயீன் அலி பந்தில் ஆட்டம் இழந்தார். அப்போது இந்தியாவின் ஓட்ட எண்ணிக்கை 351 ஆக இருந்தது.

அடுத்து வந்த சகா 3 ஓட்டங்களிலும், ஜடேஜா ஓட்டம் ஏதும் எடுக்காமலும் மொயீன் அலி பந்தில் எல்.பி.டபிள்யூ ஆனார்கள். இதனால் இந்தியா 363 ஓட்டங்களுக்குள் 7 விக்கெட்டுக்களை இழந்தது.

8-வது விக்கெட்டுக்கு அஸ்வின் உடன் புதுமுக வீரர் ஜயந்த் யாதவ் ஜோடி சேர்ந்தார். இருவரும் சிறப்பாக விளையாடினார்கள். இதனால் 2-வது நாள் மதிய உணவு இடைவேளை வரை மேலும் விக்கெட் இழக்காமல் பார்த்துக் கொண்டனர். இந்தியா மதிய உணவு இடைவேளை வரை 7 விக்கெட் இழப்பிற்கு 415 ஓட்டங்கள் குவித்திருந்தது. அஸ்வின் 47 ஓட்டங்களுடனும், ஜயந்த் ஜாதவ் 26 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

மதிய உணவு இடைவேளை முடிந்தபின் ஆட்டம் தொடங்கியது. மொயீன் அலி வீசிய 121-வது ஓவரின் முதல் பந்தில் பவுண்டரி அடித்து அஸ்வின் அரைசதம் அடித்தார். தொடர்ந்து விளையாடிய அவர் 58 ஓட்டங்கள் எடுத்த நிலையில் பென் ஸ்டோக்ஸ் பந்தில் ஆட்டம் இழந்தார். ஜயந்த் யாதவ் 35 ஓட்டங்களில் ஆட்டமிழத்தபோது இந்தியா 455 ஓட்டங்கள் குவித்து அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

கடைசி விக்கெட்டாக உமேஷ் யாதவ் 13 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்க, ஷமி 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார். இங்கிலாந்து அணி சார்பில் அண்டர்சன், மொயீன் அலி ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களும், ரஷித் 2 விக்கெட்டுக்களும் வீழ்த்தினார்கள்.

பின்னர் இங்கிலாந்து அணி முதல் இன்னிங்சை தொடங்கியது. ஆட்டத்தின் 3-வது ஓவரை ஷமி வீசினார். இந்த ஓவரின் 3-வது பந்தில் இங்கிலாந்து அணியின் தலைவர் குக்க்ளீன் போல்டானார். அடுத்து ஹமீத் உடன் ஜோ ரூட் ஜோடி சேர்ந்தார்.

இந்த ஜோடி ஓரளவிற்கு தாக்குப்பிடித்து விளையாடியது. அணியின் ஓட்ட எண்ணிக்கை 51 ஆக இருக்கும்போது ஹமீத் ஆட்டமிழந்தார். அதன்பின் இங்கிலாந்து அணியின் விக்கெட்டுக்கள் சரிய ஆரம்பித்தன. டக்வெட் (5), மொயீன் அலி (1) மற்றும் ஜோ ரூட் (53) ஓட்டங்களில் அடுத்தடுத்து ஆட்டம் இழந்தனர்.

இதனால் இங்கிலாந்து அணி 80 ஓட்டங்கள் எடுப்பதற்குள் ஐந்து விக்கெட்டுக்களை இழந்தது. 6-வது விக்கெட்டுக்கு பென் ஸ்டோக்ஸ் உடன் விக்கெட் காப்பாளர் பேர்ஸ்டோவ் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி இந்தியாவின் பந்து வீச்சை தாக்குப்பிடித்து விளையாடியது. ஓட்ட எண்ணிக்கை உயர்த்தவில்லை என்றாலும் விக்கெட் இழக்காமல் பார்த்துக் கொண்டனர்.

இதனால் இங்கிலாந்து அணி 2-வது நாள் ஆட்ட முடிவில் 49 ஓவர்கள் விளையாடி 103 ஓட்டங்கள் எடுப்பதற்குள் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து தத்தளித்து வருகிறது. பென் ஸ்டோக்ஸ் 12 ஓட்டங்களுடனும், பேர்ஸ்டோவ 12 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

இன்றைய ஆட்டம் தொடங்கியதும் இந்த விக்கெட்டை விரைவில் பிரித்து விட்டால் இங்கிலாந்து அணியை 200 ஓட்டங்களுக்குள் சுருட்டி விடலாம். (க)

# மும்பை இந்தியன்ஸ் அணியின் பயிற்றுவிப்பாளராக ஜெயவர்தன

ஐ.பி.எல். தொடரில் விளையாடும் மும்பை இந்தியன்ஸ் அணியின் தலைமை பயிற்சியாளராக இலங்கை அணியின் முன்னாள் தலைவர் ஜெயவர்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தியாவில் ஆண்டுதோறும் ஐ.பி.எல். தொடர் நடைபெற்று வருகிறது. 10-வது ஐ.பி.எல். தொடர் அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் தொடங்குகிறது.

ஐ.பி.எல். தொடரில் தற்போது 8 அணிகள் பங்கேற்று வருகின்றன. இதில் மும்பை அணியும் ஒன்று. இந்த அணி இரண்டு முறை சம்பியன் பட்டம் வென்றுள்ளது.

அந்த அணியின் தலைமை பயிற்சியாளராக ரிக்கி பொண்டிங் இருந்து வந்தார். தற்போது அவர் அந்த பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். அவருக்குப் பதிலாக இலங்கை அணியின் முன்னாள் தலைவர் மகேல ஜெயவர்தன நியமிக்கப்பட்டுள்ளார்.



மும்பை இந்தியன்ஸ் அணியில் ரோகித் சர்மா, ஹர்பஜன் சிங், ஹர்திக் பாண்டியா, மலிங்க, பொல்லார்ட் போன்ற முன்னணி வீரர்கள் இடம்பெற்றுள்ளனர். (க)

# சாதனையை நெருங்கும் - விராட் ஹோலி

இந்தியாவுக்கு வந்துள்ள இங்கிலாந்து கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது.

ராஜ்கோட்டில் நடந்த முதலாவது டெஸ்டில் இந்தியா போராடி சமநிலையானது.


- இந்திய அணித்தலைவர் விராட் ஹோலிக்கு இது 50ஆவது டெஸ்ட் போட்டியாகும். தனது மைல் கல் டெஸ்டில் 151 ஓட்டங்கள் நொறுக்கி யுள்ள விராட் ஹோலிக்கு இது 14ஆவது சதமாக பதிவானது. அணித் தலைவராக 7ஆவது சதமாகும்.

அத்துடன் 50 ஓட்டங்களை தாண்டி விட்டால் அதை சதமாக மாற்றும் சாதனையில் அவர் அவுஸ்திரேலிய ஜாம்பவான் டான் பிராட் மேனை வேகமாக நெருங்குகிறார்.

பிராட்மேன் 29 சதங்களும், 13 அரைச்சதங்களும் அடித்துள்ளார். 50-களை 100-ஆக மாற்றக்கூடிய வித்தையில் பிராட்மேனின் சராசரி 69.05. இந்த வகையில் மேற்கிந்தியாவின் ஜார்ஜ் ஹெட்லி 2ஆவது இடத்திலும் (10 சதம், 5 அரைச்சதம், சராசரி 66.67), விராட ஹோலி 3 ஆவது இடத்திலும் (14 சதம், 12 அரைச சதம், சராசரி 53.85) உள்ளனர். குறைந்தது 10 சதங்கள் அடித்தவர் களில் இருந்து இந்த புள்ளி விபரம் தரப்பட்டுள்ளது.

- சுனில் கவாஸ்கர், வி.வி. எஸ்.லட்சுமண், குண்டப்பா விஸ்வநாத், பாலி உம்ரிகர், கபில்தேவ் ஆகியோருக்கு பிறகு தனது 50 ஆவது டெஸ்டில் சதம் அடித்த இந் தியர் என்ற பெருமையை ஹோலி பெற்றுள்ளார்.
- 28 வயதான விராட் ஹோலி தனது கடைசி 7 சதங்களில் 6இல் (141 ரன், 169, 147, 103, 200, 211, 151*) 140 ஓட்டங்களை கடந்துள்ளார். ஆனால் முதல் 7 சதங்களில் ஒரு முறை கூட 120 ஓட்டங்களை தாண்டியதில்லை.
- விராட் ஹோலியின் தலைமையில் தொடர்ச்சியாக 19 போட்டிகளில் இந்திய அணியில் ஏதாவது ஒரு மாற்றம் செய்யப்படுகிறது. இந்த டெஸ்டில் கம்பீர், மிஸ்ரா நீக்கப்பட்டு லோகேஷ் ராகுல், ஜெயந்த் யாதவ் இடம் பிடித்தனர். (செ)

# பாகிஸ்தானை பதம் பார்த்தன நியூசிலாந்தின் வேகப் பந்துகள்



பாகிஸ்தான் கிரிக்கெட் அணி நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து 2 போட்டி கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது.

இரு அணிகள் மோதும் முதல் டெஸ்ட் போட்டி நேற்று முன்தினம் கிறிஸ்ட்சேர்ச் நகரில் தொடங்க இருந்தது. ஆனால் பலத்த மழை பெய்ததால் நாணயச்சுழற்சி கூட நடைபெறாமல் ரத்து செய்யப்பட்டது.


நேற்று 2ஆவது நாள் ஆட்டம் நடந்தது. நாணயச்சுழற்சியில் வென்ற நியூசிலாந்து அணித் தலைவர் வில்லியம்சன் பந்து வீச்சை தேர்வு செய்தனர்.

நியூசிலாந்து அணியின் வேகப் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடி யாமல் பாகிஸ்தான் விக்கெட்டுகளை இழந்து திணறியது.

அந்த அணி 55.5 ஓவரில் 133 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

அதிகபட்சமாக அணித் தலைவர் மிஸ்பா உல் ஹக் 31 ஓட்டங்கள் எடுத்தார். மற்ற வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

நியூசிலாந்து தரப்பில் வேகப் பந்து வீச்சாளர் கிராண்ட்ஹோமே 6 விக்கெட் வீழ்த்தினார். டிம் சவுத்தி, போல்ட் தலா 2 விக்கெட் கைப்பற்றினர். (க)



(கேலிச்சித்திரம்)

## ஹெரோயின் மாத்திரைகளுடன் இலங்கைக்கு வந்தவர் கைது !

ஹெரோயின் மாத்திரைகளை விழுங்கிய நிலையில் இலங்கைக்கு வந்த நபரொருவரை கட்டுநாயக்க விமானநிலைய பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர். குறித்த சந்தேக நபர் இந்தியாவின் சென்னையில் இருந்து நேற்று முன்தினம் மதியம் இலங்கை வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சந்தேகநபர் அதுருகிரிய பிரதேசத்தை சேர்ந்த 55 வயதுடையவர் என விசாரணையின் மூலம் தெரிய வந்துள்ளது. அவர் விழுங்கியிருந்த 5 ஹெரோயின் மாத்திரைகள் தற்போதைய நிலையில் அகற்றப்பட்டுள்ளதாக விமானநிலைய பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர். இதேவேளை. நீர்க்கொழும்பு வைத்தியசாலையில் சந்தேகநபர் அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

## பரிசளிப்பு விழா

பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலையின் அதிபர் ப.சந்திரபாபு தலைமையில் நடைபெறும். இந்நிகழ்விற்கு வடமாகாண சபை உறுப்பினர் எஸ்.சுகிர்தன் பிரதம விருந்தினராகவும் சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி கல்வி வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் (விஞ்ஞானம்) திருமதி றோகினி கருணேஸ்வரன், ஓய்வு நிலை முன்னாள் அதிபர் அ.சா. அரியகுமாரும் கலந்து சிறப்பிப்பர். (இ-60)


## தேவை

கம்பியூட்டர் அனுபவமுள்ள தமிழ், ஆங்கில ரைப்பிங், இன்டநெட், Email ஆர்வமுள்ளவர்கள் தேவை. சுயதொழிலாகவும் அனுமதிக்கப்படும்.

**ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பகம்**
**303, கே.கே.எஸ்.வீதி,**
**யாழ்ப்பாணம்.** (6476)


## நாம் பொறுப்பாளிகள் அல்ல

லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி தொடர்பான தற்போதைய நிலை பற்றிக் கலந்துரையாடுவதற்கென 09.11.2016 அன்று வடமாகாண பிரதம செயலாளர் தலைமையில் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டத்தில் கல்லூரி உத்தியோகத்தர்களுக்கான ஓகஸ்ட், செப்டெம்பர், ஒக்டோபர் மாதங்களுக்குரிய கொடுப்பனவினை வழங்குவதற்குரிய நிதியினை மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்திலிருந்து விடுவிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

எனினும் கல்லூரிச் செயற்பாடுகள் நவம்பர் மாதம் ஆரம்பிக்கப்படாத பட்சத்தில் வடமாகாண சபை நிர்வாக்தின் மூலம் கல்லூரிக்கு வழங்கப்படும். இத்தகைய நிதியளிப்புகள் யாவும் நிறுத்தப்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இந்தத் தீர்மானத்திற்கு அப்பால் வடமாகாணசபை அரச நிர்வாகத்தின் கீழ் பிரதம செயலாளர், வடமாகாண சுகாதார அமைச்சு, வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களம் என்பவற்றின் பெயரில் அல்லது இந் நிறுவனத் தலைவர்களைக் காரணங்காட்டி வெளியிடப்படும் எத்தகைய செய்திகளுக்கும் நாம் பொறுப்பாளிகள் அல்ல என்பதை அறியத் தருகின்றேன் என வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் சி.திருவாகரன் அறிவித்துள்ளார். (இ

## இ.போ.ச.பேருந்து மீது கல்வீசித் தாக்குதல்




பருத்தித்துறையில் இருந்து கொழும்பு நோக்கி சென்று கொண்டிருந்த இ.போ.ச. பருத்தித்துறை சாலைக்குரிய பேருந்து ஒன்று கல்வீசித் தாக்கப்பட்டதில் பின்பக்கக் கண்ணாடி சேதமடைந்ததாக சாலை முகாமையாளர் கே. கந்தசாமி தெரிவித்தார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை அதிகாலை 5.30 மணிக்கு பருத்தித்துறையில் இருந்து புறப்பட்ட பேருந்து 5.45 மணியளவில் கலிகைச் சந்திக்கும் கோவில் சந்தைக்கும் இடைப்பட்ட அணின்சிலடி என்னுமிடத்தில் தாக்குதலுக்குள்ளானது.

மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்தவர்கள் பேருந்தின் பின்பக்கமாக கற்களை வீசித் தாக்கிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர். இதனால் பின்பக்கக் கண்ணாடி சேதம்டைந்தது. பிறிதொரு பேருந்து அனுப்பப்பட்டு சேவை தொடரப்பட்டதாக சாலை முகாமையாளர் தெரிவித்தார். இது தொடர்பில் நெல்லியடிப் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. (இ-60)

## அதிகாரிகள் குறித்து விசாரணை வேண்டும்

யாழ். மாநகரசபையில் உள்ள சுகாதார தொழிலாளர்களுக்கான ஆளணிக்கு மேலதிகமாக தொழிலாளர்களை இணைத்த அதிகாரிகள் மீது விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்க செயலாளர் சி.கலகராஜ் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாநகர சபை சுகாதார தொழிலாளர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வேண்டி 9 நாட்களாக பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு வந்தனர். இதனால் யாழ்.நகர் பாரிய சுகாதார பிரச்சினைக்கு முகம்கொடுக்க வேண்டிய சூழ்நிலை உருவாகியது. தற்போது அவர்களுக்கான தீர்வுக்கு சாதகமான பதில் கிடைத்துள்ளமையால் பணிக்கு திரும்பியுள்ளனர்.

இருப்பினும் மேற்குறித்த சுகாதார பணியாளர்களை ஆளணிக்கும் அதிகமாக உள்வாங்கிய அதிகாரிகள். தாம் அரச ஊழியர்கள் என்ற வகையில் தமது பதவிகளை வகை கூறும் பொறுப்புடையவர்களாக செயற்படுத்த வேண்டும். எனவே மேலதிக தொழிலாளர்களை உள்வாங்கியமைக்கான காரணங்கள் விசாரிக்கப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)


## 31ம் நாள் நினைவஞ்சலி



பிறப்்பு 1932 . 07 . 06

இறப்பு 2016 . 10 . 20

அமரர்
திருமதி மாப்பிளை பொன்னுத்துரை ராஜேஸ்வரி



பாரினிலே பல பேர்
பசிமுகம் பார்த்த அம்மாவே
பாசமாக எங்களை பாலூட்டி
பசியாற வைத்த அம்மாவே
போனது முப்பத்தொரு நாட்கள்
என்றும் உங்கள் நினைவுடன்

கோண்டாவில் றோட்,
விவசாய வீதி,
கோப்பாய் தெற்கு. (6634)

குடும்பத்தினர்:


## இராசி பலன்

19.11.2016
(கார்த்திகை 04, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு
பஞ்சமி முற்பகல்10.05 மணிவரை
புனர்பூசம் முற்பகல் 10.53 மணிவரை
சுபநேரம் 3.09-4.39 மணிவரை
இராகுகாலம் 9.09-10.39 மணிவரை
வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது | **கிரகநிலை** சந்திராஷ்டமம் மூலம், பூராடம் | | சந் |
| செவ் | | | ராகு |
| சுக் | சனி சூரி புத | | குரு |

**மேடம்:** பெற்றோரின் ஆதரவால் பெருமை கூடும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள்.

**இடபம்:** தன்னம்பிக்கையோடு பணியாற்றி தடைகளை அகற்றுவீர்கள், வெற்றிகரமான தகவல்கள் வந்து சேரலாம், கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும்.

**மிதுனம்:** உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைப்பீர்கள், குடும்ப மகிழ்ச்சி கூடும், நாவன்மையால் நல்லபெயர் கிடைக்கும், வழிபாடு காரிய வெற்றி தரும்.

**கடகம்:** கொடுக்கல்-வாங்கல்களில் கவனம் தேவை, சிந்தனை மிகுதியான நாள், விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள்.

**சிம்மம்:** உறவினர்களைக் காண பயணமொன்று இடம்பெறலாம், கொள்கைப் பிடிப்பை கொஞ்சம் தளர்த்தும் நிலை ஏற்படலாம், சுப செலவுகள் கூடும்.

**கன்னி:** செல்வநிலை உயரும் நாள், சகோதர வழியில் இனிய சம்பவமொன்று இடம்பெறலாம், பயணங்கள் கைகூடும், கௌரவமான நாள்.

**துலாம்:** எடுத்த காரியத்தை முடிக்க நண்பர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** பித்த சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, பயணங்களால் பலனுண்டு.

**தனுசு:** தொழில் போட்டிகள் அதிகரிக்கலாம், குடும்ப பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறைகண்டு கூறலாம், திடீர் செலவுகள் ஏற்படலாம்.

**மகரம்:** நினைத்த காரியம் கைகூடும் வாய்ப்புண்டு, நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், விருந்துகளில் கலந்து கொள்ளும் சந்தர்ப்பம் கிடைக்கலாம்.

**கும்பம்:** கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாகப் பேசி சமாளிப்பீர்கள், உறவு-பகை பாராமல் ஒற்றுமையாக இருப்பீர்கள், தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள்.

**மீனம்:** பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

# நாவலர் மாநாடு; இரண்டாம் நாள் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் முப்பது ஆண்டு நிறைவையொட்டி நடைபெறும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மாநாடு மற்றும் குருபூசை நிகழ்வுகளின் இரண்டாம் நாள் நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் இடம்பெறும்.

பேரூர் ஆதீன இளைய பட்ட தவத்திரு மருதாசலம் அடிகளார் இணுவில் காயத்திரிபீட சிவஸ்ரீ தானு மகா தேவக்குருக்கள் முன்னிலையில் இடம்பெறும்.

இந்நிகழ்வுக்கு யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தலைமை தாங்குவார். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சுகாதார, சுதேச மருத்துவ, சமூக சேவைகளும் புனர்வாழ்வும் நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் மற்றும் மகளிர் விவகார அமைச்சர் வைத்திய கலாநிதி பத்மநாதன் சத்தியலிங்கம், கௌரவ விருந்தினர்களாக புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சின் செயலாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன், வடமாகாண பிரதிப் பிரதம செயலாளர் (நிதி) எஸ்.யு.சந்திரகுமாரன், சிறப்பு விருந்தினர்களாக சைவ மகாசபைத் தலைவர் சி.சோதிமூர்த்தி, இந்து சமயப் பேரவைச் செயலாளர் சி.சக்திகிரீவன், யாழ்.மாவட்ட இந்து சமய அறநெறிப்பாடசாலைகளின் ஒன்றியத் தலைவர் ந.பரமேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் "நாவலரின் சமயப்பணி" பற்றி கருத்தரங்கம் இடம்பெறும். சமய சீர்திருத்தம் பற்றி இ.குமாரவடிவேல், சமயப்பிரசாரம் பற்றி கலாநிதி ஆறு. திருமுருகன், சமயக் கல்வி பற்றி தமிழருவி எஸ்.சிவகுமார், சமய நூலாக்கம் பற்றி சைவப்புலவர் சு.செல்லத்துரை, மக்கள் தொண்டு பற்றி சிவமகாலிங்கம் ஆகியோர் கருத்து வழங்குவர். பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தலைமையில் இக்கருத்தரங்கம் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. மாலை நிகழ்வுகள் 4மணிக்கு இளைய பட்டம் பேரூர் ஆதீனம் தவத்திரு மருதாசலம் அடிகளார், இந்து குருமார் ஒன்றியத்தலைவர் சிவஸ்ரீ.ப.மனோகரக்குருக்கள் முன்னிலையில் இடம்பெறும். தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன், கௌரவ விருந்தினர்களாக அகில இலங்கை இந்துமா மன்றத் தலைவர் கந்தையா நீலகண்டன், சிறப்பு விருந்தினர்களாக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, மீள்குடியேற்றம், புனர்நிர்மாணம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் பணிப்பாளர் வே.பிறேமச்சந்திரன், அகில இலங்கை இந்துமாமன்ற உபதலைவர் விடைக்கொடிச்செல்வர் சின்னத்துரை தனபாலா, மன்னார் மாவட்ட இந்து ஆலயங்கள் ஒன்றியத் தலைவர் வைத்திய கலாநிதி மு.கதிர்காமநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

''சைவத்தமிழர்களின் கலங்கரை விளக்கம்'' நூல் வெளியீடும் இடம்பெறும். இந்நூல் அறிமுகவுரையினை கலாபூஷணம் ப.சிவானந்த சர்மா வழங்குவார்.

மேலும் "நாவலர் வழியில் இன்றைய சூழலில் முதன்மை கொடுத்து முன்னெடுக்கப் படவேண்டியது'' சமயச் சீர்திருத்தமே-அ.வாசு, சமுதாயப் பணியே-பரா.ரதீஸ், பாடநூலாக்கமே-கு.பாலசண்முகன், நீதிக்கான போராட்டமே-ந.விஜயசுந்தரம் ஆகியோரது சுழலும் சொற்போர் இடம்பெறும்.

இதில் இரா.செல்வவடிவேல் நடுவராகத் திகழவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

# சோமவார உற்சவம்

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணலிங்கேஸ்வரர் கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த சோமவார உற்சவம் நாளை மறுதினம் 21 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெறவுள்ளது.

இம் மாதத்தில் வரும் நான்கு திங்கட்கிழமைகளும் உற்சவம் இடம்பெற்று வசந்த மண்டப பூசை இடம்பெறும்.

தொடர்ந்து கண்ணலிங்கேஸ்வரப் பெருமான் உள் வீதி வலம் வரும் திருக்காட்சியும் இடம்பெறவுள்ளது. (இ-3)

# ஆவணக் காப்பகத்தின் 41-வது நிகழ்வு நாளை

(யாழ்ப்பாணம்)

சமகாலக்கலை, கட்டடக் கலை மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக் காப்பாகத்தின் 41 ஆவது நிகழ்வு நாளை 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை இல.199, கோவில் வீதி, நல்லூரில் அமைந்துள்ள சமகாலக் கலை, கட்டடக் கலை மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக் காப்பகத்தில் நடைபெறும் என இலங்கை ஆவணக் காப்பகத்தின் முகாமையாளர் விமலா வேல்தாஸ் அறிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் இலங்கை ஆவணக் காப்பகத்தின் இயக்குநரும் புகைப்படக் கலைஞருமான றொஹான் டி சொய்சா ''சப்புமல் நிறுவனம்" எனும் தலைப்பில் உரை நிகழ்த்தவுள்ளார். (இ-7)






யாழ் நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற சிறுவர்தின நிகழ்வுகளில் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறுவதையும் ஆசிரியர்கள் தின நிகழ்வின்போது ஆசிரியர்கள் ஆசிரியகீதம் இசைப்பதையும் படங்களில் காணலாம்.

# 4 இலட்சத்து 50 ஆயிரம் மீன்குஞ்சுகள் வடமராட்சி கிழக்கில் வைப்பிலிடப்பட்டன



வடமராட்சி கிழக்கில் அமைந்துள்ள மருதங்கேணி பிரதேச செயலகத்துக்குட்பட்ட மாமுனை ஏரியில் 4 இலட்சத்து 50 ஆயிரம் மீன்குஞ்சுகள் வைப்பிலிடும் நிகழ்வு கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

வடக்கு மாகாணத்தில் உள்ள நன்னீர் மீன்பிடியாளர்களின் வாழ்வாதாரத்தை ஊக்குவிக்கும் திட்டத்தின் கீழ் வடமாகாணத்தில் உள்ள பல நன்னீர் மீன்பிடி சங்கங்களின் குளங்களில் நன்னீர் மீன்குஞ்சுகள் வைப்பிலிடப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் வடமாகாண மீன்பிடி அமைச்சின் 2016 ஆம் ஆண்டுக்கான மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதியிலிருந்து ஒரு மில்லியன் பெறுமதியான 4 இலட்சத்து 50 ஆயிரம் மீன் குஞ்சுகள் கொள்வனவு செய்யப்பட்டு குறித்த ஏரியில் வைப்பிலிடப்பட்டுள்ளன.

இவ் ஏரியில் அப்பகுதியை சேர்ந்த சுமார் 120 இற்கு அதிகமான குடும்பங்கள் தமது வாழ்வாதார தொழிலாக மீன்பிடியை மேற்கொண்டுள்ளனர். தற்பொழுது நாளாந்த நிகர வருமானமாக ஆயிரத்து 500 ரூபா தொடக்கம் 2 ஆயிரம் ரூபாய் வரை பெற்று வருகின்றனர். தற்போது வைப்பிலிடப்பட்ட மீன் குஞ்சுகள் மூலம் இன்னும் ஆறுமாத காலப்பகுதியில் தமது வருமானத்தை பன்மடங்கு பெருக்க முடியுமென மீன்பிடி குடும்பங்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளன.

மருதங்கேணி பிரதேச செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில் அமைச்சர் பா.டெனிஸ்வரன், இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட பொறுப்பதிகாரி சலீபன், பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர், கிராமசேவகர்கள், பிரதேச செயலக அலுவலர்கள், மீனவ சங்கத்தின் நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் அப்பகுதி கிராமமட்ட அமைப்புக்களின் உறுப்பினர்கள் கலந்து சிறப்பித்தனர். (இ-9)

# கலை இலக்கிய அணி நடத்தும் பாரதி விழா

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி கலை இலக்கிய அணி நடத்தும் பாரதி விழா நாளை 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு சாவகச்சேரி சங்கத்தானை தமிழ்க்கோட்ட கம்பன் கல்லூரி வளாகத்தில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் தென்மராட்சி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் நா.கந்ததாசன் தலைமையுரையினையும் "என்றும் இளையவன் எங்கள் பாரதி'' எனும் தலைப்பில் எழிலுரையினை கலாநிதி எஸ்.ஜெபநேசனும் வழங்கவுள்ளனர்.

மேலும் படிப்போர் மனதில் பாரதி ஆழப்பதிவது புதுமை வாதியாகவே என வே.உதயகுமார், கவிஞனாகவே! அ.வாசுதேவா, ஆன்மீகவாதியாகவே! சு.சுதர்சன், நாட்டுப்பற்றாளனாகவே! பா.விக்னேஸ்வன், பெண்ணியவாதியாகவே! ச.மார்க்கண்டு ஆகியோரது விவாத அரங்கு இடம்பெறும்.

இதன் நடுவராக பேராதனைப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி ஸ்ரீ.பிரசாந்தன் திகழ்வார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

# சத்தியசாயி சேவா நிலையத்தின் மகளிர் தின நிகழ்வுகள் இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீசத்தியசாயி சேவா நிலையத்தின் மகளிர் தின நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு திருநெல்வேலி சேர்.பொன் இராமநாதன் வீதியில் அமைந்துள்ள பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் "பெண்ணின் பெருமை'' பற்றி யாழ்.பல்கலைக்கழக ஆங்கிலத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சண்முகயோகினி ரவீந்திரன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். (இ-3)

# சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உரும்பிராய் மேற்கைச் சேர்ந்த திருமதி நித்திலா ஜேசு சுதாகரன் அகில இலங்கை சமாதான நீதவானாக யாழ்.மாவட்ட நீதிமன்ற நீதிபதி ஜெ.கஜநிதிபாலன் முன்னிலையில் அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் ஆரம்பக் கல்வியினை உரும்பிராய் சந்திரோதயம் பாடசாலையிலும் உயர் கல்வியினை யாழ்.இராமநாதன் மகளிர் கல்லூரியிலும் கற்றதோடு பிரித்தானியக் கம்பனியான ஏ.பவர் அன்ட் கம்பனியில் உயர் பதவியையும் யூனியன் அஷ்யூரன்ஸ் யாழ்ப்பாணக் கிளை பிராந்திய முகாமையாளராகவும் சுவிட்சர்லாந்து கம்பனியான ஜோன் பின்லே கம்பனியின் யாழ்ப்பாணக் கிளை முகாமையாளராகவும் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

# இலங்கையின் தென்கோடிப் பிரதேச அபிவிருத்திக்கான மற்றுமோர் 'சீன- இலங்கை' திட்டம்

(கொழும்பு)

பொருளாதார வலயம், சர்வதேச துறைமுகம் மற்றும் விமான நிலையம் போன்றவற்றை உள்ளடக்குவதற்கு அமையும் மற்றுமொரு திட்டம் பற்றி அம்பாந்தோட்டையில் நடைபெற்ற 'UNP' பா.உறுப்பினர்களுக்கான மாநாட்டில் வைத்து சீனத் தூதுவர் சுருக்க-விளக்கமான முறையில் தெளிவுபடுத்தியிருந்தார்.

இலங்கையின் தென் பகுதி அபிவிருத்திக்கு விரிவான மீள்- எழுச்சித் திட்டமொன்றினை சீனாவின் உதவியுடன் நடைமுறைப்படுத்துவதற்கு அரசு முயற்சித்து வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் சீன வர்த்தக குழுவுடன் ஈபொது மக்கள்- தனியார் இணைப் பங்களிப்புடனான 'PPP' இணக்கப்பாடொன்றினை இலங்கை ஏற்படுத்திக் கொள்ள விருப்பதாக வெளிவிவகார துணையமைச்சர் ஹர்ச டி சில்வா கூறியிருந்தார்.

சீனாவுடனான முன்னைய ஒப்பந்த திட்டங்களுக்கு பயன்படுத்தப்படாத உட்கட்டமைப்பு வசதிகள் காரணமாக பெருமளவில் தேங்கிக் கிடக்கும் பாரிய கடன் பெறுமதிகளை எளிதாக்கும் பொருட்டு எதிர்பார்க்கப்படும் 1 பில்லியன் அமெரிக்க டொலர் வட்டியில்லாகடன்தொகைகளிலேயே இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவது தங்கியிருக்கின்றது.

கடந்த வாரம் அம்பாந்தோட்டை ஷங்கிரி ஹோட்டலில் மேற்படி இடம்பெற்றிருந்த 'UNP' பா.உறுப்பினர்களுக்கான மாநாட்டில் பேசியசீனத்தூதுவர்ஷியாங் லியாங், சீன அரசாங்கம் இலங்கையின் தென்மாகாண அபிவிருத்திக்கு மீள் உயிரூட்டம் அளிக்கும் இத்தகைய திட்டங்களைக் கொண்டிருப்பதாகவும் கூறியிருந்தார்.

மாநாட்டில் கலந்து கொண்ட 'UNP' பா.உறுப்பினர் டெய்லி நியூஸ் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தேசிய ஒருமைப்பாட்டு அரசாங்கத்தின் அபிவிருத்தி சம்பந்தமான திட்டங்களுக்கு உண்மையான அர்ப்பணிப்புடன் ஆதரவளிக்கும் நோக்கங்களை சீன அரசாங்கம் கொண்டிருப்ப தாக கூறியிருந்தார்.

இத்திட்டத்திற்கான முதற்கட்ட வேலைகள் 2017 ஜனவரியில் ஆரம்பிக்குமென்பதுடன் இதற்கென '|LNG' மின் உற்பத்திநிர்மாணிப்பு மற்றும் எரிபொருள் சுத்திகரிப்பு நிலையம், சீமெந்து உற்பத்தி தொழிற்சாலையுடன் கப்பல் கட்டுவதற்கும் திருத்துவதற்குமான வசதிகள் போன்றவற்றை மொத்தம் 8 பில்லியன் அமெரிக்க டொலர் செலவில் நிறுவவுள்ளதாகவும் அமைச்சர் ஹர்ச டி சில்வா கூறுகிறார்.

ஆரம்பமாக தற்போது வெறுமையாயிருக்கும் துறை முகத்தின் 15 சதுர கி.மீ. பிரதேசப் பகுதி இத்திட்டத்திற்கு பயன்படுத்தப்படவிருப்பதுடன் வெறுமையாயிருக்கும் மாத்தளை விமான நிலையம், மகிந்த ராஜபக்ஷ துறைமுகம் போன்றவற்றுக்கு மீள் உயிரூட்டமளிக்கப்படவிருப்பதாகவும் அமைச்சர் மேலும் கூறுகிறார்.

50கி.மீ.பிரதேசத்தை உள்ளடக்கும் இந்த தென்பகுதி அபிவிருத்தித்திட்டம் 3 கட்டங்களாக நிறைவேற்றப்படுமென்பதுடன் இத்திட்ட நிறைவேற்றத்திற்கான சீன அதிகாரிகளுடன் இணையாக செயற்பட ஏற்பாடாகியிருக்கும் இலங்கை அரசின் முக்கிய அமைச்சுக்களுக்கான அபிவிருத்திமூலோபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தகங்கள் அமைச்சு, தெற்கு அபிவிருத்தி மற்றும் வெளிவிவகார அமைச்சு உள்ளடங்கும்.

மேலும் பல பிரதான அமைச்சுகள் செயற்படுவதால் இத்திட்டத்தின் உயர் முக்கியத்துவம் எவருக்கும் புரியுமென இதுமட்டில் தெளிவுள்ள வட்டாரங்கள் கூறுகின்றன.

## அமரர் நடராஜா இரவிராஜ் பத்தாம் ஆண்டு நினைவு நிகழ்வு-2016



**சிலை திறப்பு**

காலம் : 20-11-2016 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : பி.ப 3.00 மணி
இடம் : தென்மராட்சி பிரதேச செயலகம் முன்பாக

**நினைவுக் கூட்டம்**

காலம் : 20-11-2016 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : பி.ப 3.45 மணி
இடம் : பொன் விழா மண்டபம், நகர சபை , சாவகச்சேரி

**நிகழ்ச்சி நிரல்**
**சிலை திறப்பு விழா**

- ஈகச்சுடரேற்றல்
- சர்வமத பிரார்த்தனை
- சிலை திறந்து வைத்தலும் நினைவுக்கல் திரைநீக்கமும்
- மலர் மாலை அணிவித்தல்
- கவிதாஞ்சலி
- திருவுருவப்பட ஊர்வலம்

### பத்தாம் ஆண்டு நினைவுக்கூட்டம்

வரவேற்புரை :- உயர்திரு .க. அருந்தவபாலன் அவர்கள் (ஓய்வுநிலை அதிபர் )

தலைமையுரை :- கௌரவ. கேசவன் சயந்தன் அவர்கள் (வடக்கு மாகாணசபை உறுப்பினர்)

உறுதியுரை :- "மாமனிதருக்கு மதிப்பளிப்பது என்பது அவரது இலட்சியத்தை அடைய உழைப்பதே"
கௌரவ . மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரன் அவர்கள் (யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்)

நினைவுரைகள் :-கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன அவர்கள் (முன்னாள் உறுப்பினர் தெஹிவளை -கல்கிஸ்ஸ மாநகர சபை தலைவர் , லங்கா நவசமசமாஜ கட்சி)
அல்ஹாஜ் நிஸாம் காரியப்பர் அவர்கள் (முன்னாள் மேஜர் , மாநகர சபை,கல்முனை துணைப் பொதுச்செயலாளர்,ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்)
உயர்திரு. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கள் ( முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்,செயலாளர், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் )
உயர்திரு.சுரேஷ் பிரேமச்சந்திரன் அவர்கள் ( முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்,தலைவர் , ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி )
உயர்திரு.வீ. ஆனந்தசங்கரி அவர்கள் ( முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்,தலைவர், தமிழர் விடுதலைக் கூட்டணி )
கௌரவ.சின்னத்துரை தவராசா அவர்கள் (எதிர்க்கட்சித் தலைவர் ,வடக்கு மாகாணசபை )
கௌரவ. தர்மலிங்கம் சித்தார்த்தன் அவர்கள் (யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர், தலைவர், மக்கள் விடுதலைக் கழகம்)
கௌரவ.செல்வம் அடைக்கநாதன் அவர்கள் (வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர், தலைவர், தமிழீழ விடுதலை இயக்கம்)
கௌரவ. மாவை சேனாதிராசா அவர்கள் (யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் , தலைவர் இலங்கைத் தமிழரசுக் கட்சி )
கௌரவ. விஜயகலா மகேஸ்வரன். அவர்கள் (சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் )
கௌரவ. மனோ கணேசன் அவர்கள் (தேசிய் சகவாழ்வு மற்றும் கலந்துரையாடல் அரசகரும மொழிகள் அமைச்சர் )
கௌரவ .இராஜித சேனாரத்ன அவர்கள் ( சுகாதார போசாக்கு மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சர்)
கௌரவ.நீதியரசர்க.வி.விக்கினேஸ்வரன் அவர்கள் (வடக்கு மாகாண முதலமைச்சர்)
கௌரவ.இரா சம்பந்தன் அவர்கள் (எதிர்க்கட்சித் தலைவா , இலங்கைப் பாராளுமன்றம், தலைவர் , தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)

ஏற்புரை :-திருமதி மங்களேஸ்வரி நடராஜா அவர்கள் (அமரர் இரவிராஜ் அவர்களின் அன்னை )

நன்றியுரை :- உயர்திரு. கந்தையா இராஜதுரை அவர்கள் (ஓய்வுநிலை வங்கி முகாமையாளர்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

(6641) நினைவு நிகழ்வு ஒழுங்கமைப்பு குழு.


## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982இந்து<br>நட்சத்திரம்:பூரட்டாதி<br>கி.பா:32செவ் 7 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:பட்டதாரி/ தனியார் தொழில்<br>தொ.இ: B/6473 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம<br>கி.பா: 21செவ் 8 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:O/L/சொந்த தொழில்<br>தொ.இ: G/2453 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்A/L/முகாமையாளர்<br>தொ.இ: B/6478 | பிறப்பு: 1987RC<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 63சூரிசெவ் 7 இல்<br>உயரம்: 4'11"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/2472 |
| பிறப்பு: 1969 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்A/L/தனியார தொழில்<br>தொ.இ: B/6475 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 22செவ் 1 இல<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>தொ.இ: G/2485 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 10<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:Diploma/ அரசதொழில்<br>தொ.இ: B/6477 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 32செவ் 11 இல<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்A/L/அரச வங்கியாளர<br>தொ.இ: G/2495 |

**கல்யாண மாலை**
**(சர்வதேச திருமண சேவை)**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai. jaffna@ gmail.com
**குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.**
**ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்ப தனையும் அறியத்தருகின்றோம்.**

**இனிவரும் நாட்களில் கல்யாணமாலை ஞாயிற்றுக்கிழமைகளில் விடுமுறை தினமாகும்.**

# வாள்வெட்டில் ஈடுபடும் ஆவாகுழு அரசாங்கத்தின் ஒட்டுக் குழுவே!

## சிவமோகன் எம்.பி.குற்றச்சாட்டு

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் தோற்றம் பெற்ற ஆவா குழு என்பது அரசாங்கத்தின் ஒட்டுக் குழுவே என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

இவர்கள் ஆவா குழு என்ற பெயரில் மாத்திரமன்றி முல்லைத் தீவு மாவட்டத்தில் இரும்புக்குழு என்ற பெயரிலும் கொள்ளையில் ஈடுபட்டதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் சிவப்பிரகாசம் சிவமோகன் சாடியுள்ளார்.

ஆவா குழு சந்தேக நபர்கள் என்ற போர்வையில் வடக்கில் தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்படுகின்றமை குறித்து ஊடகமொன்றுக்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணலிலேயே நாடாளுமன்ற உறுப்பினர். டாக்டர் சிவப்பிரகாசம் சிவமோகன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் குறித்து அவர்




மேலும் தெரிவிக்கையில்,

ஆவா குழு என்ற விடயத்தில் நாங்கள் பார்க்க வேண்டிய விடயம் என்னவெனில், இதில் இருப்பவர்கள் தமிழர்களாக இருக்கலாம். ஆனால் நிச்சயமாக இவர்கள் இராணுவத்தின் ஒட்டுக்குழுக்கள் தான்.

இதனை ஆதாரமாக சொல்லலாம். ஆவா குழுவைச் சேர்ந்தவர்கள் மோட்டார் சைக்கிள்களில் செல்வதுடன் இவர்கள் வாள்வெட்டுச் சம்பவங்களில் ஈடுபடுகின்றார்கள். இவ்வாறு வாள்வெட்டில் ஈடு படுவர்கள் தப்பிச் செல்லும்போது பல தடைமுகாம்களைத் தாண் டியே செல்ல வேண்டும்.

இவர்கள் செல்லும்போது தாம் வைத்திருக்கும் அடையாள அட்டைகளைக் காட்டியே தப்பிச் செல்கின்றனர். இது தான் முன்னரும் நடைபெற்றது. தற்போதும் நடைபெறுகின்றது.

ஆனால் ஆவா குழு உறுப்பினர்கள் என்ற சந்தேகத்தில் தமிழ் இளைஞர்களைக் கைதுசெய்து அவர்களைப் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைத்தி ருப்பதானது பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறு கைதுசெய்யப்படுபவர்கள் நீதிமன்றத்தில் நிறுத்தப்படும் போது அவர்கள் மீது பயங்கரவாத குற்றச்சாட்டு சுமத்தப்படுகின்றது. பின்னர் இவர்கள் விசாரணை என்ற போர்வையில் தடுத்து வைக்கப்பட்டு ஆவா குழு உறுப்பினர்கள் என்பதை ஏற்றுக்கொள்ளுங்கள். உங்களை நாங்கள் விடுதலை செய்வோம் என்று தெரிவித்து பலவந்தமாக கையெழுத்து பெறுகின்றனர்.

இதுவரை தமிழ் மக்களை, தமிழ் இளைஞர்களைக் கைதுசெய்து எவ்வாறு பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைத்திருக்கின்றார்களோ அதேபோன்று அவர்கள் இந்த அப்பாவி இளைஞர்களைச் சிக்க வைக்கின்றனர்.

பின்னர் இதனை ஒரு தமிழ் மக்கள் சார்ந்த, விடுதலைப் புலிகள் சார்ந்த விடயமாக சித்திரிக்க முயல்கின்றனர். நிச்சயமாக இது அவ்வாறானதொரு விடயமல்ல. பயங்கரவாத தடைச்சட்டத்தை விடுத்து சாதாரண சட்டத்தின் கீழ் இந்த ஆவா குழு சந்தேகநபர்களைக் கொண்டு சென்று பகிரங்கமாக நீதிமன்றத்தில் வைத்து விசாரிப்பார்களேயானால் அந்த விடயங்களில் உண்மை இருந்தால் அதனை நாங்கள் ஏற்றுக்கொள்வோம் என தெரிவித்தார். (2-281)

# வாழ்வாதார உதவிகள் உரிய முறையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு பகிரப்படவில்லை

## புதுக்குடியிருப்பில் நேற்று கவனயீர்ப்பு







முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்குட்பட்ட பாதிக்கப்பட்ட மக்கள் சிலர் தமக்கு இதுவரை வாழ்வாதார உதவிகள் கிடைக்கவில்லையென கோரி ஆர்ப்பாட்டத்திலீடுபட்டனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திற்கு முன்பாக நேற்றுக்காலை 9.30 மணியளவில்கூடிய மக்கள் வாழ்வாதாரங்கள் வழங்கப்படும் போது ஒரு சிலருக்கே தொடர்ச்சியாக வழங்கப்படுவதாகவும் இத னால் தாம் பாதிக்கப்படுவதாகவும் குற்றம்சாட்டையொன்றை முன் வைத்தனர்.

குறிப்பாக வெளிநாட்டிலிருந்து வருகின்ற நிதிகள் பகிர்ந்தளிக்கும் அமைப்புக்கள் பல தமது விருப்புக்கேற்றவாறு வாழ்வாதாரத்தை வழங்குவதாகவும் இதனால் தாம் பாதிக்கப்படுவதாகவும் இதுபோன்ற ஒரு நிகழ்வு அண்மையில் இடம் பெற்றதாகவும் லண்டன் சிவன் கோவில் அமைப்பினால் கைவேலியில் இயங்கும் பெண்கள் அமைப்பினூடாக வாழ்வாதார உதவி வழங்கும் நிகழ்வில் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இதில் பயனாளிகளும் உரியமுறையில் தெரிவு செய்யப்படவில்லை. எனவே தமக்கு உரிய நீதி தேவையென கோரியே கவனயீர்ப்புப் போராட்டத்திலீடுபட்டனர். (2-281)

# மாகாணம், தேசியம் ஆகிய மட்டங்களில் வெற்றியீட்டிய மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு இன்று

(மல்லாவி)

வடக்கு மாகாண கல்வி திணைக்களத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு இடையே நடத்தப்பட்ட கணித ஒலிம்பியாட்,கணித விநாடி வினா,கணித நாடகம் ஆகிய போட்டிகளில் மாகாணம்,தேசியம் ஆகிய மட்டங்களில் வெற்றியீட்டிய மாணவர்கள்,பாடசாலைகள் ஆகியோரை கௌரவிக்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு கல்வியங்காடு சட்டநாதர் வீதியிலுள்ள இளங்கலைஞர் மண்டபத்தில் மாகாண கல்வி திணைக்களத்தினால் நடத்தப்படவுள்ளதாக முல்லைத்தீவு கல்வி வலயத்தில் இருந்து வெற்றியீட்டிய மாணவர்களையும் மற்றும் பாடசாலைகளையும் கௌரவிக்கும் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு முல்லைத்தீவு கல்வி வலயத்தின் கல்வி நிர்வாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.என். ஆதவன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய,

**மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி**

இ.ரதுசா–கணித ஒலிம்பியாட் – தேசியம், கணித விநாடிவினா – தேசியம், கணித விநாடி வினா குழு– மாகாணம்.

சி.டிலக்சிகா –கணித விநாடி வினா குழு– மாகாண மட்டம்.

**மு/ விஸ்வமடு மகா வித்தி**

ப.சேதுராகவன் –கணிதம் ஒலிம்பியாட்–தேசியம், கணிதவிநாடிவினா– தேசியம், ற. அட்சயன் –கணித ஒலிம்பியாட்– தேசியம், கணித விநாடி வினா குழு– மாகணம், கி.லதுசன்– கணித ஒலிம்பியாட்–தேசியம், பா.அபிசிஹறா –கணித விநாடி வினா குழு– மாகாணம்.

**மு/கலைமகள் வித்தி**

சி.சாரங்கன் –கணித விநாடி வினா குழு– மாகாணம், கணித ஒலிம்பியாட்– தேசியம், ஜெ.கஜிபனா –கணித விநாடி வினா குழு– மாகாணம், கணித ஒலிம்பியாட்– தேசியம்),

**மு/ கோம்பாவில் விக்னேஸ்வரா வித்தி**

து.புதுசோத்மன்–கணித விநாடி வினா குழு– மாகாணம், கணித ஒலிம்பியாட்–தேசியம்.

**மு/தண்ணீரூற்று இ.த.க.பாடசாலை**

அதர்விசன் –கணித விநாடி வினா குழு– மாகாணம், கணித ஒலிம்பியாட்– தேசியம்.

**மு/ வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயம்**

க.ஆர்த்திகன்– கணித விநாடி வினா குழு–மாகாணம்.

**மு/முல்லைத்தீவு மகா வித்தி**

கணித நாடகம்– மாகாண மட்டம் சிரேஷ்ட பிரிவு (முதலாமிடம்)

**மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி**

கணித நாடகம் மாகாண மட்டம் கனிஷ்ட பிரிவு (இரண்டாமிடம்) என அவர் அறிவித்துள்ளார். (2-15)

# படுகொலை செய்யப்பட்ட விவசாயக் கல்லூரி மாணவர்களின் நினைவுநாள் நேற்று அனுஷ்டிப்பு

வவுனியா விவசாய கல்லூரி மாணவர்கள் ஐவர் படுகொலை செய்யப்பட்ட 10 ஆவது ஆண்டு நினைவு நாள் நேற்று கல்லூரியில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.


வவுனியா விவசாய கல்லூரி மாணவர்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற அஞ்சலி நிகழ்வைத் தொடர்ந்து படுகொலை செய்யப்பட்ட 5 மாணவர்களின் நினைவாக இரத்ததானம், தாக சாந்தி வழங்கல் ஆகிய நிகழ்வும் இடம்பெற்றன.

கடந்த 2006 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18 ஆம் திகதி வவுனியா, விவசாயக் கல்லூரிக்கு அண்மையில் இராணுவத்தினர் மீது கிளைமோர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதனையடுத்து விவசாயக் கல்லூரியில் நின்ற மாணவர்களை விரட்டியும் அழைத்தும் இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கி பிரயோகத்தில் ஐந்து மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டதுடன் 10 மாணவ, மாணவிகள் காயமடைந்தனர்.

குறித்த சம்பவத்தில் களுவாஞ்சிக்குடியைச் சேர்ந்த இராமசந்திரன் அச்சுதன் (வயது-25), சுந்தரலிங்கம் ஐங்கரன் (வயது-21), திருமலையைச் சேர்ந்த சித்திரவேல் கோபிநாத் (வயது-22), மட்டக்களப்பு ஏறாவூரைச் சேர்ந்த சித்திக் அசான் ரிஹறான் மொகமட் (வயது-22), வவுனியாவைச் சேர்ந்த திருநாவுக்கரசு சிந்துஜன் (வயது-21) ஆகிய மாணவர்களே படுகொலை செய்யப்பட்டனர்.

இம் மரணம் தொடர்பில் உரிய விசாரணைகள் இடம்பெற்று அவர்களது மரணத்திற்கு நீதி கிடைக்காத நிலையில் 10 ஆவது ஆண்டு நினைவு நாள் உணர்வெழுச்சியுடன் கல்லூரியின் பழைய மற்றும் தற்போது கல்வி பயிலும் மாணவர்களின் கண்ணீருக்கு மத்தியில் நடைபெற்றன. (2-250)



வவுனியா விவசாயக் கல்லூரி மாணவர்கள் ஐவர் படுகொலை செய்யப்பட்ட 10 ஆவது ஆண்டு நினைவுநாள் நேற்று கல்லூரியில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டதைப் படங்களில் காணலாம். (படங்கள்: குருமன்காடு செய்தியாளர்)

## 44 இலட்சத்து 59 ஆயிரம் ரூபா நிதி

# ஆயிரத்து 568 குடும்பங்களுக்கு மாதாந்தம் சமுர்த்தி நிவாரண உதவித் தொகையாக பகிர்ந்தளிப்பு

### துணுக்காய் பிரதேச செயலாளர் தெரிவிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்திற்குட்பட்ட துணுக்காய் பிரதேச செயலக பிரிவில் இடப்பெயர்வின் பின்னரான மீள் குடியேற்றத்தின் பின்னரான மீள் குடியேற்றத்தின் போது 20 கிராம அலுவலர் பிரிவுகளிலும் 3 ஆயிரத்து 748 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 790 அங்கத்தவர்கள் வாழ்ந்து வரும் நிலையில் மிகவும் வறுமை நிலைக்குட்பட்ட குடும்பங்களில் இருந்து முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட ஆயிரத்து 568 குடும்பங்களுக்கு மாதாந்தம் 44 இலட்சத்து 59 ஆயிரம் ரூபா நிதி சமுர்த்தி நிவாரண உதவித் தொகையாக பகிர்ந்தளிக்கப்பட்டு வருவதாக துணுக்காய் பிரதேச செயலாளர் இ.ரமேஸ் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

சமூக வலுவூட்டல்கள் மற்றும் சமூக நலனோம்பு அமைச்சினால் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களுக்கு சமுர்த்தி நிவாரண உதவிக் கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றது

இதற்கமைய துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவில் 364 குடும்பங்களுக்கு தலா ஆயிரத்து 500 ரூபா படி 5 இலட்சத்து 466 ரூபா உதவித் தொகை மாதாந்தம் பகிர்ந்தளிக்கப்பட்டு வருகிறது.

301 குடும்பங்களுக்குதலா 2 ஆயிரத்து 500 ரூபா படி 7 இலட்சத்து 52 ஆயிரத்து 200 ரூபா உதவித் தொகை மாதாந்தம் பகிர்ந்தளிக்கப்பட்டு வருகின்றது.

இதேபோல் 903 குடும்பங்களுக்கு தலா 3 ஆயிரத்து 500 ரூபா வீதம் 31 இலட்சத்து 60 ஆயிரத்து 500 ரூபா உதவித் தொகை மாதாந்தம் பகிர்ந்தளிக்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை மேலுமொரு தொகுதி சமுர்த்தி நிவாரணம் பெறக் கூடியவர்களின் விபரப்பட்டியல் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அனுமதி கிடைக்கும் பட்சத்தில் அக் குடும்பங்களுக்குச் சமுர்த்தி நிவாரண உதவிக் கொடுப்பனவு வழங்கப்படுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

## பாடசாலைக்கு புதிய நூலக கட்டடம்



(பரந்தன்)

கிளி/ கிளிநொச்சி கனகாம்பிகை அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்கு புதிய நூலக கட்டடம் அமைக்கப்பட்டு மாணவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வு கடந்த 16 ஆம் திகதி இடம்பெற்றது.

செலிங்கோ காப்புறுதி நிறுவனத்தின் ஏழு இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டிலும் கிளிநொச்சி படையினரின் மனித வலுவையும் பயன்படுத்தி அமைக்கப்பட்ட நூலக கட்டடமே மாணவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் கிளிநொச்சி 57 படைப்பிரிப்பின் பொறுப்பதிகாரி பிரிகேடியர் அநுர சுபசிங்க மற்றும் கிளிநொச்சி வலயக் கல்வித் திணைக்களத்தின் முறைசார் கல்விப் பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாளர் த.பேரின்பராசா, பாடசாலையின் அதிபர் மற்றும் மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (2-312)

## நீர் சுத்திகரிப்பு இயந்திரத் தொகுதிகள் அமைச்சரினால் பாடசாலைகளுக்கு வழங்கல்



(குருமன்காடு)

செட்டிகுளம் பிரதேச பாடசாலைகளுக்கு வடக்கு மாகாண அமைச்சர் ப.சத்தியலிங்கத்தினால் நீர் சுத்திகரிப்பு இயந்திரத்தொகுதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

வவுனியா, வீரபுரம், அரசடிக்குளம் அ.த.க பாடசாலை, பெரியபுளியாலங்குளம், கக்காரங்குளம் இளங்கோ வித்தியாலயம், அருவித் தோட்டம் சிவானந்தா வித்தியாலயம் மற்றும் முதலியார்குளம் றோ.க.பாடசாலை என்பவற்றிற்கு வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத்தின் 2016 ஆம் ஆண்டுக்கான நிதியில் இருந்து நீர் சுத்திகரிப்பு இயந்திரத் தொகுதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

குறித்த பாடசாலைகளுக்கு அண்மையில் விஜயம் செய்த சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் அவற்றினை சம்பிரதாயபூர்வமாக மாணவர்களிடம் கையளித்தார்.

இதன்போது அமைச்சரின் இணைப்பாளர் பாலச்சந்திரன் சிந்துஜன், மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். சிறுநீரக பாதிப்பின் தாக்கம் அதிகம் கொண்ட பிரதேசம் எனும் வகையில் "சிறுவயதிலிருந்தே மாணவர்கள் சுத்தமான குடிநீரை பருகுதலை ஊக்குவித்தல்" என்னும் அமைச்சரின் விசேடசெயற்றிட்டத்தின் ஓர் அங்கமாக அமைச்சரின் நிதியில் இருந்து குறித்த நீர் சுத்தி கரிப்பு இயந்திரத் தொகுதிகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (2-250)

# கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் நான்கு பேர் கைதாகினர்

### கைக்குண்டு, கத்திகள், நகைகள் மீட்பு






(குருமன்காடு)

வடக்கு மாகாணத்தில் பல்வேறு கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களிடம் இருந்து ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

வவுனியா மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு மற்றும் சட்ட அதிகாரத்தை பேணும் பிரிவு என்பன இணைந்து மேற்கொண்ட விசாரணை நடவடிக்கைகளையடுத்து குறித்த கைது நேற்று நடைபெற்றது.

வவுனியா, மன்னார் மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் ஆலோசனையில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.ஆர்.சிசிரகுமாரின் வழிநடத்தலில் சட்ட அதிகாரத்தை பேணும் பிரிவு பொறுப்பதிகாரி உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஆர்.எம். எஸ். கே.ரட்நாயக்கா மற்றும் வவுனியா மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி பிரசாத் ஆகியோரின் தலைமையிலான பொலிஸ் குழுவே குறித்த சந்தேக நபர்களை கைது செய்துள்ளனர். வவுனியாவின் நெடுங்கேணி, வீரபுரம், யாழ்.இளவாலை, கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் இருந்து குறித்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் இவர்களுடன் தொடர்புடைய மேலும் பலரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் இருந்து கைக்குண்டு 02, கத்திகள் 04, தங்க நகைகள் 28 பவுண், முகத்தை மூடி மறைத்து கட்டும் கறுப்பு துணிகள், ஆட்டோ ஒன்று, மோட்டார் சைக்கிள் ஒன்று என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர்கள் மாங்குளம், சிலாவத்துறை, ஒட்டுசுட்டான், அடம்பன், மன்னார், மாங்குளம், கனகராயன்குளம், புளியங்குளம், செட்டிகுளம், வவுனியா ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் எனவும், கடந்த 2013 ஆம் ஆண்டில் இருந்து இந்தக் கும்பல் செயற்பட்டு வந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, குறித்த கைது தொடர்பில் சந்தேக நபர்களின் உறவினர்கள் வவுனியா மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்ததையடுத்து மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள் வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டனர். (2-250)










1991 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாகமானது நேற்றைய தினம் தனது 25ஆண்டு நிறைவையொட்டி நடைபவனி ஒன்றை முன்னெடுத்திருந்தது.இந்த நடைபவனியானது, வவுனியா புகையிரத நிலையத்திற்கு முன்பாக காலை 8 மணிக்கு ஆரம்பமாகி, தொடர்ந்து சிந்தாமணிப் பிள்ளையார் கோவிலூடாக கண்டி வீதி வழியாக நகர்ந்து ஹொரவப்பொத்தான வீதியை சென்று அதனைத் தொடர்ந்து மாவட்ட செயலகம் ஊடாக மன்னார் வீதி வழியாக சென்று பூங்கா வீதியிலிருக்கும் பல்கலைக்கழக வளாகத்தை வந்தடைந்தது. இதில் கல்வியாளர்கள், பல்கலைக்கழக சமூகத்தினர், பொது அமைப்புக்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பழைய மாணவர்கள், பல்கலைக்கழக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(படங்கள்:குருமன்காடு செய்தியாளர்)

# கார்த்திகை மாத இராசி பலன்கள்

## 16.11.2016-15.12.2016

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



**ஓட்டி உறவாடுபவர்களாக இருந்தாலும் தட்டிக் கேட்கத் தயங்காத சிம்ம இராசி நேயர்களே!**

உங்களுக்கு கார்த்திகை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கின்ற பொழுது. மாதத் தொடக்கத்தில் இராசிநாதன் சூரியனோடு தனாதிபதி புதன் இணைந்து சஞ்சரிப்பதால் பணப்புழக்கத்திற்கு குறைவு ஏற்படாது. பற்றாக்குறை பட்ஜெட் மாறும். நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். நிகழ்காலத் தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகும். தேங்கிக் கிடந்த பணிகளை சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள்.

சொத்துக்கள் வாங்கியதில் இருந்த பிரச்சினைகள் அகலும். நீண்ட நாட்களுக்கு முன்பு வாங்கிய சொத்துக்கள் நல்ல விலைக்கு விற்கவில்லையே என்று கவலைப் பட்டவர்களுக்கு இப்பொழுது அனுகூலமான நேரமிது. பூமிகாரகன் செவ்வாய் உச்சம் பெற்று 6 இல் சஞ்சரிக்கும் பொழுது பூமி விற்பனையால் எதிர்பார்த்த தொகை கிடைக்கும். அதை மூலதனமாக்கி தொழிலை விரிவு செய்ய முன்வருவீர்கள்.

ஜீவன ஸ்தானாதிபதி சனி கொஞ்சம் வலிமை இழந்து இருப்பதால் உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு மேலதிகாரிகளால் பிரச்சினைகள் ஏற்படலாம். ஒருசிலர் பணி நிரந்தரம் ஆகவில்லையே என்று கவலைப்படலாம். அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கம் இருப்பதால் விருப்ப ஓய்வில் வெளி வந்து தொழில் தொடங்க திருப்புமுனையாக அமையும் நேரம் இது. தெசாபுத்தி பலம் பெற்றிருப்பவர்கள் அதில் இருந்து விலகி தனியாக தொழில் செய்யலாம். அல்லது மாற்றினத்தவர்களுடன் கூட்டுச்சேர்ந்து தொழில் தொடங்கும் வாய்ப்புகளை உருவாக்கிக் கொள்ளலாம்.

தொழில் ஸ்தானத்தை மூன்று கிரகங்கள் பார்க்கின்றன. அவை சூரியன், புதன், சனி ஆகியவை ஆகும். சனி வலிமை இழந்திருப்பதால் எந்தப் பிரச்சினையும் ஏற்படாது. சூரிய பார்வை இருப்பதால் அரசு வழிச் சலுகைகள், அதிகாரிகளின் ஒத்துழைப்பு கிடைத்து உங்கள் வேலைகளை ஆக்கபூர்வமாகச் செய்ய ஊக்கம் தரும். நெருங்கிய உறவினர்களால் ஏற்பட்ட நெருடல்கள் அகலும். நாடாளும் நபர்களின் நட்பால் படிப்படியாக முன்னேற்றங்களை வரவழைத்துக் கொள்வீர்கள்.

ஜென்ம குரு, சப்தம கேதுவிற்கு பரிகாரமாக சர்ப்ப பிரீதியை செய்தால், நீண்ட நாட்களாக குடும்பத்தில் தடைப்பட்டு வந்த சில காரியங்கள் துரிதமாக முடியும். சூரியனும், சனியும் அருகருகே இணைந்திருக்கும் ஸ்தலங்களுக்கு




## ஆரோக்கியம் சீராகும்

உங்கள் ஜாதகத்திற்கு ஏற்ற அனுகூல நாளில் சென்று வழிபட்டு வருவதன் மூலம் செயற்பாடுகளில் வெற்றிகாண முடியும். கார்த்திகை விரதமிருந்து முருகப் பெருமானையும் வழிபட்டு வருவது நல்லது.

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

நவம்பர் 25 ஆம் திகதி தனுசு இராசிக்கு புதன் செல்கின்றார். தனலாபாதிபதியான புதன் பஞ்சம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது பிள்ளைகளால் உதிரி வருமானம் கிடைக்கலாம். அவர்கள் படித்து முடித்துவிட்டு வேலையில்லாமல் வீட்டில் இருக்கிறார்களே என்ற கவலை இனி அகலும். உத்தியோகம் கிடைக்கலாம். பஞ்சம ஸ்தானம் பலப்படுவதால் பிள்ளைகளின் திருமண முயற்சிகளில் இருந்த தாமதங்கள் அகலும். சுபச்செலவுகள் அதிகரிக்கும். பூர்வீக சொத்துக்களில் ஏற்பட்ட பிரச்சினைகள் அகன்று பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும்.

**மகர சுக்ரனின் சஞ்சாரம்!**

டிசெம்பர் 4 ஆம் திகதி மகர இராசிக்கு சுக்ரன் செல்கின்றார். 3.10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்ரன் 6 ஆம் இடத்திற்குச் செல்லும் பொழுது பெண் வழிப் பிரச்சினைகள் அகலும். பிரபலங்களின் ஒத்துழைப்போடு திடீர் முன்னேற்றம் காண்பீர்கள். வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் ஆர்வம் அதிகரிக்கும். குறிப்பாக பிள்ளைகளின் திருமணச் சடங்குகளை முன்னிட்டு தங்கம், வெள்ளி மற்றும் ஆடை, ஆபரணங்கள் வாங்கும் வாய்ப்பு கைகூடும். தொழிலில் புதிய பங்குதாரர்கள் வந்திணைந்து முதலீடுகள் செய்ய முன்வருவர்.

**கும்பச் செவ்வாயின் சஞ்சாரம்!**

உங்கள் இராசிக்கு யோககாரகன் ஆன செவ்வாய் உச்ச நிலையில் இருந்து மாற்றம் பெறுகிறார். டிசெம்பர் 6 ஆம் திகதி கும்பத்தில் சஞ்சரிக்கப் போகின்றார். சப்தம ஸ்தானத்தில் செவ்வாய் சஞ்சரிக்கும் பொழுது கோபம் கொஞ்சம் அதிகரிக்கலாம். அமைதியும் அனுசரிப்பும் இருந்தால் ஆதாயம் அதிகமாகவே கிடைக்கும். தொழிலில் எதிர்பார்த்ததைக் காட்டிலும் இரு மடங்கு இலாபம் உண்டு. பெற்றோர் வழிப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். அரசியலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு நல்ல பொறுப்புகள் கிடைக்கும். இம்மாதம் செவ்வாய் தோறும் விரதமிருந்து முருகப்பெருமானை வழிபடுவதோடு, சனிக்கிழமையன்று அனுமன் வழிபாட்டையும் மேற்கொள்வது நல்லது.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

இம்மாதம் உங்களுக்கு பணப்புழக்கம் அதிகரிக்கும் மாதமாகும். தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். கருத்து வேறுபாடுகள் அகலும். குடும்ப ஒற்றுமைக்கு பாதிப்பு ஏற்படுத்தியவர்கள் விலகுவர். உங்கள் பெயரிலேயே சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு. உறவினர்களின் உதவி கிடைத்து மகிழ்ச்சியடைவீர்கள். கணவன்-மனைவிக்குள் பாசமும், நேசமும் கூடும். பிள்ளைகளின் நீண்ட நாள் விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்வீர்கள். திருமண முயற்சிகளில் இருந்த தடை அகலும். பௌர்ணமி வழிபாட்டில் கவனம் செலுத்துவதன் மூலம் பலவித நன்மைகளைப் பெற இயலும். உத்தியோகத்தில் உள்ள பெண்கள் விருப்ப ஓய்வில் வெளிவந்து, சுயதொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவர். வீட்டிலிருந்த படியே விரும்பும் தொழில் தொடங்கும் முயற்சி கைகூடும். நந்தி வழிபாடு நலம் சேர்க்கும்.



**ஓயாது வேலை கொடுத்தாலும் உள்ளம் சலிக்காமல் பார்க்கும் கன்னி இராசி நேயர்களே!**

உங்களுக்கு கார்த்திகை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது. இராசிநாதன் புதன் சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். அவரோடு விரயாதிபதி சூரியனும் இருக்கின்றார். எனவே விரயத்திற்கேற்ற விதத்தில் வரவு வந்து கொண்டேயிருக்கும். எந்தக்காரியத்தையும் முழுமையாக பணத்தை வைத்துக் கொண்டே செய்ய இயலாது. காரியத்தை தொடங்கி விட்டால் பணம் தானாக வந்து சேரும்.

ஜென்ம இராசியில் குரு இருப்பதால் திடீர் மாற்றங்கள் வருவதை ஏற்றுக்கொள்ளும் சூழ்நிலை உருவாகும். எதற்கும் தைரியமாக முடிவெடுப்பீர்கள். தன்னம்பிக்கை அதிகரிக்கும். குருவின் பார்வை பஞ்சமஸ்தானத்தின் மீது பதிவது யோகம்தான். முக்கிய புள்ளிகளும். அரசியல்வாதிகளும் முன்னின்று உங்களுக்கு கைகொடுத்து உதவுவார்கள். பிள்ளைகளால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். அவர்கள் வருங்கால நலன் கருதி புதிய திட்டங்களைத் தீட்டு வீர்கள். அவர்கள் பெயரிலேயே சேமிப்புகளை தொடங்க ஆர்வம் காட்டுவீர்கள்.

கல்லூரிகளில் படித்து வரும் பிள்ளைகளாக இருந்தால் அங்கு நடைபெறும் நேர்முகத் தேர்வுகளில் வெற்றி பெற்று வேலைக்குத் தேர்வுசெய்யப்படுவர். உத்தியோக ஸ்தானத்தில் கேது இருப்பதாலும், அந்த ஸ்தானாதிபதி சனி வலிமையிழந்து இருப்பதாலும் நீண்ட நாட்களாக நீங்கள் பணிபுரிந்த இடத்தில் இருந்து மாற்றப்படலாம். அதற்காக வருத்தப்பட வேண்டியதில்லை. குரு உங்கள் இராசியிலேயே சஞ்சரிப்பதால் தோஷங்கள் நிவர்த்தியாகும். எனவே மலை போல் வந்த துயர் பனி போல் விலகும்.

புதிய வாகனங்கள் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். பழைய வாகனம் பழுதாகி, பழுதாகி தொல்லையைக் கொடுக்கின்றதே என்று கவலைப்பட்டவர்களுக்கு புதிய வாகனம் வாங்கும் யோகம் உருவாகும்.

உங்களுக்குரிய அதிர்ஷ்ட எண் ஆதிக்கத்தில் வாகனங்களை வாங்கினால் அதை எடுத்துச்செல்லும் இடங்களில் எல்லாம் காரிய வெற்றி கிடைக்கும். கேது பலத்தால் ஆரோக்கியத் தொல்லைகள் அதிகரிக்கலாம். பழைய மருத்துவத்தை மாற்றிப் புதிய மருத்துவத்தை மேற்கொள்வதன் மூலம் உற்சாகத்துடன் பணிபுரிய இயலும்.


## மாற்றத்தை ஏற்றுக்கொள்ளலாம்!

2, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்ரன் 4 ஆம் இடத்தில் சஞ்சரிப்பதால் வெளிநாட்டு யோகம் ஒரு சிலருக்கு விரும்பும் விதத்தில் அமையும். முன்பு கிடைத்திருந்தாலும் அதில் பிரச்சினைகள் ஏற்பட்டு அதை உபயோகப்படுத்திக் கொள்ள முடியவில்லையே என்று கவலைபட்டிருப்பீர்கள். அந்தக் கவலை மாறலாம்.

மாதத்தின் மையப்பகுதியில் புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். இம்மாதம் குரு பீடங்களாக விளங்கும் திருச்செந்தூர், ஆலங்குடி, பட்டமங்கலம், குருவித்துறை, தக்கோலம், திட்டை போன்ற குரு ஸ்தலங்களைத் தேர்ந்தெடுத்து வழிபாடு செய்வதன் மூலம் வளர்ச்சியைக் கூட்டிக் கொள்ளலாம்.

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

நவம்பர் 25 ஆம் திகதி தனுசு இராசியில் புதன் சஞ்சரிக்கப் போகின்றார். உங்கள் இராசி நாதன் 4 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும். அதன் பார்வை 10 ஆம் இடத்தில் பதியப்போவதால் தொழில் முன்னேற்றம் கூடுதலாக இருக்கும். பழைய தொழிலில் ஏற்பட்ட இழப்புகளை ஈடுசெய்யப் புதியதாக தொழில் தொடங்க வேண்டுமென்று எடுத்துரைப்பீர்கள். உறவினர்களின் ஒத்துழைப்பு கூடுதலாக இருக்கும். நெருங்கிய உறவினர்கள் உங்கள் நிகழ்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்வர். படிப்பில் உள்ள தடை அகலும். பாதியில் நின்று போன படிப்பை மீதியும் தொடரலாமா? என்று சிந்திப்பீர்கள்.




**மகர சுக்ரனின் சஞ்சாரம்!**

உங்கள் இராசிக்கு 2, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்ரன் டிசெம்பர் 4 ஆம் திகதி முதல் சஞ்சரிக்கப் போகின்றார். இதன் விளைவாக குடும்ப பிரச்சினைகள் அகலும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். கடுமையாக முயற்சித்தும் இதுவரை நடைபெறாத காரியங்கள் இப்பொழுது தானாக நடைபெறுவது கண்டு ஆச்சரியப்படுவீர்கள். தங்கம், வெள்ளி மற்றும் ஆடை, ஆபரணங்கள் வாங்குவதில் தனிக்கவனம் செலுத்துவீர்கள். வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதன் மூலம் வீண் விரயங்கள் சுபவிரயங்களாக மாறும்.

**கும்பச் செவ்வாயின் சஞ்சாரம்!**

டிசெம்பர் 6 ஆம் திகதி கும்ப இராசிக்குச் செவ்வாய் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 3, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய் 6 இல் சஞ்சரிக்கும் பொழுது விபரீத இராஜயோகம் செயற்படப் போகின்றது.

எனவே திட்டமிடாது செய்யும் காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். தேடிச் சென்றும் கிடைக்காத உதவி இப்பொழுது தானாக கிடைக்கும். மேலதிகாரிகளின் அனுகூலத்தோடு உத்தியோக உயர்வு. ஊதிய உயர்வு போன்றவை வந்து சேரும். இம்மாதம் கார்த்திகைத் திருநாளில் முருகப் பெருமானை வழிபடுவதோடு செவ்வாய் தோறும் துர்க்கை வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

இம்மாதம் பயணங்களால் பலன் கிடைக்கும். மாதத் தொடக்கத்திலேயே வரும் தொலைபேசி வழித்தகவல் ஆதாயம் தருவதாக இருக்கும். தாய்வழி ஆதரவும் தக்கவிதம் கிடைக்கும். கூடப்பிறந்தவர்கள் உங்களுக்கு நன்மையை வழங்கக் காத்திருப்பர். கணவன்-மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்வதன் மூலம் போராட்டங்கள் அகலும். பிள்ளைகளின் முன்னேற்றத்திற்கு பக்கபலமாக இருப்பவர்கள் கைகொடுத்து உதவுவர். வியாழன் விரதமும் தட்சிணா மூர்த்தி வழிபாடும் வளர்ச்சிக்கு வித்திடும்.

(தொடரும்)

# அக்கிராசனத்தில் மர்மநபர் அமர்வு

## சபாநாயகரிடம் முறைப்பாடு

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் சபாநாயகரின் உத்தியோகபூர்வ ஆசனமாக அக்கிராசனத்தில் முதன்முறையாக யாரோ ஒருவர் அமர்ந்துள்ளார் என்று சபாநாயகர் கரு ஜெயசூரியவிடம் முறையிடப்பட்டுள்ளது.

இலங்கை நாடாளுமன்ற வரலாற்றிலேயே முதன்முறையாக இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நாடாளுமன்றத்தில் உள்ள பொறியியலாளர் ஒருவரே, அக்கிராசனத்தில் அமர்ந்துள்ளார். இந்தச் சம்பவம் கடந்த புதன் கிழமை இரவு வேளையிலேயே இடம்பெற்றுள்ளது.

சபையமர்வு கடந்த புதன்கிழமை இரவு 7 மணியளவில் நிறைவடைந்ததன் பின்னர், அவைக்குள் துப்புரவு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு கொண்டிருந்த போதே, மேற்படி பொறியியலாளர் அக்கிராசனத்தில் அமர்ந்துள்ளதாக கூறப்படுகிறது.

இதனை ஐக்கிய தேசியக் கட்சியின் மாத்தளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரே கண்டுள்ளார்.

அவரே இந்த விவகாரத்தை சபாநாயகரின் கவனத்துக்கு கொண்டு சென்று முறையிட்டுள்ளார்.

நாடாளுமன்றம் உள்ளிட்ட உயரியதன்மை கொண்ட சபாநாயகரின் ஆசனத்தில் பிரிதொருவர் அமர்வது என்பது சபாநாயருக்கும் அப்பதவிக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்தும் செயலாகும் என்றும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் ஆசனத்தில் வேறு நபர்கள் அமர முடியாது என்பதைப் போல, அவைக்குள் இருக்கின்ற ஜனாதிபதி, பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரின் ஆசனங்களில் வேறொருவரும் அமர முடியாது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (இ-10)

## விசேட கலந்துரையாடல் நாளை

(யாழ்ப்பாணம்)

சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் விசேட கலந்துரையாடல் நாளை 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் இல.62, கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

"அமெரிக்க அரசியல் வரலாற்றில் டொனால்ட் ட்ரம்பின் வெற்றி" எனும் தலைப்பில் இடம் பெறவுள்ள இந்நிகழ்வில் தொடக்கவுரையினை ச.தனுஜன், கருத்துரையினை க. வேல்தஞ்சன் ஆகியோர் வழங்கவுள்ளனர். (இ-7-9)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 100 | 80 | 80 | 60 | 80 | 50 |
| உருளைக்கிழங்கு | 120 | 140 | 100 | 120 | 110 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 60 | 80 | 30 | 60 | 45 | 100 | 70 |
| தக்காளி | 40 | 80 | 45 | 60 | 50 | 80 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 80 | 50 | 50 | 60 | 60 | 50 |
| கோவா | 50 | 80 | 40 | 60 | 70 | 80 | 70 |
| கரட் | 100 | 140 | 70 | 80-120 | 80 | 140 | 80 |
| பூசணி | 30 | 40 | 25 | 40 | 30 | 50 | 40 |
| புடோல் | 60 | 60 | 30 | 50 | 40 | 60 | 50 |
| வாழைக்காய் | 60 | 60 | 40 | 50 | 50 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 140 | 100 | 100 | 120 | 120 | 100 |
| பெரிய வெங்காயம் | 80 | 120 | 80 | 100 | 90 | 100 | 100 |
| பாகற்காய் | 140 | 200 | 95 | 200 | 100 | 120 | 160 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 70 | 60 | 80 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 80 | 120 | 70 | 60 | 80 | 100 | 80 |
| பயற்றங்காய் | 100 | 120 | 60 | 120 | 80 | 120 | 120 |
| லீக்ஸ் | 90 | 160 | 90 | 120 | 100 | 120 | 140 |
| பீற்றூட் | 60 | 60 | 50 | 80 | 80 | 80 | 50 |
| கறிமிளகாய் | 140 | 160 | 105 | 120 | 110 | 160 | 120 |
| முருங்கைக்காய் | 80 | 50 | 30 | 80 | 60 | 120 | 80 |
| போஞ்சி | 160 | 200 | 180 | 200 | 160 | 200 | 160 |
| கத்தரிதம்புள்ள | 40 | 50 | 30 | 60 | 50 | 60 | 50 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 20 | 30 | 20 | 30 | 30 |
| தேசிக்காய் | 500 | 600 | 400 | 600 | 600 | 600 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 50 | 15-35 | 50 | 35 | 35-45 | 50 |
| இராசவள்ளி | — | — | — | — | — | — | — |
| வெங்காயப்பூ | — | — | — | — | — | 240 | — |
| முள்ளங்கி | 60 | — | 30 | 60 | 50 | 80 | 60 |
| பொன்னாங்காணி | 35 | — | 15 | 30 | 40 | 40 | 20 |
| வல்லாரை | 15 | — | 10 | 10 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | — | — | — | — | — | — |

# சிறைக்குள் பேரறிவு

14

## 25 வருடங்கள் சிறைப்பட்டு வலிகளைச் சுமந்தவனின் தொடர்...



"மரணம்-ஒவ்வொரு மனிதனும் எதிர் கொள்ள வேண்டிய கட்டாயத் தருணம் என்பதை அறிவேன். ஆனால் வாழ்வைத் தொடங்கும் முன்பே திடீரென ஒரு நாள் அது என் முன்பு எதிர் நிற்கும் என நான் கற்பனையிலும் கண்டதில்லை."

..1985இல் அறிமுகம் செய்யப்பட்ட 'தடா' சட்டம் தமிழகத்தில் ராஜீவ் கொலை சம்பவத்துக்குப் பிறகே முதன் முதலில் அமுலுக்கு வருகிறது. ஸ்ரீபெரும்புதூர் பொலிஸ் நிலையத்தில் குற்ற எண் 329/91 எனப் பதிவு செய்யப்பட்டு விசாரிக்கப்பட்ட அந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கையில் 'தடா' சட்டம் இல்லை. 24.05.91 அன்று சி.பி.ஐ. புலனாய்வுத் துறை வழக்கைப் பொறுப்பேற்றுக்கொண்ட பின்பும் அந்தச் சட்டம் இல்லை. சில நாட்கள் கழித்தே இணைக்கப்படுகிறது தமிழகத்தில் முதல் வழக்கு.

1990ஆம் ஆண்டு நிகழ்ந்துவிட்ட பத்மநாபா கொலை வழக்கும்கூட, 'தடா' சட்டப் பிரிவுகளின் கீழ் பதிவு செய்யப்பட்டது. மே 1991 முதல் பெப்ரவரி 1993 காலப் பகுதிக்குள் ஏறத்தாழ 147 வழக்குகள் 'தடா' சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு, பலரும் கைது செய்யப்பட்டனர். சர்வதேச, இந்திய அளவில் பலத்த கண்டனங்களுக்கு உள்ளான 'தடா' சட்டம் 24.05.1995 அன்று நாடாளுமன்றத்தில் நீட்டிப்புப் பெறாமல் கைவிடப்பட்டது.

அந்தச் சட்டம் கைவிடப்பட்டதால் எங்களுக்கு ஏதும் நன்மை கிடைத்துவிட்டதா? ஒன்றும் நடக்கவில்லை. 'தடா' சட்டம் இல்லை என்றாலும், 'தடா'வின் கீழ் வழக்கைப் பதிவு செய்துவிட்டால், அந்தச் சட்டத்தின்படியே அனைத்தும் நடக்க வேண்டும் என பிரிவு 114 கூறுவதால் எங்களுக்கு எந்த நன்மையும் கிடைக்கவில்லை. எங்கள் வழக்குக்கு இறுதியில் 'தடா' சட்டம் பொருந்தாது எனத் தீர்ப்பளித்தது உச்ச நீதிமன்றம். அதனால் எங்களுக்கு எந்த நன்மையும் கிடைக்கவில்லை.

ஆனால், இந்த அநீதிகள் அனைத்தையும் களைந்து எங்கள் வாழ்வையே புரட்டிப்போடவல்ல வழக்கு ஒன்று உச்ச நீதிமன்றத்தின் 5 நீதிபதிகள் அடங்கிய அரசியல் அமர்வால் விசாரிக்கப்பட்டு வந்தது. ஒன்றுமறியா எந்த மனிதனின் வாழ்வையும் சின்னாபின்னப்படுத்தவல்ல அரக்கனான 'தடா' சட்டம் அரசியல் சட்டப்படி செல்லுபடி ஆகாது என அறிவிக்கக்கோரி சர்தார் சிங் என்பவர் பெயரில் போடப்பட்ட வழக்கு அது. ஒட்டுமொத்தமாக இல்லையென்றாலும் ஒப்புதல் வாக்குமூலத்தின் பிரிவு 15 மற்றும் உயர் நீதிமன்ற மேல்முறையீட்டு வாய்ப்பைத் தடுக்கும் பிரிவு 19 ஆகியன சட்டவிரோதமானது எனக் கூறி தீர்ப்பு வெளியாகும் என்பதாகச் சட்ட அறிஞர்களால் கருதப்பட்ட நிலையில், அனைவரின் ஒட்டுமொத்த எதிர்பார்ப்பையும் தகர்த்துத் தீர்ப்பு வெளியான நாள் 11.03.1994.

'தடா'வின் அத்தனை சட்டப் பிரிவுகளும் சரியானவை எனப் பெரும்பாலும் ஒத்தகருத்தோடு 5 நீதிபதிகளும் தீர்ப்பெழுதிய நிலையில், ஒப்புதல் வாக்குமூலப் பிரிவு 15 மட்டும் சட்டவிரோதமானது என நீதியரசர்கள் ராமசாமி மற்றும் சகாய் இருவரும் மாறுபட்ட தீர்ப்பெழுதினர். ஐவரில் இன்னும் ஒருவரின் நிலைப்பாடு அந்த இருவருக்கு ஏற்ப இருந்திருந்தால் எங்கள் எதிர்காலமே மாறிப்போயிருக்கும் என்ற நிலையில், அதற்கு மாறான தீர்ப்பினை எழுதினர் ஏனைய மூன்று நீதிபதிகள். அதுவே பெரும்பான்மை தீர்ப்பானது. அந்த மூன்று நீதிபதிகளில் இருவர் புன்சி மற்றும் அகர்வால். மற்றொருவர் அந்த ஐவர் அமர்வுக்குத் தலைமை வகித்த தமிழர் நீதியரசர் ரத்னவேல் பாண்டியன்.

'மரணம்' - ஒவ்வொரு மனிதனும் எதிர்கொள்ள வேண்டிய கட்டாயத் தருணம் என்பதை அறிவேன். ஆனால், வாழ்வைத் தொடங்கும் முன்பே திடீரென ஒரு நாள் அது என் முன்பு எதிர் நிற்கும் என நான் கற்பனையிலும் கண்டதில்லை.

சொர்க்க, நரகத்திலும், முற்பிறவி, மறுபிறவியிலும் நான் நம்பிக்கையற்றவன் என்பதை முன்பே அறிவீர்கள். மத, இறை நம்பிக்கையற்ற பெற்றோரால் வளர்க்கப்பட்டதால் எனது வாழ்வில் அவை குறித்து நினைத்துப் பார்த்ததும் இல்லை. எந்தக் கருத்தும் சரியானது தானா என்பது குறித்து அவை குறித்த தர்க்கரீதியான வாதங்களில் மட்டும் தீர்மானிக்கப்படுவதில்லை. மாறாக, உரிய சோதனைக் களத்தில் (Testing Field) மட்டுமே இறுதி செய்யப்படுகிறது என்ற நம்பிக்கை உடையவன். எனக்கான சோதனைக்களமும் வந்தது. 'தடா' சிறப்பு நீதிமன்றம் விதித்த தூக்குத்தண்டனையை உச்ச நீதிமன்றம் எனக்கும் பிற மூவருக்கும் உறுதி செய்து விட்டது. உச்ச நீதிமன்றம் சொல்லி விட்ட பிறகு, உயிர் தப்ப அடுத்த வாய்ப்பு ஏதும் இல்லை.


தமிழக ஆளுநர் மற்றும் குடியரசுத் தலைவர் ஆகியோருக்கு கருணை மனுத்தாக்கல் செய்வதுதான் நான் உயிர்தப்ப உள்ள ஒரே வாய்ப்பு என அப்போது சொல்லப்பட்டது.

'கருணை மனு' என்பது குற்றத்தை ஒப்புக்கொண்டு மன்னிப்புக் கோருவது என்பதே எனச் சிறைக் காவலர்களால் அவர்கள் அறிந்த அளவில், எனக்கு கருத்துக் கூறப்பட்ட நிலையில், நிரபராதியான நான் அதில் உடன்பாடற்று இருந்தேன்.



(வலிகள் தொடரும்...)

# அமெரிக்க புதிய ஜனாதிபதி ஜப்பான் பிரதமர் சந்திப்பு



அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி ட்ரம்பை ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே சந்தித்து பேசினார்.

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அவர் எதிர்வரும் ஜனவரி மாதம் பதவி ஏற்க உள்ளார். இந்த நிலையில் தனது அரசில் நியமிக்கப்படவுள்ள புதிய அமைச்சர்கள் தேர்வு உள்ளிட்ட பணிகளை மேற்கொள்கிறார்.

இதற்கிடையே சர்வதேச நாடுகளின் தலைவர்களையும் சந்தித்து பேசி வருகிறார். இந்த நிலையில் ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே நேற்று முன்தினம் பெருநாட்டில் நடைபெறும் ஆசிய- பசுபிக் வர்த்தக மாநாட்டில் பங்கேற்க செல்லும் வழியில் நியூயோர்க் வந்தார். அங்கு மேன் ஹாட்டனில் உள்ள ட்ரம்ப் மாளிகைக்கு சென்றார். அங்கு அவர் ட்ரம்பை சந்தித்துப் பேசினார்.

இச்சந்திப்பு சுமார் 90 நிமிடங்கள் நடந்தது. அப்போது இரு நாட்டுத் தலைவர்களும் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். அது குறித்து ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற ட்ரம்புக்கு வாழ்த்துக் கூறினேன். எங்களிடையே நல்ல சூழ்நிலையில் வெளிப்படையான பேச்சுவார்த்தை நடந்தது. அவரை சந்திக்கும் முன்பு எதிர்காலத்தில் இரு நாடுகளிடையேயான நட்பு தொடருமா என்பதில் எனக்கு சந்தேகம் இருந்தது. ஆனால் ட்ரம்பை சந்தித்த பின் அமெரிக்காவின் புதிய தலைவரான ட்ரம்புடன் இணைந்து பணியாற்ற முடியும் என்ற மிகப்பெரிய நம்பிக்கை எனக்கு ஏற்பட்டுள்ளது என்றார்.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு ஜப்பான் பொருளாதார வளர்ச்சிக்கு அமெரிக்கா உதவியது. அதைத் தொடர்ந்து இருநாடுகளும் நட்பு நாடுகளாக இருந்து வருகின்றன. ஆனால் தேர்தல் பிரசாரத்தின் போது ட்ரம்பின் பேச்சு அமெரிக்க நட்பு நாடுகளுடனான உறவில் சந்தேகத்தை கிளப்பியது.

எனவே தான் ஜப்பான் பிரதமர் அபே புதிய ஜனாதிபதி ட்ரம்ப் மீது சந்தேகத்துடன் இருந்தார். தற்போது அவர் மீது மிகுந்த நம்பிக்கை உள்ளதால் மீண்டும் இருவரும் சந்தித்து நீண்ட விவாதம் நடத்தவுள்ளனர். (இ-10)

# சர்வதேச விண்வெளி ஆய்வகத்துக்கு 3 பேர் கொண்ட குழு புறப்பட்டுச் சென்றது



(பைகானூர்)

சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்துக்கு அமெரிக்கா, ரஷ்யா மற்றும் பிரான்ஸ் நாடுகளைச் சேர்ந்த விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் கஜகஸ்தானில் உள்ள பைகானூர் ரொக்கெட் ஏவுதளத்தில் இருந்து நேற்று புறப்பட்டுச் சென்றனர்.

பூமி உள்ளிட்ட பிற கிரகங்களை ஆய்வு செய்வதற்காக ரஷ்யா, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் விண்வெளியில் சர்வதேச விண்வெளி மையத்தை அமைத்துள்ளன. இங்கு ஆய்வுகளை மேற்கொள்வதற்காக சுழற்சி முறையில் வீரர்கள்,வீராங்கனைகள் அவ்வப்போது அனுப்பி வைக்கப்படுவது வழக்கம்.

இந்த ஆய்வு மையத்துக்கு செல்லும் விண்வெளி வீரர்கள் அங்கு தங்கியிருந்தபடி புவியில் ஏற்படும் மாற்றங்கள், செவ்வாய் உள்ளிட்ட கிரகங்களில் மனிதர்கள் வாழ்வதற்கான சாத்தியக் கூறுகள் தொடர்பாக ஆய்வு செய்து வருகின்றனர்.


இதேபோல், அங்கிருந்தும் வீரர்கள் பூமிக்கு திரும்பி வருவதுண்டு. அவ்வகையில், அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான நாசாவைச் சேர்ந்த பெகி விட்சன், ரஷ்ய விண்வெளி ஆய்வு மையமான ராஸ்காஸ்மோஸைச் சேர்ந்த ஓலெக் நோவிட்ஸ்கிய் மற்றும் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த தாமஸ் பெஸ்குவெட் ஆகியோரை சர்வதேச விண்வெளி மையத்துக்கு அனுப்பிவைக்க திட்டமிடப்பட்டது.

இதையடுத்து, இந்த மூன்று விண்வெளி வீரர்களும் கஜகஸ்தானில் உள்ள பைகானூர் ரொக்கெட் ஏவுதளத்தில் இருந்து சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இவர்கள் மூவரில் அமெரிக்காவின் நாசாவைச் சேர்ந்த ஆராய்ச்சியாளரான பெகி விட்சன் என்ற பெண்மணி, தற்போது மூன்றாவது முறையாக விண்வெளி பயணத்தை தொடர்ந்துள்ளார்.

இன்னும் ஆறுமாத காலம் விண்வெளியில் இருந்தவாறு பல்வேறு ஆராய்ச்சிகளை செய்துவிட்டு இவர் பூமிக்கு திரும்புகையில் விண்வெளியில் அதிக நாட்கள் வாழ்ந்தவர் என்ற பெருமைக்குரிய அமெரிக்கரான ஜெப் வில்லியம்ஸ் என்பவர் நிகழ்த்திய முந்தைய 534 நாள் சாதனையை பெகி விட்சன் முறியடிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (இ-10)

# அமெரிக்காவின் புதிய தேசிய பாதுகாப்பு ஆலோசகராக மைக்கேல் பிளின் தேர்வு



அமெரிக்காவின் புதிய தேசிய பாதுகாப்பு ஆலோசகராக ஓய்வுபெற்ற இராணுவ லெப்டினெனட் மைக்கேல் பிளின் என்பவரை அந்நாட்டின் ஜனாதிபதியாக விரைவில் பதவியேற்கவுள்ள டொனால்ட் ட்ரம்ப் தேர்வு செய்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றுள்ள குடியரசுக் கட்சி வேட்பாளர் டொனால்ட் ட்ரம்ப், எதிர்வரும் ஜனவரி மாதம் 20ஆம் திகதி அந்நாட்டின் 45ஆவது ஜனாதிபதியாக பதவியேற்கவுள்ளார்.

தனது தலைமையிலான அமைச்சரவை மற்றும் நாட்டின் முக்கிய துறைகளுக்கான தலைமை அதிகாரிகளை தேர்வு செய்யும் பணியில் தற்போது மும்முரமாக ஈடுபட்டுவரும் ட்ரம்ப், தினந்தோறும் புதிய அறிவிப்புகளை வெளியிட்டு வருகிறார்.

அவ்வகையில், அமெரிக்க பாதுகாப்புத்துறை புலனாய்வுப் பிரிவின் முன்னாள் தலைவரான மைக்கேல் பிளின் என்பவரை தேசிய பாதுகாப்பு ஆலோசகராக டொனால்ட் ட்ரம்ப் தேர்வு செய்துள்ளார். ட்ரம்பின் தீவிர ஆதரவாளரான மைக்கேல் பிளின், இதற்கு முன்னர் தேசிய பாதுகாப்பு தொடர்பாக ட்ரம்புக்கு தேவையான ஆலோசனைகளை வழங்கி வந்ததுடன், அவரது தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் ஆரம்பநிலை பேச்சாளராக இருந்து வந்துள்ளார். (இ-10)

# 2016 இல் சிறந்த வார்த்தை

உலகப் புகழ்பெற்ற ஒக்ஸ்போர்ட் அகராதி 2016ஆம் ஆண்டின் சிறந்த வார்த்தையாக post-truth என்னும் வார்த்தையை தேர்ந்தெடுத்துள்ளது.

கடந்த 11 வருடங்களாக அந்தந்த ஆண்டின் சிறந்த வார்த்தையை ஒக்ஸ்போர்ட் அகராதி வெளியிட்டு வருகிறது. அந்த வகையில் இந்த ஆண்டின் சர்வதேச வார்த்தையாக post-truth என்னும் வார்த்தையை தேர்ந்தெடுத்துள்ளதாக ஒக்ஸ்போர்ட் அகராதி செய்தி வெளியிட்டுள்ளது.

"பொதுக் கருத்து என்பது உண்மைகளைக் கடந்தும் தனிப்பட்ட உணர்வுகள் மற்றும் நம்பிக்கைகளை சார்ந்து உருவாக்குவதில் அங்கம் வகிப்பது" என இந்த வார்த்தைக்கு ஒக்ஸ்போர்ட் அகராதி விளக்கம் கொடுத்துள்ளது.

சர்வதேச சிறந்த வார்த்தையைப் பொறுத்தவரையில் இந்த அகராதியின் பிரிட்டன், அமெரிக்க பதிப்புகள் சில நேரங்களில் வேறு வார்த்தைகளை தேர்ந்தெடுக்கும். ஆனால் இந்த ஆண்டு சொல்லி வைத்ததுபோல இரண்டு பதிப்புகளும் ஒரே வார்த்தையை தேர்ந்தெடுத்துள்ளன.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் விலகியது போன்ற காரணங்களால் இந்த வார்த்தைப் பயன்பாடு உலக அளவில் பன்மடங்கு அதிகரித்துள்ளதாக ஒக்ஸ்போர்ட் அகராதி தெரிவித்துள்ளது. (இ-10)

# சிரியாவில் ரஷ்யா வான்வழி தாக்குதல் இடிபாடுகளுக்குள் சிக்கிய சிறுமி மீட்பு

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் ஆசாத்துக்கு எதிராக கடந்த 5 ஆண்டுகளாக உள்நாட்டுப் போர் நடந்து வருகிறது. அரசின் இராணுவத்தை எதிர்த்து கிளர்ச்சியாளர்கள் படை அமைத்து போரிட்டு வருகின்றனர்.

சிரியாவின் முக்கிய நகரங்களை கிளர்ச்சியாளர்கள் தங்களது கட்டுப்பாட்டில் வைத்துள்ளதால், இந்த உள்நாட்டுப் போரை முடிவுக்கு கொண்டுவர அமெரிக்கா மற்றும் ரஷ்யப் படைகள் களத்தில் இறங்கின.

ஆனால் இவ்விரு நாடுகளுக்கும் இடையே சுமூக தீர்வு எட்டப்படாததால் அலெப்போ நகரை காப்பாற்ற இரு அரசு படைகளும் நுழைந்தன. நேற்று முன்தினம் நடந்த அரசு படைத்தாக்குதலில் பொதுமக்கள் 54 பேர் கொல்லப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதன் காரணமாக ரஷ்யா நேற்று முன்தினம் அலெப்போ நகரில் வான்வழித் தாக்குதல் நடத்தியது. இதில் 30 தீவிரவாதிகள் கொல்லப்பட்டுவிட்டதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சம் தெரிவித்திருந்தது.

இந்நிலையில் ரஷ்யா நடத்திய தாக்குதலின் விளைவாக கதிஜா என்ற சிறுமி வீட்டின் இடிபாடுகளுக்கு மத்தியில் சிக்கிக் கொண்டு உயிருக்கு போராடிய சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. அது தொடர்பான வீடியோவையும் அந்நாட்டு ஊடகம் வெளியிட்டுள்ளது.

அதில் காதிஜா அவருடைய வீட்டின் இடுபாடுகளுக்கு மத்தியில் சிக்கிக் கொண்டுள்ளார். இதைக் கண்ட பாதுகாப்புப் படையினர் முதலில் அச்சிறுமியின் தலையில் ஹெல்மெட்டை வைத்தனர்.

அதன் பின்னர் பொறுமையாக இடுபாடுகளுக்கு மத்தியில் இருந்த அவரை மீட்டு அவசர அவசரமாக முதலுதவி கொடுப்பதற்கு அழைத்துச் சென்றனர்.

அப்போது அச்சிறுமி வலி தாங்க முடியாமல் அலருவதும் மூக்கு மற்றும் வாய்ப்பகுதியில் இரத்தம் வழிந்ததால் பதற்றமடைந்த பாதுகாப்பு படைவீரர் வைத்தியரிடம் சிகிச்சைக்காக ஒப்படைத்தார்.

தற்போது கதிஜா நன்றாக உள்ளதாகவும் உயிருக்கு ஆபத்து ஒன்றும் இல்லை என தெரிவித்துள்ளனர். மேலும் சிரியாவின் கிழக்கு பகுதியில் இதுவரை நடத்திய தாக்குதலின் விளைவாக 87 பேர் இறந்துள்ளனர். அதில் 4 குழந்தைகளும் இறந்துள்ளதாக கூறப்படுகிறது. (இ-10)

# ஜப்பானில் வைன் குளியல்



பிரான்ஸில் ஒவ்வொரு வருடமும் நவம்பர் 17 ஆம் திகதி புதிய வைன் வெளியிடப்படும் நாளாகும். திராட்சையில் இருந்து தயாரிக்கப்படும் வைன் உற்பத்தியில் பிரான்ஸ் முக்கிய இடத்தினை வகிக்கின்றது.

"போயுலே நொவ்" என பிரெஞ்ச் மொழியில் அழைக்கப்படும் வைன் விழா போன்று ஜப்பானிலும் வைன் விழா பிரபலமானது. நேற்று முன்தினம் வெளியான பிரெஞ்ச் வைனை ஜப்பானியர்கள் சுவைத்தது மட்டுமல்லாமல் அதில் குளித்தும் மகிழ்ந்துள்ளனர்.

பிரான்ஸில் 2016 ஆம் ஆண்டுக்குரிய புதிய வைன் நேற்று முன்தினம் வெளியானதை முன்னிட்டு ஜப்பானிலும் அதனை கொண்டாடியவர்கள் நீருடன் வைனை கலந்து அதில் இறங்கி குளித்தும் மகிழ்ந்தனர். (இ-10)

# பருவநிலை மாற்றத்தைத்தடுக்க 10,000 கோடி அமெரிக்க டொலர் 196 நாடுகள் கூட்டுப் பிரகடனம்



(மராக்கேஷ்)

**பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்ள எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் இதற்குத் தேவையான 10,000 கோடி அமெரிக்க டொலர்களை திரட்டித் தரவும் ஐ.நா. சபையில் அங்கம் வகிக்கும் 196 நாடுகள் நேற்று கூட்டுப் பிரகடனம் செய்துள்ளன.**

புவி வெப்பமயமாவதால் ஏற்படும் பருவநிலை மாற்றத்தை தடுக்க பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் நடைபெற்ற ஐ.நா. பருவநிலை மாநாட்டில் 196நாடுகளைச் சேர்ந்த தலைவர்கள் பங்கேற்றனர். இம்மாநாட்டில், பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் தாக்கங்களை சமாளிக்க வளரும் மற்றும் ஏழை நாடுகளுக்கு வளர்ந்த நாடுகள் 10,000 கோடி அமெரிக்க டொலர்களை (ரூ.6.70 இலட்சம் கோடி) நிதியுதவி அளிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பு நிலவியது.

மேலும் கார்பன் புகை வெளியேற்றத்தால் புவி வெப்பமடைவதை மேலும் இரண்டு டிகிரி செல்சியஸ் அளவை தாண்டாத வகையில் உலக நாடுகள் நடவடிக்கை எடுப்பது குறித்த தீர்மானம் நிறைவேறும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

இதில் ஒருமித்த கருத்து எட்டுவதில் மாநாட்டில் கலந்து கொண்ட நாடுகளிடையே கருத்து வேறுபாடு நிலவி வந்தது. இந்நிலையில், எல்லா நாடுகளுக்கும் உகந்த வகையில் ஒருமித்த கருத்துகள் அடங்கிய வரலாற்று சிறப்பு மிக்க இறுதி வரைவு அறிக்கையை பிரான்ஸ் வெளியுறவுத்துறை அமைச்சர் லாரெண்ட் பேபியஸ் இம்மாநாட்டில் வெளியிட்டார்.

இதைத் தொடர்ந்து, ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கி மூன் முன்னிலையில், வரைவு அறிக்கைக்கு அனைத்து நாடுகளும் ஆதரவு அளிக்க வேண்டும் என்று பிரான்ஸ் ஜனாதிபதிபிரான்காயிஸ்ஹாலண்டே வேண்டுகோள் விடுத்தார். இதுதொடர்பாக பிரதமர் நரேந்திர மோடியையும் அவர் தொடர்பு கொண்டு வரைவு அறிக்கைக்கு ஆதரவு கோரினார்.

வரைவு அறிக்கையில் ஏற்கனவே ஆலோசனை நடத்தியபடி, புவி வெப்பத்தை இரண்டு டிகிரி செல்சியஸ் அல்லது அதற்கும் குறைவாக 1.5 டிகிரியில் கட்டுக்குள் வைப்பது, வளரும் நாடுகளுக்கு எதிர்வரும் 2020ஆம் ஆண்டு தொடங்கி ரூ.6.70 இலட்சம் கோடி நிதியுதவு அளிப்பது என்ற தீர்மானங்கள் இடம்பெற்றுள்ளன. பருவநிலை மாற்றங்களின் விளைவுகளை சமாளிக்கும் அம்சங்கள் அடங்கிய கொள்கைகள் வரைவு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த இறுதிவரைவை பிரகடனமாக அறிவிக்க 196 நாடுகளின் தலைவர்கள் பங்கேற்ற பருவநிலை மாற்றத்தை தடுக்கும் 22ஆவது மாநாடு மொராக்கோ நாட்டில் உள்ள மராக்கேஷ் நகரில் நேற்று நடைபெற்றது.

இந்த மாநாட்டின்போது, புவி வெப்பமயமாதலை எதிர்கொள்ள ஆற்ற வேண்டிய அவசர கடமை என்ற தலைப்பில் 196 நாடுகளின் சம்மதத்துடன் 'மராக்கேஷ் நடவடிக்கை பிரகடனம்' வாசிக்கப்பட்டது.

அந்த பிரகடனத்தில் கூறப்பட்டுள்ளதாவது.

நமது பூமியின் பருவநிலையானது முன்னர் எப்போதுமில்லாத அளவில் எச்சரிக்கும் வகையில் வெப்பமயமாகி வருவதை தடுக்கும் பணிக்கு முன்னுரிமை அளித்து நாம் அவசரமாக கடமையாற்ற வேண்டியுள்ளது.

இதற்காக, பருவநிலை மாற்றத்தை தடுப்பதற்கான ஐக்கிய நாடுகள் சபையின் சார்பில் மராக்கேஷ் நகரில் நடைபெறும் 22ஆவது மாநாட்டில் கூடியுள்ள நாடுகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளாகிய நாங்கள் இந்த கூட்டுப் பிரகடனத்தின் மூலம் பருவநிலை மாற்றத்தை தடுப்பதற்கான நடவடிக்கையிலும் இதுதொடர்பான நிலையான முன்னேற்றம் காணவும் உழைப்போம் என உறுதியேற்கிறோம்.

நமது காலத்தில் ஏற்பட்டுள்ள மிகப்பெரிய சவாலாக இருக்கும் பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்ள ஒட்டுமொத்த சர்வதேச சமூகமும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டியதன் அவசியத்தை இந்த மாநாடு வலியுறுத்துகிறது.

இந்த சவாலை எதிர்கொள்ளத்தேவையான பத்தாயிரம் கோடி டொலர் நிதியை திரட்டித்தர எங்களது பங்களிப்பை ஆற்றுவோம் என்றும் வளர்ந்த நாடுகளின் தலைவர்களான நாங்கள் மீண்டும் உறுதியேற்கிறோம்.

மேற்கண்ட வாக்குறுதிகள் மட்டுமின்றி ஏற்கனவே பாரிஸ் நகரில் நடைபெற்ற பருவநிலை மாற்றத் தடுப்பு மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட பல தீர்மானங்களும் பிரகடனத்தில் இடம்பெற்றுள்ளன. (இ-10)

# அமிலத்தன்மை மிக்க வெப்பக் குளத்தில் விழுந்தவரின் உடல் கரைந்த பயங்கரம்!



கொதி நிலையில் இருந்த அமிலத்தன்மை மிக்க ஒரு வெப்பக் குளத்தில் ஒரு நபர் விழுந்து இறந்த சம்பவத்துக்கு பிறகு, அமெரிக்காவில் உள்ள யெல்லோ ஸ்டோன் தேசிய இயற்கை பூங்காவின் அதிகாரிகள், பூங்காவில் உள்ள எச்சரிக்கை அறிவிப்புகளை கவனத்தில் கொள்ளுமாறு பூங்காவுக்கு வருபவர்களை கேட்டுக் கொண்டுள்ளனர்.


காலின் ஸ்காட் என்ற அந்த நபரின் உடலை மீட்புக் குழுக்கள் மீட்கும் முன்னர் அவரது உடல் வெப்பக் குளத்தில் கரைந்து விட்டது.

வெப்பக் குளத்தின் வெப்ப நிலையை சோதிக்க காலின் ஸ்காட் சற்றுக் குனிந்து முயற்சிக்கையில், அவர் இந்தக் குளத்தில் தவறி விழுந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தை அவரது சகோதரி தனது தொலைபேசியில் பதிவு செய்துள்ளார்.

அதிபயங்கரமான இந்தச் சம்பவம் குறித்த தகவல்கள் ஒரு உள்ளூர் தொலைக்காட்சி செய்தி நிறுவனம் தகவல் அறியும் உரிமை சட்டத்தினால் விபரங்கள் கூறியதால் இது வெளிச்சத்துக்கு வந்துள்ளது. (இ-10)

# வங்கிகளில் பணத்தை மாற்ற காத்திருந்த மேலும் பலர் பலி



வங்கிகளில் பணத்தை மாற்ற காத்திருந்த மேலும் பலர் பலியாகியுள்ளனர். இதேவேளை வைத்தியசாலையில் பணம் வாங்க மறுத்ததால் குழந்தை உயிரிழந்துள்ளது.

நாட்டில் புழக்கத்தில் இருந்த ரூ.500, ரூ.1000 நாணயத்தாள்கள் செல்லாது என்று மத்திய அரசு அறிவித்ததைத் தொடர்ந்து மக்களிடையே பணப்புழக்கம் குறைந்து விட்டது.

தங்களிடம் உள்ள பழைய ரூ.500, ரூ.1000 நாணயத்தாள்களை மாற்றுவதற்காக நாடு முழுவதும் வங்கிகள் முன்பு மக்கள் காத்துக் கிடக்கின்றனர்.

இதேபோல் இருப்பில் உள்ள பணத்தை வங்கியில் போடவும் எடுக்கவும் கூட்டம் அலை மோதுகிறது. இதனால் நாடு முழுவதும் வங்கிகள், ஏ.ரி.எம். மையங்களில் எப்போதும் நீண்ட வரிசையில் மக்கள் காத்து நிற்கிறார்கள்.

நோய் வாய்ப்பட்டவர்கள், முதியோர், பெண்களும் வரிசையில் காத்து கிடக்கிறார்கள். இதனால் அவர்கள் பல அசௌகரியங்கள், இன்னல்களுக்கு ஆளாகிறார்கள்.

இதனால் வங்கிகளில் பலர் உயிரிழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. வட மாநிலங்களில் நேற்று முன்தினம்வரை 40 பேர் பலியானதாக தகவல்கள் வெளியாகின.

இதில் வங்கிகளில் வரிசையில் காத்திருந்தபோது பலியான 24 பேர் விபரங்கள் வெளியாகி உள்ளன.

இவர்களில் பெரும்பாலானவர்கள் வரிசையில் காத்திருந்ததால் ஏற்பட்ட களைப்பின் காரணமாக மயங்கி விழுந்தும் மாரடைப்பு ஏற்பட்டும் உயிரிழந்துள்ளனர். (இ-10)

# ஈராக்கில் திருமண நிகழ்ச்சியில் தற்கொலைப்படைத் தாக்குதல்

## 16 பேர் உயிரிழப்பு

ஈராக் நாட்டில் திருமண நிகழ்ச்சி ஒன்றில் நிகழ்த்தப்பட்ட தற்கொலைப்படைத் தாக்குதல் சம்பவத்தில் 16 பேர் கொல்லப்பட்டனர்.

ஈராக் தலைநகர் பக்தாத்திற்கு அருகில் தற்கொலைப்படைத் தாக்குதல் நிகழ்த்தப்பட்டுள்ளது. திருமண விழா நிகழ்ச்சி ஒன்றில் மக்கள் நடமாட்டம் அதிகமிருந்த இடத்தில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

பக்தாத்திற்கு மேற்கில் 40 கிலோமீற்றர் தொலைவில் உள்ள அன்பர் மாகாணத்தில் உள்ள அம்ரியாட் அல்-பல்லூஜா என்ற இடத்தில் நேற்று முன்தினம் மாலை இந்தத் தாக்குதல் நடைபெற்றுள்ளது.

இந்த தற்கொலைப்படைத் தாக்குதலில் 16 பேர் பரிதாபமாக கொல்லப்பட்டனர். 30இற்கும் அதிகமானோர் படுகாயம் அடைந்தனர்.



இந்த தாக்குதலுக்கு எந்தவொரு அமைப்பும் இதுவரை பொறுப்பேற்கவில்லை. இருப்பினும் ஈராக் நாட்டின் பல்வேறு இடங்களில்ஐ.எஸ். தீவிரவாதிகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

ஐ.எஸ். தீவிரவாதிகள் வசமுள்ள பகுதிகளை மீட்கும் பணியில் ஈராக் படைகள் தொடர்ச்சியாக ஈடுபடும் நிலையில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-10)

# இனவாதம் பேசுவோருக்கு எதிராக கடும் நடவடிக்கை

## பொலிஸ்மா அதிபருக்கு ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

**நாட்டில் இனவாதம் பேசும் அனைவருக்கு எதிராகவும் தயவு தாட்சண்யம், இன,மத பேதம் பார்க்காமல், நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ்மா அதிபருக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டுள்ளார்.**



நேற்று முன்தினம் இரவு எட்டு மணியிலிருந்து பத்து மணிவரை நடைபெற்ற பாதுகாப்பு சபைக் கூட்டத்தில் நாட்டில் இனவாதத்தை தூண்டிவிடும் நடவடிக்கைகள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

இதன்போது அமைச்சர்கள், அதிகாரிகள் அனைவரது கருத்துகளையும் செவிமடுத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு உத்தரவிட்டார் என அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பாக ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது, முகநூல் கணக்குகள் மூலமும், இணையத்தளங்கள் மூலமும் இனவாதக் கருத்துகளை செய்திகளாகவோ, கருத்து பதிவுகளாகவோ செய்பவர்களை கண்காணித்து, அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க தொழில்நுட்ப பொறிமுறை ஒன்றை உருவாக்க வழிசெய்யுமாறும், ஜனாதிபதி தன் செயலாளருக்கு பணித்தார்.

அத்துடன் இனவாத கருத்துகளுக்கு எதிராக் புதிய சட்டமூலத்தை உருவாக்குமாறு, நீதி அமைச்சருக்கும் பணிப்புரை விடுத்தார்.

புதிய சட்டமூல வரைபு தயாராகிக் கொண்டு இருப்பதாகவும், அதுவரையில் இப்போது இருக்கும் குற்றவியல் தண்டனை கோவை சட்டமூலத்தின் அடிப்படையிலும் ஓராண்டு சிறைத்தண்டனை வரை வழங்க முடியும் என நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ விளக்கமளித்தார். அப்படியானால், புதிய சட்டம் வரும்வரை காத்திருக்காமல், உடன் செயற்படும்படி, ஜனாதிபதி பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவு பிறப்பித்தார்.

இரண்டு மணித்தியாலங்களாக நடைபெற்ற இந்த கூட்டத்தில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்கள், விஜேதாஸ ராஜபக்ஷ, சம்பிக்க ரணவக்க, மனோ கணேசன், ரவூப் ஹக்கீம், றிசாத் பதியுதீன், சாகல ரத்நாயக்க, டி.எம். சுவாமிநாதன், ருவன் விஜயவர்தன, எம்.பி.ரத்ன தேரர், ஜனாதிபதி செயலாளர் பொலிஸ்மா அதிபர், முப்படைகளின் தளபதிகள், சட்டம், ஒழுங்கு அமைச்சு செயலாளர், பாதுகாப்பு அமைச்சு செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-7-10)

# அமெரிக்காவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் கைதானார்

(கொழும்பு)

அமெரிக்காவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் ஜாலிய விக்கிரமசூரிய நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

முன்னைய ஆட்சிக் காலத்தில் அமெரிக்காவில் தூதுவராக இருந்த போது, 245,000 டொலர் தரகுப் பணம் பெற்றார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கைத் தூதரகத்தைப் புனரமைக்கும் பணிகள்மேற்கொள்ளப்பட்ட போதே, இவர் இந்த தரகுப்பணத்தை பெற்றுக் கொண்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இந்தப் பணத்தை ஜாலிய விக்கிரமசூரிய இல்ங்கையில் வைப்புச் செய்துள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ள ஜாலிய விக்கிரமசூரிய இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் நெருங்கிய உறவினராவார்.



நேற்று முன்தினம் இவர் கைது செய்யப்படுவதற்கு முன்னதாக, வெளிநாடு செல்வதற்கு நிதிக்குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தடை விதித்திருந்தனர். (இ-10)

# அவுஸ்திரேலியாவில் புகலிடம் பெற்ற இலங்கைத் தமிழர் திடீர் மரணம்

(கொழும்பு)

இலங்கையிலிருந்து புகலிடம் கோரும் நோக்கில் "மெராக்" கப்பலில் அவுஸ்திரேலியா சென்று, பின் அகதி அந்தஸ்து வழங்கப்பட்டு, அங்கு குடியமர்ந்த அஜிதன் யுவராஜன் (வயது 24) என்ற இளைஞர் திடீர் மரணமடைந்துள்ளதாக கூறப்படுகின்றது.

இந்த செய்தியை அவுஸ்திரேலிய ஊடகமொன்று வெளியிட்டுள்ளது.

சிட்னியில் வசித்து வந்த இவருக்கு வலிப்பு நோய் ஏற்பட்டதாகவும் இதுவே அவர் திடீர் மரணமடைவதற்குக் காரணம் எனவும் அவரது நண்பரொருவர் குறித்த ஊடகத்திற்கு தெரிவித்துள்ளார்.

அஜிதனுக்கு திடீரென வலிப்பு ஏற்பட்டதாகவும் அப்போது அவருடன் யாரும் இருந்திருக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அஜிதன் இயற்கை மரணமடைந்ததாக தெரிவிக்கப்படுகின்ற போதிலும் இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவ்தாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அஜிதனின் உறவினர்கள் யாரும் அவுஸ்திரேலியாவில் இல்லாத நிலையில் ,அவரது உடலை இலங்கைக்கு கொண்டு செல்வதா அல்லது அவரது உறவினர்களை இங்கு வரவழைப்பதா என்பது தொடர்பில் ஆராயப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-10)

## இன்று ஒரு தகவல்

### அந்தந்த சாமிக்கு அந்தந்தப் பூசாரி

பில்லியர்ட்ஸ் ஆட்டத்தில் ஒரு முறை உண்டு. எந்த ஒரு காயையும் நேரடியாகக் குழிக்குள் தள்ளக் கூடாது. ஒரு வெள்ளைக்காயின் உதவியுடன் தான் தள்ள வேண்டும். கரம் ஆட்டத்தில் அப்படியில்லை. நேரிடையாகத் தள்ளலாம்.

வாழ்க்கையிலும் இப்படித் தான். வீட்டிலேயே தினமும் பார்க்கிறோம். அப்பாவிடம் ஒன்றைச் சாதித்துக் கொள்ள வேண்டும் என்றால் அம்மா தான் உதவ வேண்டியிருக்கிறது. நேரம் பார்த்து மூடு பார்த்துக் காதில் போடுவதோடு பிள்ளைகளின் கோரிக்கைகள் எந்த அளவிற்குச் சரியானது என்பதை எடுத்துச் சொல்லவும் அம்மாவால் முடிகிறது.

டாக்டர் தொழிலில் என்ன வியாதி என்று கண்டுபிடிப்பது தான் கஷ்டம் என்றும் , அதைக் கண்டுபிடித்துவிட்டால் அதுவே பாதிக்குணம் ஆனது போல என்றும், அதன் பிறகு கத்துக் குட்டி டாக்டரால், கூட அந்த வியாதியைக் குணப்படுத்திவிட முடியும் என்றும் சொல்வதுண்டு.

யார் எதற்கு மசிவார்கள்; யாருக்கு மசிவார்கள் என்பதை முதலில் சரிவர எடை போட்டு விடுவோமேயானால் அதுவே பாதிக் காரியம் முடிந்த மாதிரித்தான்.

நாம் அணுகும் எந்தக் காரியமும் உடனே நடந்துவிடும் என்று சொல்வதில்லை. சில படிப்படியாக ஆகும். சில நத்தை வேகத்திலும் ஆமை வேகத்திலும் ஆகும். இதற்கிடையில் சம்பந்தப்பட்டவர்களுக்கு உற்சாகம் குறைந்து போகும். அந்த நேரத்தில் அவர்களுக்கு குளுக்கோஸ் தருபவர்களாக இருப்பவர்கள் யார் தெரியுமா? நாம் அணுகும் இந்த இடைப்பட்ட மனிதர்களே ! இவர்கள் நினைவுபடுத்தினால் காரியம் துரிதப்படும். மாறாக, நேரிடையாகத் துரிதப்படுத்தினாலோ, எரிச்சலடைவார்கள்.

மிக வேண்டியவர்கள் என்றும் ஓரளவு வேண்டாதவர்கள் என்றும் பிரித்துப் பார்த்துப் பழகும் மனித சுபாவத்தை நாம் சரிவரப் பயன்படுத்திக் கொள்வது தான் நல்லது. ஒரு காரியத்தை நேரிடையாக அணுகினால் தான் நல்லது என்பதில் கருத்து வேறுபாடு இல்லை. ஆனால் காரியம் நிச்சயம் ஆக வேண்டும்- வம்பே வேண்டாம் என நினைக்கும் விடயங்களில் இடைப்பட்டவர்களைப் பயன்படுத்திக் கொள்வதில் தவறில்லை.

இதற்குக் காரணம் இருக்கிறது.

நேரிடையாக மோதி நடவாமல் போய் விடுகிறது என்று வைத்துக் கொள்வோம். அதன் பிறகு யாரை வைத்தாலும் நடவாது என்கிற சூழ்நிலை உருவாகிவிடலாம்.

இடையில் எவரும் தேவையில்லை என்று நினைப்பதில் ஓர் அசௌகரியம் இருக்கிறது. அதாவது நம்மைப் புறக்கணித்துவிட்டு இவர்கள் நேரிடையாக அணுகுகிறார்களே என்ற நினைப்பு இவர்களுக்குள் வெறுப்பை வளர்க்கிறது. இந்த நிலையில் இவர்கள் நமக்கே வில்லன்களாகி விடுகிறார்கள்.

யாரை வைத்து ஒன்றைச் சாதித்துக் கொள்ள வேண்டுமோ, அவர்களைக் கொண்டே அதைக் கெடுத்துக் கொள்வதாவது?

**லேனாதமிழ்வாணன்**

# க.பொ.த. (சா/த) பரீட்சை- 2016

# மாதிரி வினாத்தாள்

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்- பகுதிI

ஒரு மணித்தியாலம்

21) தரவுத்தள முகாமைத்துவ மென்பொருளில் வினவல் (query) பற்றிய கூற்றுக்களில் சரியானது
A.இங்கு தரவுகளை வரிசைப்படுத்த முடியும்
B.தேவைக்கேற்ற வகையில் தரவுகளைப் பிரித்தெடுக்க முடியும்
C.தரவுகளை அறிக்கைப்படுத்த முடியும்
1) A,Cமட்டும் 2) A,Bமட்டும்
3) B,Cமட்டும் 4) A,B,C எல்லாம்

**அருகில் காட்டப்பட்டுள்ள பாய்ச்சற் கோட்டுப்படத்தை பயன்படுத்தி 22 தொடக்கம் 24 வரையான வினாக்களுக்கு விடை தருக.**

22) பாடசாலை ஒன்றில் பழைய புத்தகங்களை மாணவர்கள் வைத்துள்ளதுடன் பாடசாலைக்கு வராத நாட்களின் எண்ணிக்கை 5 நாட்களுக்குட்பட்டதாகவும் இருப்பின் அவர்களிற்குப் புதிய புத்தகங்கள் வழங்கப்படும், அல்லாவிடில் பழைய புத்தகங்கள் வழங்கப்படும்.

22) Yes,ob "புதிய புத்தகத்தைக்கொடு","பழைய புத்தகத்தைக்கொடு" என்னும் பதங்களை முறையே வகைகுறிப்பது
1) A,B,D,C 2) B,A,C,D
3) C,A,B,D 4) A,B,C,D

23) மேற்குறித்த பாய்ச்சல் கோட்டுப்படத்தில் பயன்படுத்தப்படும் கட்டுப்பாடு கட்டமைப்புகள்
X-தொடர்(Sequence) Y-தெரிவு (Selection) Z-Loop
1) X,Z 2) Y,Z
3) Z,Y 4) X,Y

24) ab எனக் குறிப்பிட்டதற்குப் பொருத்தமான தரவுவகை யாது?
1) String 2) Integer
3) Boolean 4) Real

25) அருகில் காட்டப்பட்டுள்ள போலிக் குறிமுறையின் வருவிளைவு யாது?
1) 21 2) 20
3) வெளியீடு இல்லை 4) 15

26) வினா 25 இல் குறிப்பிடப்பட்டுள்ள போலிக்குறிமுறையில் உள்ள தடம் எத்தனை தடவை செயற்படும்?
1) ஒருபோதும் செயற்படாது 2) 1 தடவை
3) 2 தடவை 4) 3 தடவை

27) m=7,n=3 ஆயின் m mod n பெறுமதி யாது?
1) 2 2) 3
3) 1 4) 7

28) முறைமை அபிவிருத்தியில் பயனர்களின் தேவைப்பாடுகளை மிகக் கூடுதலானவர்களிடம் இருந்து பெற்றுக்கொள்வதற்குப் பயன்படுத்தப்படும் தரவு சேகரிப்பு நுட்பம்
1) நேர்காணல் 2) வினாக்கொத்து
3) ஆவணங்கள் 4) அவதானிப்பு

29) சொல்முறை வழிப்படுத்தல் மென்பொருளில் சேமிக்கப்பட்ட கோப்பு ஒன்றில் சில மாற்றங்களை மேற்கொண்ட பின்னர் வேறொரு இடத்தில் சேமிப்பதற்குப் பயன்படுத்தப்படும் பொருத்தமான முறை
1) copy and paste 2) FileSave AS
3) Ctrl+S 4) மேற்கூறிய எதுவுமல்ல

30) சொல்முறை வழிப்படுத்தல் மென்பொருளில் எழுத்து ஒன்றினை தட்டச்சு செய்தல்,சொல்லொன்றினை உருவாக்குதல்,பந்தியொன்றினை உருவாக்குதல் போன்ற செயற்பாடுகளுக்கு முறையே பயன்படுத்தப்படும் விசைப்பலகைச் சாவிகள்
1) விசைச்சாவி,Spacebar,Tab
2) விசைச்சாவி,Tab,Spacebar
3) Enter Key,Spacebar,விசைச்சாவி
4) விசைச்சாவி,Spacebar,Enter Key

31) வலையமைப்பில் இணைக்கப்பட்ட கணனியொன்றை அடையாளம் காண்பதற்குப் பயன்படுத்தப்படும் தனிச்சிறப்பான எண்
1) Web address 2) Password
3) Email address 4) IP address

32) இணையத்தளம் ஒன்றின் சகல விடயங்களையும் உள்ளடக்கிய பக்கம் யாது?
1) Default page 2) Home page
3) All page 4) Web page

33) IPV6 இல் பிற்றுக்களின் எண்ணிக்கை யாது?
1) 32 2) 64
3) 128 4) 16

34) இணையத்தளத்தில் தரவுகளை வழங்குவதற்காக கட்டளைகளுக்குக் காத்திருக்கும் கணனி எவ்வாறு அழைக்கப்படும்?
1) பயனர் 2) கணனி
3) இணையத்தளம் 4) சேவையகம்

35) இணையத்தில் இணைக்கப்பட்ட கணனிகளில் இணையத்தளத்தினைப் பார்வையிடுவதற்கு மிக அவசியமானது
1) ISP 2) Web Server
3) வலை மேலோடி 4) ADSL

36) பயனர் ஒருவர் மின்னஞ்சல் ஒன்றினைத் திறக்கும் போது கவனிக்க வேண்டிய விடயங்களில் பொருத்தமானது
A-இணைக்கப்பட்ட விடயங்களை ஸ்கான் செய்து தரவிறக்கி பயன்படுத்தல்
B-இணைக்கப்பட்ட விடயங்களை தரவிறக்காதுவிடல்
C-இணைக்கப்பட்ட விடயங்களினை அழித்துவிடுதல்
1) A மட்டும் 2) B மட்டும்
3) C மட்டும் 4) Aயும் Bயும்

37) பின்வருவனவற்றில் வலையமைப்புகளில் தரவுகளினை மிக வேகமாக ஊடுகடத்துவதற்குப் பயன்படுத்தப்படும் வடம் எது?
1)முரச்சு வடம் 2)முறுக்குக் கம்பிச்சோடி
3)ஒளியியல் நார் 4)நுண்ணலைகள்

38) தொலைபேசி உரையாடல்......................தொடர்பாடலுக்கு உதாரணமாகும்.
1)ஒருவழி 2)முழு இருவழி
3)அரை இருவழி 4)மேற்கூறிய எல்லாம்


39) இணையப்பக்கத்தில் குறித்த ஒரு பகுதியை அழுத்தும் போது (Click) அது வேறொரு பக்கத்திற்கு அல்லது பக்கத்தில் குறித்த இடத்திற்கு செல்வதற்குப் பயன்படுத்தப்படும் HTML tag எது?
1) <ahref "URL"> 2) <A URL= "href">
3) <arc.= "URL"> 4) <AURL= "SRC">

40) HTML பற்றிய சரியான கூற்று எது?
1)HTML என்பது கணனி மொழியாகும்
2)இது இணையப் பக்கங்களை வடிவமைப்பதற்கு பயன்படுத்தப்படும் அடிப்படை மொழியாகும்
3)இதனை மட்டும் பயன்படுத்தி இயங்கும் நிலையிலுள்ள இணையத்தளம் நிலையான இணையத்தளம் அமைக்க முடியும்
4)மேற்கூறிய எதுவுமல்ல.

## தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல்- பகுதிII

◆ **முதலாம் வினாவும் வேறு நான்கு வினாக்களும் உட்பட ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**

01. (i) பெருமளவான தரவுகளை Back up செய்வதற்குப் பொருத்தமான தேக்கச் சாதனங்கள் 2 தருக.
(ii) Laser printer பயன்படுத்துவதன் இரு அனுகூலங்கள் தருக?
(iii) பின்வரும் கோப்புகளை நிலையான படக்கோப்புகள்,நகரும் படக்கோப்புகள் என வகைப்படுத்துக.
abc.jpg, efg.flv, egg.mov
(iv) இணையத்தளங்களை உருவாக்குவதற்கான பிரயோக மென்பொருட்கள் (Web development softwares) இரண்டு தருக?
(v) தகவல் முறைமை அபிவிருத்தியில் முறைமை வடிவமைப்பு கட்டத்தில் உள்ள இரு வடிவமைப்புக்களைக் குறிப்பிடுக?
(vi) HTML இல் ஆரம்ப ஒட்டு,முடிவு ஒட்டு பயன்படுத்தப்படுகின்றன.முடிக்க அவசியமற்ற ஒட்டுகள் இரண்டு தருக?
(vii)




◆ மேலே காட்டப்பட்டுள்ள தர்க்கப் படலையின் வருவிளைவின் தர்க்கக் கோவையினைத் தருக
(viii) QWERTY விசைப்பலகையில் பார்வையற்றவர்களுக்காக உருவாக்கப்பட்டுள்ள வசதி யாது?
(ix) இயங்கு தளத்தில் பயன்படுத்தப்படும் வரையியல் பயனர் இடைமுகத்திற்கும் கட்டளைக் கோட்டு இடைமுகத்திற்கும் இடையிலான வேறுபாடு யாது?
(x)கணனியினைத் தொடர்ந்து பயன்படுத்துவதனால் ஏற்படும் அசௌகரிய நிலைகளை நிவர்த்தி செய்வதற்குப் பயன்படுத்தும் இரு வழிகளைத் தருக.

02. ICT பாடத்தில் நன்கு தேர்ந்த மாணவி கலா தனது பாடசாலையில் வெவ்வேறு இடங்களில் கணனி காணப்படுவதனையும் கல்லூரி அலுவலகத்தில் மட்டும் கணனியுடன் அச்சுப்பொறி காணப்படுவதையும் பாடசாலை தரவுகள் ஒழுங்கற்ற முறையில் பேணப்பட்டு வருவதால் தரவுகளை உடனுக்குடன் எடுப்பதில் சிரமம் ஏற்படுவதனையும் அவதானித்தார்.

16 ஆம் பக்கம் பார்க்க...

15 ஆம் பக்கம் தொடர்ச்சி...)

(i) கலாவினால் பாடசாலையில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் இரண்டு தருக.
(ii) மேலே (i) இல் குறிப்பிட்ட இடர்பாடுகளுக்குரிய தீர்வினை முன்வைக்குக?
(iii) பொதுவாக கணனிகளை இணைப்பதற்குப் பயன்படுத்தப்படும் வலையமைப்பு இடத்தியல்கள் (Topology) எவை?
(iv) தரவுகளை ஒழுங்குபடுத்திப் பேணுவதற்குப் பயன்படுத்தப்படும் மென்பொருட்கள் இரண்டு தருக?
(v) தரவுகளை கணனிமயப்படுத்துவதனால் ஏற்படும் நன்மைகள் இரண்டு தருக.

03. கீழே தரப்பட்டுள்ள விரிதாளானது உலகின் வெவ்வேறு நாடுகளின் குடித்தொகையையும் இணையப் பயனர்களின் எண்ணிக்கையையும் கொண்ட புள்ளி விபரங்களைக் காட்டுகின்றது.

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| 1 | | | | | |
| 2 | | உலக பிரதேசங்கள் | குடித்தொகை | இணையப்பயனர்கள் | இணையஊடுருவல்வீதம் |
| 3 | | ஆபிரிக்கா | 1,073,380,925 | 167,335,667 | |
| 4 | | ஆசியா | 3,922,066,987 | 1,076,681,059 | |
| 5 | | ஐரோப்பா | 820,918,446 | 518,512,109 | |
| 6 | | மத்திய கிழக்கு | 223,608,203 | 90,000,455 | |
| 7 | | லதீன் அமெரிக்கா | 593,688,638 | 273,785,413 | |
| 8 | | அவுஸ்திரேலியா | 35,903,569 | 254,915,745 | |
| 9 | | மொத்தம் | | | |
| 10 | | | | | |

(i) மொத்த உலகக் குடித்தொகையைக் கணிப்பதற்கு பின்வரும் வடிவமைப்பிலுள்ள சூத்திரம்(Function) கலம் C9 ல் எழுதுக.
(ii) நிரை D யில் தரப்பட்டுள்ள தரவுகளினை அடிப்படையாகக் கொண்டுஓர் உலக பிரதேசத்தின் அதிகூடிய இணையப் பயனர்களின் எண்ணிக்கையைக் கணிப்பிடுவதற்கு பயன்படுத்தும் செயலியின் (Function) பெயரை எழுதுக.
(iii) ஒரு தரப்பட்ட உலக பிரதேசத்திற்கு இணைய ஊடுருவல் வீதத்தைக் கணிப்பதற்கு பின்வரும் சூத்திரத்தைப் பயன்படுத்தலாம்.
இணைய ஊடுருவல் வீதம்= (இணையப் பயனர்கள்/குடித்தொகை) *100
ஆபிரிக்கா நாட்டின் இணைய ஊடுருவல் வீதத்தை (penetration rate) கணிப்பிடுவதற்கு கலம் E3 இல் நுழைக்க வேண்டிய சமன்பாட்டை எழுதுக
(iv) உலகின் ஏனைய பிரதேசங்களின் இணைய ஊடுருவல் வீதங்களைக் கணிப்பதற்கு சூத்திரத்தைக் கைமுறையாக தனித்தனிக் கலங்களில் நுழைக்காமல் கணிக்கும்படி ஆசிரியர் உங்களைக் கோருவதாகக் கருதுக.
இக்கொள் பணியை நிறைவேற்றுவதற்குரிய படிமுறைகளைத் தருக

04. பின்வரும் அட்டவணையானது பாடசாலை ஒன்றில் பாடங்கள் மற்றும் ஆசிரியர்கள் கற்பிக்கும் பாடம் சம்பந்தப்பட்ட அட்டவணையாகும்.

அட்டவணை கற்பிக்கும் பாடம்


| Tr No | S No | Class |
|---|---|---|
| 20 | S1 | 11A |
| 20 | S3 | 11C |
| 23 | S3 | 11A |
| 23 | S4 | 11B |
| 25 | S2 | 11D |

அட்டவணை: பாடம்

| S No | Subject |
|---|---|
| S1 | Maths |
| S2 | Science |
| S3 | Tamil |
| S4 | ICT |
| S2 | English |

(i) மேற்தரப்பட்ட அட்டவணைகளின்முதன்மைச்சாவிமற்றும்வெளிச்சாவிகளினைதருக
(ii) முதன்மைச் சாவியின் பண்புகளினைத் தருக?
(iii) 11A யில் கற்பிக்கும் ஆசிரியர்களை கற்பிக்கும் பாடம் எனும் அட்டவணையிலிருந்து பெற்றுக் கொள்ள பயன்படுத்தப்படும் தரவுத்தள கூறு யாது?
(iv) தரவு மிகைமை/ பிரதிபண்ணப்பட்ட தரவுகளினால் ஏற்பாடு தாக்கம் யாது?

05. (i). a) இப்பாய்ச்சற் கோட்டுப்படத்தின் வருவிளைவு (output), தீர்மானம் (decision), வருவிளைவு (ouput) ஆகியவற்றைத் தருக
b) இதில் பயன்படுத்தப்பட்ட மாறியிற்கான VB மாறி பிரகடனம் யாதாக இருக்கும்.




(ii)
```
SUM:=O;
X:=1;
while x<=5do
begin
    SUM:=SUM+X;
    X:=X+1;
end;
write (SUM);
```
a. இதன் வெளியீடு யாது?
b. இவ்வெளியீட்டினை 2,4,8,10 என பெற்றுக் கொள்ள போலிக் குறியீட்டில் என்ன மாற்றத்தினை மேற்கொள்ள வேண்டும்.

06. இணையமானது கணனி வலையமைப்பின் ஒரு வலையமைப்பு ஆகும். இது நாடளாவிய மக்களிடையே பெரிதும் பிரபல்யம் அடைந்து வருகின்றது. அத்துடன் நாளுக்குநாள் இணையத்தளங்களும் பல மென்பொருட்களைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டு வருகின்றது. இந்த வகையில் எமது பாடசாலை கீழ்க் குறிப்பிட்ட மாதிரியான இணையத்தளமொன்றினை வடிவமைக்க எண்ணியுள்ளோம். இவ்வாறு இணையத்தளத்தினால் ஏற்படும் நன்மைகள் பற்றி பாடசாலை அதிபர் உரையாற்றினார்.

| School Name | |
|---|---|
| Logo | Vision |
| | Mission |
| Principal Message | |

(i) பாடசாலைக்கு இணையத்தளமொன்றினை அமைப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் 2 தருக?
(ii) பாடசாலை தொடர்பாக இணையப்பக்கம் ஒன்றினை அமைப்பதனால் பாடசாலை பெறும் 2 நன்மைகள் தருக?
(iii) HTML Tags ஐப் பயன்படுத்தி படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு அட்டவணையினையுடைய இணையப் பக்கமொன்றினைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் HTML Coding ஐத் தருக.

குறிப்பு:-
◆ Table (Align,colspan,Rowspan)
◆ Loga (D: / Pictures / Loga.jpg)

07. (i) தேடு பொறி என்றால் என்ன? உதாரணம் இரண்டு தருக?
(ii) அண்மைக்காலமாக Face book இல் இணையும் பயனர்களின் எண்ணிக்கை நாளிற்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளது. இதில் பாடசாலை மாணவர்களும் அதிகளவில் இணைந்துள்ளனர். அதனால் இவர்கள் கல்விச் செயற்பாட்டில் ஏற்படும் சாதக, பாதகங்கள் 3 தருக.
(iii) கணனியின் பாவனை அதிகரிக்க அதிகரிக்க பாவனையாளர்களின் சுகாதாரப் பிரச்சினைகளும் அதிகரிக்கின்றன. நீண்ட நேரம் கணனியில் வேலை செய்யும் ஒருவர் எவ்வாறு இந்த சுகாதாரப் பிரச்சினைகளை நிவர்த்தி செய்யலாம்?
(iv) உமது கணனி வைரஸ் பாதிப்பிற்கு உட்பட்டுள்ளது என நீர் கருதுகின்றீர். எவ்வாறு அவற்றினை அகற்ற முடியும் என விளக்குக?

◆ ◆ ◆

# கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சை மாதிரி வினாப்பத்திரம்-2016

## விஞ்ஞானம்-I ஒரு மணித்தியாலம்

★ சகல வினாக்களுக்கும் விடை தருக.
★ இலக்கம் 1 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள (1), (2), (3), (4) ஆகிய விடைகளில் சரியான அல்லது மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.
★ விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்பட்டுள்ள தாளில் ஒவ்வொரு வினாவிற்காகவும் தரப்பட்டுள்ள கூட்டங்களில் நீங்கள் தெரிவுசெய்த விடையுடன் பொருந்தும் கட்டத்தினுள் (X) அடையாளமிடுக.

01) உமிழ்நீரில் காணப்படும் சமிபாட்டு நொதியம் பின்வருவனவற்றுள் எது?
1) அமைலேஸ் 2) இலிப்பேஸ்
3) மோல்ரேஸ் 4) இலக்ரேஸ்

02) ஒருபாற்பூக்கள் தோன்றுவது பின்வரும் எந்தவொரு தாவரத்தில் ஆகும்
1) பயற்றை 2) இந்திரபுஸ்பம்
3) தேங்காய் 4) அகத்தி

03) $O^{2-}$ அயனின் இலத்திரன் நிலையமைப்பு
1) 2, 6 ஆகும் 2) 2, 8 ஆகும்
3) 2, 8, 6 ஆகும் 4) 2, 8, 8 ஆகும்

04) நைதரசன் கழிவுப்பொருட்களை குருதியினூடக சிறுநீரகத்தை நோக்கி எடுத்துச்செல்லப்படும் குருதிக்கலன்
1) சிறுநீரகநாடி 2) சிறுநீரகநாளம்
3) புடைதாங்கி நாடி 4) கீழ்ப்பெருநாளம்

05) ஆர்முடுகலை அளக்கும் அலகு
1) m ஆகும் 2) $ms^{-1}$ ஆகும்
3) $ms^{-2}$ ஆகும் 4) $Nm^{-2}$ ஆகும்

06) சாதாரண நிபந்தனைகளின்கீழ் தூயநீரின் கொதிநிலை
1) 0 K ஆகும் 2) 100 K ஆகும்
3) 273 K ஆகும் 4) 373 K ஆகும்

07) காபன்மின்வாய்கள் இரண்டை பயன்படுத்தி சோடியம்குளோரைட்டு நீர்க்கரைசல் மின்பகுக்கப்படுகின்றது. அனோட்டில் வெளிப்படும் வாயு
1) ஒட்சிசன் 2) குளோரின்
3) ஐதரசன் 4) நைதரசன்

08) இரண்டாம் ஆவர்த்தன மூலகங்களின் முதலாம் அயனாக்கற்சக்தி தொடர்பான கூற்றுக்களில் சரியானது
1) முதலாம் அயனாக்கற்சக்தி நேயனுக்கே அதிகமானதாகும்.
2) முதலாம் அயனாக்கற்சக்தி இலித்தியத்திற்கே அதிகமானதாகும்.
3) பெரிலியத்திலும் பார்க்க போரனுக்கு முதலாம் அயனாக்கற்சக்தி அதிகமாகும்.
4) காபனிலும் பார்க்க நைதரசனுக்கு முதலாம் அயனாக்கற்சக்தி குறைவாகும்.

09) எளிய நுணுக்குக்காட்டியில் பயன்படுத்தப்படுவது
1) குவிவாடி 2) குழிவுவில்லை
3) குழிவாடி 4) குவிவுவில்லை

10) ஆடலோட்ட மின்னோட்டத்தை அரையலைச் சீராக்கிக் கொள்வதற்காக பயன்படுத்துகின்ற கட்டமைப்பு
1) திரான்ஸ்சிஸ்ரர் 2) இருவாயி
3) கொள்ளளவி 4) தடை

11) உணவுச்சமிபாட்டில் இலிப்பிட்டுக் குழம்பாக்கத்திற்காக தேவைப்படும் பித்தத்தை உருவாக்கும் அங்கம் பின்வருவனவற்றில் எது?
1) பித்தப்பை 2) ஈரல்
3) சதையி 4) குடற்சுவர்

12) பின்வருவனவற்றுள் அலகற்ற பௌதிக காரணியாவது
1) அணுத்திணிவு 2) சாரணுத்திணிவு
3) மூலர்த்திணிவு 4) கரைதிறன்

மிகுதி திங்கள் தொடரும்

# நீரிழிவு தினத்தை முன்னிட்டு நடை பவனியும் கருத்தரங்கும்

நீரிழிவு தினத்தினை முன்னிட்டு லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் நீரிழிவு விழிப்புணர்வு நடைபவனியும் கருத்தரங்கும் நேற்று வடமராட்சியில் நடைபெற்றது.

நேற்றுக் காலை 8.45 மணியளவில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை முன்றலில் இருந்து நடைபவனி ஆரம்பமானது.



(படங்கள் - கரணவாய் செய்தியாளர்)



லயன்ஸ் கழக நூற்றாண்டு ஆளுநர் வை. தியாகராசா தலைமையில் நடை பெற்ற நடைபவனியில் பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த. ஜெயசீலன், கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சிவசிறி, மருதங்கேணிபிரதேச செயலர் கே. கனகேஸ்வரன் , கரவெட்டிப் பிரதேச சபை செயலாளர் அ. வினோராஜ் , சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்தியர் இ.கேதீஸ்வரன், மாகாணசபை உறுப்பினர்களான எஸ். அகிலதாஸ் ,வி. சிவயோகம், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர் கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், பொலிஸார், பாடசாலை அதிபர்கள், லயன்ஸ் கழகத்தினர், பொலிஸார்,நீரிழிவு நோயாளர்கள், பொது மக்கள் என நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் இருந்து ஆரம்பமான நடைபவனி பருத்தித்துறை யாழ்.வீதி வழியாகச் சென்று நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலயத்தில் முற்பகல் 10 மணியளவில் நிறைவடைந்தது.

ஆலய திருமண மண்டபத்தில் கருத்தரங்கு இடம் பெற்றது. இதில் நீரிழிவு நோயாளர்களிற்கான மருத்துவ பரிசோதனை , வறுமைக் கோட்டிற்குட்ட பாடசாலை மாணவர்களிற்கு மூன்று துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன.

அந்தணக் குடும்பம் ஒன்றிற்கு வாழ்வாதார உதவியாக பசுமாடு ஒன்றும் உணவுக்காக 10 000 ரூபா பணமும் வழங்கப்பட்டது. மேலும் பயன் தரும் மரக்-கன்றுகளும் இலைக் கஞ்சியும் , நீரிழிவு நோயாளர்களிற்கான பிஸ்கட்டும் வழங்கப்பட்டது. அத்துடன் லயன்ஸ் கழகத்திற்கு நிதி உதவியும் வழங்கப்பட்டன. (இ-60)


## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

**தேவராசா சஞ்சாயினி**

பிறப்பு 23 05 2000

இறப்பு 01 12 2015

எங்கள் வீட்டின் சங்கீத நாமம்
சஞ்சு நீதானே...
அன்பெனும் பூ மழையால்
நனைத்தவளும் நீதானே...
எங்களுக்கு ஒளி தந்த
நிலவும் நீதானே...
தெய்வம் தந்த
பூவும் நீதானே....
உற்றத்தார் தூக்கி அணைத்த
பெண்ணும் நீதானே...
கள்ளம் கபடமற்ற
மனமும் நீதானே...
உன்னை பிரிந்து நாம் கண்ணீர் கடலில் தத்தளிக்க
பன்னிரெண்டு மாதங்கள் எம்மை விட்டு
தன்னந்தனியாக எங்கே சென்றாய்....



(6645)


3 ஆம் யூனிற், முரசுமோட்டை,
கிளிநொச்சி.

தேவராசா குடும்பத்தினர்.


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 904

Search for people, places and things | Nagendram | Home

யேசுதா




பத்மராஜி

வாழ வைப்பவன் இறைவன்,
வாழத் தெரிந்தவன் மனிதன்,
விழ வைப்பவன் துரோகி,
தூக்கி விடுபவன் நண்பன்.

விமலேந்திரன்



பொலிஸ்:-ஏன்யா உன்னோட காரை
இரண்டு வீல்ல ஓட்டிட்டு வந்தே? குடிச்சிருக்கியா?
வண்டிக்காரன்:-ஐயோ குடிக்கல சார்
பொலிஸ்:-அப்புறம் ஏன்யா இரண்டு வீல்ல கார
ஓட்டிட்டு வர்றே?
வண்டிக்காரன்:-அது வந்து சார் எங்கிட்ட
டூவீலர் லைசன்ஸ் தான் இருக்கு.
அதான் இரண்டு வீல்லயே
ஓட்டிட்டு வந்தேன்.நான் சட்டத்த மதிக்கிறவன் சார்.

டிம்பிள்




பரிமளா




றொசாந்தன்

**இதை படிங்க !**
**விழுந்து விழுந்து சிரிங்க !**

பாகிஸ்தான் டிவி செய்தி: நிலாவில் தண்ணீர் இருப்பது மட்டுமல்ல, திமிங்கலம், சுறா போன்ற மீன் இனங்கள் இருப்பதும் பாகிஸ்தான் அனுப்பிய சாட்டிலைட் மூலம் தெரிய வந்திருக்கிறது.

பிபிசி செய்தி: பாகிஸ்தான் அனுப்பிய சாட்டிலைட் அரபிக் கடலுக்குள் கிடப்பது தெரிய வந்திருக்கிறது.

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இலங்கையர் உண்டு சுவைக்க திராட்சையை அறிமுகப்படுத்திய எம்.பி. க. துரைரத்தினம்

கதிரிப்பிள்ளை துரைரத்தினம் 1930 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம்.10ஆம் திகதி தொண்டைமானாற்றில் பிறந்தார். இவர் தனது இடைநிலைக் கல்வியையும் உயர்தரக்கல்வியையும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் கற்றுக்கொண்டிருந்தபொழுதே தனது குடும்ப வறுமை காரணமாக 17 ஆவது வயதில் எழுதுவினைஞராகச் சில காலம் சேவையாற்றினார். பின்னர் அந்தப்பதவியை விட்டு பேராதனைப்பல்கலைக் கழகத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டு தனது கலைமாணிப்பட்டத்தைப் பூர்த்தி செய்தார். பல்கலைக்கழகத்தில் இருந்து வெளியேறியதும் பருத்தித்துறை புலோலி வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் ஒரு ஆசிரியராகத் தனது பணியை ஆரம்பித்தார். ஆசிரியராகக் கடமையாற்றும் பொழுதே தந்தை செல்வாவின் கொள்கைகளின் ஈர்ப்பினால் இலங்கைத் தமிழரசுக் கட்சியில் தன்னை ஒரு தீவிர அங்கத்தவராக இணைத்துக் கொண்டு அப்பொழுதே மிகவும் விசுவாசமாகத் தமிழ் தேசியத்திற்காக உழைக்கத் தொடங்கினார். அன்று தொடக்கம் துரைரத்தினம் எந்தவித பிரதிபலனையும் எதிர்பார்க்காது, தந்தை செல்வாவின் அன்புக்குரிய ஒரு தொண்டனாகத் தனது அரசியல் வாழ்க்கையை ஆரம்பித்தார்.

1960 ஆம் ஆண்டு வரை வேலாயுதம் ஆங்கிலப் பாடசாலையில் தற்பொழுது மகா வித்தியாலயமாக அழைக்கப்படுகின்றது. அங்கு ஆசிரியராகக் கடமையாற்றிய-பொழுதே, சட்டக்கல்வியை கொழும்பு சட்டக்கல்லூரியில் பூர்த்தி செய்து சட்டத்தரணியாகவும் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

தந்தை செல்வா 1956 இல், அவரை பருத்தித்துறைத் தேர்தல் தொகுதியில் தமிழரசுக் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிட வைத்தார். ஆனால் அவரது அரசியல் அனுபவமும் பொது மக்களிடையேயான அறிமுகமும் இல்லாததால் அந்தத் தேர்தலில் அவரால் வெற்றி பெற முடியாது போய்விட்டது. பின்னர் நடந்த தேர்தல்களில் குறிப்பாக மார்ச் 1960, ஜுலை 1960, மார்ச் 1965 மற்றும் மே 1970 பாராளுமன்றத் தேர்தல்களில் போட்டியிட்ட துரைரத்தினம் வெற்றி பெற்று பாராளுமன்ற உறுப்பினராக நீண்டகாலம் சேவையாற்றினார்.

அமரர் துரைரத்தினம் தமிழரசுக் கட்சியினால் 1961 இல் ஏற்பாடு செய்த சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஒரு முக்கிய பங்கை வகித்ததுடன் பொலிஸாரினால் மிலேச்சத்தனமாகத் தாக்கப்பட்டுமிருந்தார்.அமரர் துரைரத்தினம் அரசியலில் எவ்வளவு கண்ணியமானவராகவும் தமிழ்த் தேசிய உணர்வுடனும் வாழ்ந்தாரோ அந்த அளவுக்கு யாழ்ப்பாணத்தின் பொருளாதாரத்தின் மீதும் அக்கறையுடன் செயற்பட்டார். ஒரு தடவை இஸ்ரேலின் அரசியல் பொருளாதார அமைப்பை ஆய்வு செய்வதற்காக சில பாராளுமன்ற உறுப்பினர்களின் குழு ஒன்று சுற்றுலாவை மேற்கொண்டிருந்த பொழுது அந்தக் குழுவில் க.துரைரத்தினமும் ஒருவராகச் சென்றிருந்தார்.அவர் அங்கே நின்ற நாட்களில் யாழ்ப்பாணத்தின் புவியியல் சூழல் நிலைமைகளைக் கொண்டிருந்த இஸ்ரேலில் நன்கு செழித்து வளர்ந்திருந்த திராட்சைப் பழச்செடிகளைப் பார்த்ததும் அவற்றை எமது பிரதேசத்தில் கொண்டு போய் அறிமுகப்படுத்துவதில் ஆர்வத்துடன் இருந்ததால் அங்குள்ள விவசாய பொருளாதார அமைச்சுடன் தொடர்பு கொண்டு திராட்சைப் பயிர்ச் செய்கை தொடர்பான நுட்பங்களை அறிந்து கொண்டார். அவர் இஸ்ரேலில் இருந்து திரும்பும் பொழுது விமான நிலையத்தில் பலர் அவரைக் கேலி செய்தனர்.

அவர்களுடைய கேலிச் சொற்களையும் பொருட்படுத்தாது, இஸ்ரேலில் இருந்தும் கொண்டுவரப்பட்ட திராட்சைத் துண்டங்களை, முதலில் தொண்டைமானாற்றில் தனது உறவினர் ஒருவரின் தோட்டத்தில் நடுகை செய்து அவைப்பற்றிய பயிர்ச்செய்கை முறைகள், கத்தரித்தல், பசளையிடுதல்,பூச்சிகொல்லிகளைப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள் பற்றிய தகவல்களைச் சொல்லிக் கொடுத்து, அதன் பயன் கிடைக்கும் வரை கூடவே தொடர்ந்தும் கண்காணித்து வந்தார். அவரது அந்த முயற்சியினாலேயே இலங்கைக்கே திராட்சைப்பழம் கிடைத்தது.அங்கிருந்தே குடாநாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் திராட்சை வெட்டுத் துண்டங்களை இலவசமாக விநியோகித்து விவசாயிகள் மட்டத்தில் திராட்சைச் செய்கையைப் பரவலாக்கினார். அவரது அந்த முயற்சியின் சாதனை பற்றி ஆங்கில, சிங்கள ஊடகங்கள் உட்பட அனைத்து ஊடகங்களும் முக்கியத்துவப்படுத்தியிருந்தன. 1970 ஆம் ஆண்டில் விவசாயத் திணைக்களத்தின் மாதாந்த வெளியீடான “கமத்தொழில் விளக்கம்” சஞ்சிகை க. துரைரத்தினம் திராட்சைப்பழத்தை இலங்கையில் அறிமுகப்படுத்தியமை தொடர்பாக மிகச் சிறப்பான முறையில் ஆசிரியத் தலையங்கத்தை எழுதி அவருக்கு வாழ்த்தையும் தெரிவித்திருந்தது.

அன்று வெற்றி பெற்றவர்களில் க.துரைரத்தினமும் அமோகமான வாக்குகளால் வெற்றி பெற்று பாராளுமன்ற உறுப்பினராகப் பருத்தித்துறைத் தொகுதியில் தெரிவு செய்யப்பட்டார். ஆயினும் தமிழ் ஈழத்துக்கு ஆதரவளிப்பதில்லை என ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினர்களும் நாடாளுமன்றத்தில் சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற அரசியல் அமைப்பின் ஆறாம் திருத்தச் சட்டமூலத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் 1983 ஆம் ஆண்டின் தமிழர்களுக்கு எதிராக அரசின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்ட கறுப்பு ஜுலை வன்முறைகளில் சிங்களக் காடையர்களினால் 3000 தமிழ் மக்கள் கொல்லப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் அனைத்து தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்களும் 1983 முதல் நாடாளுமன்றத்தை ஒன்றியொதுக்கல் செய்தார்கள்.இந்த நிலையில் இலங்கை அரசின் இன ஒதுக்கல் கொள்கையை உலகறியச் செய்யவேண்டுமென்பதற்காகவும் க.துரைரத்தினமும் மற்றும் ஏனைய தமிழர் விடுதலைக்கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்களும் 1983 ஆம் ஆண்டு தொடக்கம் ஒன்றியொதுக்கல் முறையில் நாடாளுமன்றத்தைப் பகிஸ்கரித்து வந்தனர். அவர்களது பகிஸ்கரிப்பின் காரணமாக மூன்று மாதங்கள் முடிந்ததும் க.துரைரத்தினம் உட்பட ஏனைய தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஜனவரி 1984 ஆம் ஆண்டு 5 ஆம் திகதி தமது பாராளுமன்ற இருக்கைகளை இழந்து தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றினர். அன்றைய தமிழ் அரசியல் தலைவர்கள் இன்று போலல்லாது மக்களுக்காகவே மக்களுடன் வாழ்ந்து மறைந்தபோதும் அவர்கள் ஒவ்வொருவரின் பெயரும் வரலாற்றில் பதியப்பட்டுள்ளது.

1986 களில் தமிழீழ விடுதலைப் போராட்டம் முனைப்புப் பெற்ற காலத்தில் அரசாங்கத்துடனும் சில குழுக்கள் சேர்ந்து இயங்கிய போதும் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பில் பல இளைஞர்கள் தம்மை இணைத்துக் கொள்ளத் தொடங்கினர். க.துரைரத்தினத்தின் இளைய மகன் “அச்சன்” என்று செல்லமாக அழைக்கப்படும், “வண்டையலூர் பரமேஸ்வரன்” இலங்கை இராணுவத்தினது அடாவடித்தனங்களாலும் இலங்கை அரசாங்கத்தின் இனத்துவேசக் கொள்கைகள் காரணமாகவும் விரக்தி அடைந்து, தமிழ்த் தேசியத்தின் மீது கொண்ட பற்றுதலின் காரணமாக தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் “மேஜர் கமல்” என்ற பெயரில், 1985 இல் தன்னை இணைத்துக் கொண்டார். வரலாற்றுச் சமர் என்று இன்றும் பேசப்படுகின்ற நெல்லியடி மத்திய கல்லூரியின் மீதான கரும்புலித் தாக்குதலில் மில்லர் கரும்புலியாகச் செல்வதற்கு முன்னர் முன்தளப் படையணியின் போராளியாகச் சென்று வீரச்சாவைத் தழுவியிருந்தார்.அவரது இழப்பு க.துரைரத்தினத்தை பாதித்திருந்தாலும் தனது மகன் ஒரு இலட்சிய வீரனாகத் தன்னைத் தியாகம் செய்து கொண்டார் என்பதில் அவர் பெருமைப்பட்டுக் கொண்டார். தமிழ் மக்களின் விடிவுக்காகத் தனது செல்ல மகனைக் களப்பலியாக்கிய ஒரே ஒரு தலைவராக அமரர்.க.துரைரத்தினம் தான் இன்றும் மக்களின் ம்னதில் நிறைந்து நிற்கின்றார்.

பாராளுமன்ற ஆசனங்களை தனது மக்களுக்காக இழந்துவிட்ட நிலையிலும் யாழ்ப்பாணத்தின் பொருளாதாரம்,அரசியலில் விழிப்புணர்வு என்பவற்றை மக்களிடையே ஏற்படுத்தும் வகையில் பேசி, செய்தும் காட்டிய க.துரைரத்தினம் யாருமே எதிர்பார்க்காத நிலையில் அவரது சுகயீனம் காரணமாக 1995 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 23 ஆம் திகதி இயற்கைச் சாவைத் தழுவிக் கொண்டார். அவர் இறுதிநாட்கள் வரை எந்த விதமான ஏற்றத்தாழ்வுகளுமின்றி எல்லோருடனும் அன்பாகவும் பண்பாகவும் நகைச்சுவையாகவும் பழகும் துரைரத்தினம் பதவிப்போட்டிக்காக தமிழ் மக்களையும் நாட்டையும் காட்டிக் கொடுக்கும் முயற்சிகளிலும் காலத்திற்குக் காலம் கட்சிகளை மாற்றி வெவ்வேறு தலைமைத்துவத்தின் கீழ் செயற்பட்டு மக்களைக் காலத்திற்குக் காலம் ஏமாற்றிவரும் ஒரு மூன்றாம் தர அரசியல்வாதியாகவும் என்றுமே அவர் செயற்பட்டதில்லை. அதனாலேயே அவரது பெயர் இன்றும் தமிழர்களின் அரசியல், சமூக,பொருளாதார வரலாற்றில் நிலைத்து நிற்கின்றது. வல்வெட்டித்துறைக்கு மட்டுமல்லாது,இலங்கைத் தமிழினத்திற்கே முதலாவதாகவும் இறுதியாகவும் கிடைத்த ஒரு அரசியல் முதுசமாக விளங்கும் அமரர் க.துரைரத்தினத்தின் வெற்றிடம் இன்றும் வல்வெட்டித்துறையின் அரசியலில் மட்டுமின்றி வடமாகாண அரசியலிலும் காணப்படுகின்றது.

**வல்வை.ந.அனந்தராஜ்**

# தமிழ் சினிமா வரலாறு

## 29 வயதில் கல்யாண சுந்தரம் மறைந்தார் 303

**கண்ணதாசன் புகழாரம்**

பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் ஆற்றலை கவிஞர் கண்ணதாசன் புகழ்ந்து பாராட்டியுள்ளார். ஒரு கட்டுரையில் அது பற்றி கண்ணதாசன் கூறியிருப்பதாவது,

திரை உலகில் பாட்டு எழுதுவோர் வரலாம். போகலாம். ஆனால் ஒரு பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் இனி வரமாட்டான். ஆரம்பமானான் ஒரு பெண்ணுக்குள்ளே அவன் ஆடி அடங்கினான் மண்ணுக்குள்ளே! திரை உலகில் அவனே தத்துவஞானி! ஆழ்ந்த சிந்தனை. அழுத்தமான சொல்லாட்சி. ஒருவரிக்கு ஒரு வரி உயிர் கொடுக்கும் தன்மை. அவ் எழுதிய பாடல் எல்லாம் அப்படி அமைந்ததாகும்.

இவ்வாறு கண்ணதாசன் கூறி இருக்கிறார்.

**மரணம்**

புகழின் உச்சியில் இருந்த போது 1959ஆம் ஆண்டு மத்தியில் கல்யாண சுந்தரத்துக்கு மூக்கில் ஏற்பட்ட கட்டி காரணமாக உடல்நலம் பாதிக்கப்பட்டது.வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சத்திரசிகிச்சை நடந்தது.பிறகு அவர் வீடு திரும்பினார்.



பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள மணிமண்டபம்.

மறுபடியும் மூக்கில் தொந்தரவு எற்படவே அவர் சென்னை அரசு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். யாரும் எதிர்பாராத வகையில் அவர் 08.10.1959 அன்று மரணம் அடைந்தார்.

பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் மறைந்த போது அவருக்கு 29 வயதுதான். மனைவி பெயர் கௌரவாம்பாள். ஒரே மகன் குமாரவேல் 5 மாத கைக்குழந்தை.

சென்னை ராயப்பேட்டை ஜெகதாம்பாள் காலனியில் உள்ள எண் 15 வீட்டில் குடியிருந்து வந்தனர்.

பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் உடலுக்கு தி.மு.க. தலைவர் கருணாநிதி, எம்.ஜி.ஆர்., சந்திரபாபு, டைரக்டர்கள் பீம்சிங்,ஏ.பி.நாகராஜன் ஆகியோர் மரியாதை செலுத்தினார்கள்.

**அரசுடைமை**

1981ஆம் ஆண்டு தமிழக அரசின் பாவேந்தர் பாரதிதாசன் விருது பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்துக்கு (மறைவுக்குப் பின்) வழங்கப்படுவதாக முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அறிவித்தார். விருது வழங்கும் விழாவுக்கு கல்யாண சுந்தரத்தின் மனைவி கௌரவாம்பாள் வந்திருந்து விருதைப் பெற்றுக்கொண்டார்.

1995ஆம் ஆண்டு பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் பாடல்கள் அனைத்தையும் அரசுடைமை ஆக்குவதாக முதலமைச்சர் ஜெயலலிதா அறிவித்தார்.

(தொடரும்)

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்–97

### பயனில்லையென்று எதுவுமில்லை; கழிவையும் பொருளாக்கும் வழிதெரிந்தால்...

# பயன்படுத்தாத தாவரங்கள்; அன்னமுன்னாவின் மகத்துவம்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் என் இனிய உறவுகளே!**

இத்தாவர சங்கமத்தில் பயன்பாடதிகமற்ற தாவரங்கள் வரிசையில் அன்னமுன்னாவும் ஒன்றாகின்றது. அன்னமுன்னா என்பது ஒருவகை கனிகளைத் தருகின்ற ஓரளவு உயரமாக ஏறக்குறைய 8 மீற்றர்கள் வரை வளரும் தாவரமாகும். வரண்ட வலயத்திற்கான பழங்களுள் அன்னமுன்னாவும் ஒன்று. வரட்சியான காலநிலையிலும் அது சிறப்பாக வளர்ந்திருப்பதை எங்கும் நாம் காணலாம். இது ஒருவகையில் குறிப்பிட்ட காலத்தில் தான் பூப்பதும் காய், கனிகளை உருவாக்கினாலும் அதற்கான மவுசு அதிகமாக இருப்பது உண்மையே. குறிப்பாக வெளிநாட்டிலிருந்து வருகைதரும் நம்மவர்கள் தேடித்தேடி அன்னமுன்னா பழத்தை வாங்கி உண்பதனையும் அந்நாட்டில் இது கின்றோம். அன்னமுன்னாவை, அதன் மதிப்பை உணரக் கூடியவாறு அன்னமுன்னா பழங்களின் உற்பத்தியை அதிகரித்து அதனை மதிப்பேற்றஞ் செய்து புதிய உணவுப் பொருளாக ஆக்கி விட்டால் அதுவே புதிய தொழில் முயற்சிக்கான அத்திபாரமாகி விடும். தொழில் இல்லையென்றுஅவலப்படுவோருக்கு அவர் மேல் நம்பிக்கையிருந்தால் புதிய விடயங்களுக்குள் அவர் தன்னை உள்வாங்கினால் வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்.

சிவபுராணத்தில் இத் தாவர சங்கமத்தில் என விளித்த மணிவாசகப் பெரு மான் உயிரினங்களின் பல்வகைத் தன்மையை எடுத்துணர்த்தி அனைத்து உயிரினங்களுக்கும் தனித்துவமான பண்பையும் பணியையும் எடுத்துரைத்திருக்கின்றார். ஒவ்வொரு தாவரத்திற்குமுள்ள மதிப்பை நாம் உணர்ந்து கொண்டால், அதனை விரிவாக இனங்கண்டு கொண்டால் அவற்றை சுலபமாக நாம் பயன்படுத்திக் கொள்ள முடியும். பயன்பாடு தெரியாதிருக்கும் வரை எமக்கு எதுவுமே பயனற்றதுதான். இந்த மனப்பாங்கை நாம் முடிந்த வரையில் மாற்றிக் கொள்ளவேண்டும். ஒவ்வொன்றுக்கும் அதற்குரிய தனித்துவத்தை, மரியாதையை நாம் கொடுத்துவிட்டால் மாற்றம் எமக்குள்ளே முதலில் ஏற்படும். பின்னர் அது உந்து சக்தியாகி மற்றையவரையும் மாற்றி விடும். பயனற்ற தாவரங்கள் என எதுவுமில்லை. இயற்கையின் உருவாக்கத்தில் அனைத்திற்குமே இறைவன் உரிய இடத்தைக் கொடுத்திருக்கின்றான். ஆதலால் நாம் அதனை எவ்வாறு பயன்படுத்துகின்றோம் என்பதில் அதனது முக்கியத்துவமும் தனித்துவமும் தங்கியிருக்கின்றது. எதனையும் தேவையற்றது அல்லது அவசியமற்றது என எண்ணும் தன்மையிலிருந்து நாம் மாற வேண்டும். தேவையற்றதென தெரிகின்ற பொருளை தேவைப்படும் பொருளாக மாற்றிக் காட்டவேண்டும். இயற்கையின் விந்தையை நாம் இன்னும் உணராமலேயே இருக்கின்றோம்.

தாவரங்கள் அனைத்திற்குமே சிறப்புக்களுண்டு. இத்தாவர இராச்சியத்தில் பல தாவரங்களை நாம் கண்டு கொள்வதேயில்லை. அதற்கு காரணம் அவற்றின் மகத்துவம் எமக்கு தெரியாதிருப்பதுதான். எமக்கென இயற்கை அள்ளித் தந்த தாவரங்கள் பல இருக்கின்றன. அவற்றை நாம் தெரிந்து கொண்டால் குறிப்பான அவற்றினது வலிமையை, வல்லமையை நாம் அறிந்து கொண்டால் நாம் உடனேயே பயன்படுத்தத் தொடங்கி விடுவோம். பல ஊட்டச்சத்துக்களை இலகுவாக பெறக்கூடிய விற்றமின்களைக் கொண்ட தாவரங்களை நாம் அலட்சியமாக களைக் கட்டுப்படுத்த பயன்படுத்தப்படுகின்றன. இதன் இலைகளை உரோஞ்சி அதனை கோழி வளர்க்கும் இடத்தில் பரவி விட்டால் கோழியில் தொற்றிக்கொள்ளும் பேன்கள் அகன்று விடும் என கூறப்பட்டுள்ளது. வளர்க்கும் போது அதிகம் நீர் தேங்காத இடத்தில் வளர்க்க வேண்டும். விதைமூலம் இலகுவாக வளர்க்கக்கூடிய அன்னமுன்னா ஒவ்வொரு வீட்டுத்தோட்டத்திலும் இருக்க வேண்டிய பழமரம். ஐஸ்கிறீம் வகைகள் தயாரிப்பதற்கு பயன்படுவதாக அறிய முடிகின்றது. இதனது இலையிலிருந்து பெறப்படும் ஒருவகை எண்ணெயில் ரேர்பீன்ஸ் மற்றும் செஸ்குயிரேர்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 114

அருமை பெருமையான அதிகம் விலைகூடிய பழமாக இருப்பதாகவும் கூறுகின்றனர்.

பயனில்லை என்று எதுவுமில்லை. ஒவ்வொன்றுக்குமான பயன்பாட்டை கண்டுபிடிக்க முடியாத எம்மவரின் சோம்பேறித்தனம் இது. அன்னமுன்னாவை அதிகம் சுவைக்கும் மிருகமாக அணிலைக் கூறலாம். அநேகமாக கனியும் போது அதனை விரைந்து சுவைத்து விடுவதில் அணிலுக்கு நிகராக எதுவுமில்லை. மாறாக அணிலாருக்கு தெரிந்தது எமக்கு தெரியவுமில்லை, புலப்படவுமில்லை. தேவையற்றதென்று இருப்பதனை நாம் பயன்படுத்தக் கற்றுக்கொண்டால், கண்டுபிடித்தால் தேவையேற்படின் ஆய்ந்தெடுத்தால் கல்லும் கனியாகும் கழிவும் பவுணாகும். பயனற்றது என எண்ணும் எதுவும் எமக்கு உணவாகும். இது முழுக்க முழுக்க எமக்கான முயற்சியின் போதாமைதான் காரணமேயொழிய வேறெதுவுமில்லை. விலைகூடிய பொருளாகி அனைவரையும் கவரத்தக்கதாக மதிப்புள்ளதாக இருக்கும்பொருட்களுக்கே நாம் முக்கியத்துவம் கொடுக்






தள்ளி வைக்கக் கூடாது. தாவரங்கள் ஒவ்வொன்றிற்குமுள்ள மகத்துவத்தை அறிந்து எமது அன்றாட வாழ்வில் உணவில் அதனை பயன்படுத்த தலைப்பட்டால் எமது சுக ஆரோக்கியத்தை நாம் பேணிக் கொள்ள முடியும்.

மேலே குறிப்பிட்ட தாவரங்களுள் குறிப்பிடத்தக்கது அன்னமுன்னா. இதனைCustard apple அல்லது Sugar apple எனவும் ஆங்கிலத்தில் அழைப்பர். எந்தவிதமான மண் வகையிலும் வளரக்கூடியது. உண்ணக்கூடிய சுவையான பழங்களைத் தரக்கூடிய மரமாகும். இத்தாவரத்தின் பூக்களின் மகரந்த சேர்க்கை பூச்சிகளால் நடைபெறும். இவ்வாறான அயன் மகரந்த சேர்க்கையை ஊக்கப்படுத்தும் பூச்சிகளாக தேனீ,வண்டுகள் என்பன இருக்கின்றன. அதே வேளையில் மாவுப்பூச்சியின் தாக்கம் பழத்தின் நிறத்தை, அதன் கேள்வியை இன்னும் சுவையை பாதிப்படையச் செய்துவிடும் என அறியக் கிடக்கின்றது. பிலிப்பைன்ஸ் நாட்டில் வௌவால்கள் இப்பழத்தை உண்டு பிற இடங்களுக்கு பரவச்செய்கின்றன. விதையிலிருந்து தயாரிக்கப்படும் ஒருவகை சாறுபூச்சி பீடை பீன்ஸ் என்பன அதிகம் காணப்படுவதாகவும் அதனால் இது வாசனையூட்டியாகவும் பயன்படுகின்றது. குடற் புண்ணுக்கு மருந்தாகவும் வாதத்திற்கேற்ற மருந்தாகவும் பயன்படுத்தப்படுகின்றது. வயிற்றுளைவை கட்டுப்படுத்த இதனது தண்டுப்படையிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட ஒருவகை டொனிக்கு பயன்படுகின்றது. இப்பழத்தில் 14.5% வெல்லம் இருப்பதாகவும் அதில் 50 இற்கு 50 சுக்குரோசும் குளுக்கோசும் காணப்படுகின்றன. நீரிழிவு நோயாளர்களுக்கான குருதி வெல்ல அளவை கட்டுப்படுத்தும் மருத்துவக் குணமும் இதில் இருப்பதாக காணலாம்.

இந்த மரம் தற்போது பல வீடுகளின் வீட்டுத்தோட்டத்தில் நடப்பட்டிருப்பதை காணலாம். மற்றையது அன்னமுன்னா என்பது எங்களூர் இனம். ஆனால் அதனை நாம் வளர்த்து அழிவடைவதிலிருந்து பாதுகாக்க வேண்டும். அன்னமுன்னாவை கவனிப்பாரற்ற தாவரமாக கவனத்திற் கொள்ளாது அதற்குரிய அந்தஸ்தைக் கொடுத்துத்தான் பாருங்களேன். எம்மை சுகதேகியாக வைத்திருக்கும் இவ்வகை தாவரங்களை நாம் பயன்படுத்துவதோடு பாதுகாக்கவும் வேண்டும்.



நல்லாட்சி அரசாங்கத்தின் இரண்டாவது வரவு - செலவுத் திட்டம் **அனைவருக்கும் நன்மைதரும் விரைவான அபிவிருத்தியை நோக்கி** என்ற தொனிப்பொருளில் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவினால் 10.11.2016 அன்று நாடாளுமன்றில் முன் வைக்கப்பட்டது. நிதி அமைச்சரின் 2017ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்ட வாசிப்பின் போது...

# பட்ஜெட் - 2017

## விளையாட்டு மற்றும் கலை ஏனைய செயற்பாடுகளில் பல்கலைக்கழக மாணவர்களை ஈடுபடுத்தல் அவசியம்

(தொடர்ச்சி...)

109. எமது பல்கலைக்கழக மாணவர்கள் உலகில் சிறந்த மாணவர்களுடன் போட்டியிடுவதற்கான ஆற்றலினைக் கொண்டுள்ளனர். இந்த வகையில், "வகுப்பு 1 இல் சிறந்த புதிய வருகைதருநர்", "சமன்பாட்டு மாணவர் விருதுக்கான அர்ப்பணிப்பு" மற்றும் "சிறந்த தனியாள் செலுத்துநர்" என்பன உள்ளடங்கலாக ஐக்கிய இராச்சிய சமன்பாட்டு மாணவர் 2016 (Formula Student UK 2016) ஆகிய மூன்று விருதுகளையும் பெறமுடியுமாகவிருந்த மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தின் சார்க் ரேசிங் (SHARK Racing) குழு தொடர்பாக எனது கருத்தினைத் தெரிவிக்க விரும்புகின்றேன். இன்று சார்க் குழுவின் உறுப்பினர்களை இச் சபைக்கு நாம் அழைத்துள்ளோம். எமது பல்கலைக்கழகங்கள் அவ்வாறான சர்வதேச நிகழ்வுகள் பலவற்றில் பங்கெடுப்பதுடன் அவை சிறந்த செயலாற்றுகையும் கொண்டுள்ளது என்பதனையும் நான் நன்கறிவேன். எமது மாணவர்கள் சிறப்பாக செயற்படுவதற்கான இன்னும் பலசந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுக்கும் முகமாக அதேபோன்று, தனியார் துறையும் அவ்வாறானமுயற்சிகளில் ஈடுபட வேண்டுமென தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

110. எமது சிறந்த மற்றும் திறமைமிக்க மாணவர்களுக்கிடையில் ஆற்றல் விருத்தி தொடர்பான எமது கொள்கையின் அடிப்படையில் சபாநாயகர் அவர்களே, பொறியியல், மருத்துவ, உயிரியல் மற்றும் பௌதிக விஞ்ஞானம், கணக்கியல், நிதி மற்றும் சட்டம் ஆகிய பீடங்களில் மூன்று அதிகூடிய திறமை பெற்ற 20 அரச பல்கலைக்கழகங்களின் மாணவர்களுக்கான புலமைப் பரிசில்களை ஆரம்பிப்பதற்கு நான் முன் மொழிகின்றேன். இப் புலமைப் பரிசிலானது ஹாவாட், எம்ஐரி, ஒக்ஸ்போர்ட், கேம்பிரிட்ஜ் மற்றும் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம் போன்ற உலகிலுள்ள சிறந்த பல்கலைக்கழகங்களில் கலாநிதி பட்டம் வரையிலான பட்டப்பின்படிப்பு கற்கைகளைத் தொடர்வதற்கான வசதியினை வழங்கும். மாணவர்களின் வேண்டுகோளின் அடிப்படையில் குறித்த புலமைப்பரிசில் திட்டமானது உள்நாட்டு பல்கலைக்கழகங்களில் பட்டப்பின்படிப்பு கற்கை நெறிகளை தொடர்வதற்கும் வழங்கப்படும். இந் நோக்கத்திற்காக ரூபா 500 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

111. அரசாங்கத்துறையினைச் சேர்ந்தவர்கள் ஆராய்ச்சி மற்றும் கற்கைகளை மேற்கொள்வதற்கான வசதிகளை வழங்குவதற்காக களனிப் பல்கலைக்கழகத்தில் அபிவிருத்திக் கற்கைகள் அலகொன்றினைத் ஸ்தாபிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

112. விளையாட்டு, கலை மற்றும் ஏனைய வெளிக்கள செயற்பாடுகளில் பல்கலைக்கழக மாணவர்களை ஈடுபடுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் ரூபா 100 மில்லியனை நாம் ஒதுக்கீடு செய்யவிருக்கின்றோம்.

113. தேசிய தொழிற்சங்க பேரவையுடன் இடம்பெற்ற எனது கலந்துரையாடல்களின் அடிப்படையில் பல்கலைக்கழகங்களில் விரிவுரை நேரங்களை பி.ப. 8.00 மணி வரை விரிவாக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பயன்படுத்தப்படாதிருக்கும் ஆதனங்களைப் பயன்படுத்துவதற்கு வசதி செய்வதுடன் பல்கலைக்கழகங்களுக்கான மாணவர் அனுமதியினையும் அதிகரிக்க முடியுமென நான் நம்புகின்றேன்.

114. பல்கலைக்கழகங்களில் கல்வி மற்றும் நிர்வாக அலுவலர்களுக்கான பதவியணி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமொன்றினையும் கல்விசார் பயிற்சியினையும் அறிமுகப்படுத்துவதற்கு நான் முன்மொழிவதுடன், வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுடன் இணைந்து இத்திட்டத்தினை செயற்படுத்துவதற்கு நான் ஊக்கமளிக்கின்றேன்.

115. கௌரவ சபாநாயகர் அவர்களே, நான் ஏலவே குறிப்பிட்டதன் பிரகாரம் அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கான மாணவர் அனுமதியினை 2015 உடன் ஒப்பிடுகையில் 2020 ஆம் ஆண்டளவில் 100 சதவீதத்தினால் இரட்டிப்பாக அதிகரிக்கவுள்ளோம். எவ்வாறாயினும், இது பல்கலைக்கழக அனுமதியினை 50 ஆயிரமாக மாத்திரம் அதிகரிக்கும். 150,000- 200,000 மாணவர்களில் ஏறக்குறைய 35,000 மாணவர்கள் மாத்திரம் திறந்த பல்கலைக்கழகங்கள் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் அல்லது அரசாங்கமல்லாத தனியார் உயர்கல்வி நிறுவனங்களில் தமது உயர்கல்வியை தொடர்வதாக புள்ளி விபரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. இதன் மூலம் விளங்குவது யாதெனில், மேலும் 150,000 மாணவர்கள் வருடந்தோறும் தமது உயர் கல்வியினை பெறமுடியாத நிலையில் காணப்படுகின்றனர். எவ்வாறாயினும், கல்வி மையமொன்றாக மாறுகின்ற உபாயமொன்றினை செயற்படுத்துவதில் நாம் ஆர்வமுடன் இருக்கின்றோம் என்ற வகையில் எமது இளைஞர்கள் மற்றும் யுவதிகளுக்கு அதிகமான உயர்கல்வி வாய்ப்புகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டியுள்ளது. இது அவசர செயற்பாட்டுக்கானதொரு அழைப்பாக காணப்படுகின்றது. நாம் ஆட்சிக்கு வந்ததிலிருந்து, கல்விக்கான ஒதுக்கீடுகளை குறிப்பிடத்தக்களவு அதிகரித்திருக்கின்றோம். ஆயினும், பல்கலைக்கழக கல்விக்கான வாய்ப்புகளை நாம் அதிகரிப்போமாயின் அதுவே யதார்த்த பூர்வமானதாகும். அரசாங்கத்தினால் மாத்திரம் இச்சவால்களுக்கு முகங்கொடுக்க முடியாது. இது தனியார் துறையினாலும் ஒத்துழைப்பு வழங்கப்பட வேண்டியுள்ளது. இந்த வகையில் அரசாங்கமல்லாத பட்டப்படிப்பினை வழங்கக்கூடிய அதிகமான நிறுவனங்களை நாட்டில் உருவாக்குவதற்கு நாம் வசதியளித்தல் வேண்டும்.

116. பொறுப்புடைய அரசாங்கமென்ற வகையில், அரசியல் செல்வாக்கிற்குட்பட்ட சில குழுக்களுக்கான கப்பமாக எமது நாட்டின் அபிவிருத்தியினை நிறுத்திவிடுவதற்கு அனுமதிக்க முடியாது. அதேவேளை, கல்வித்தரமானது உயர்ந்த மட்டத்தில் பேணப்படுவது முக்கியமானதாகும். இந்தவகையில் சுயாதீன தர உறுதிப்படுத்தல் மற்றும் சான்றுப்படுத்தல் சபையொன்றினை கல்விக்காக தேசிய மட்டத்தில் ஸ்தாபிப்பதற்குத் தேவையான சட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

117. பல்கலைக்கழக அனுமதி கிடைக்கப்பெறாத பல மாணவர்கள் எவ்வித முக்கியத்துவமற்ற சிறியதொரு புள்ளி வேறுபாட்டின் மூலமே தமது பல்கலைக்கழக அனுமதியை இழந்துள்ளனர் என்பதை நீங்களும் ஏற்றுக்கொள்வீர்கள். நாம் அவர்களை பொறுட்படுத்தாது விட்டுவிட முடியாது.

எனவே, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்படிப்பினை வழங்கும் நிறுவனங்களில் சந்தைக் கேள்விக்கேற்ப தெரிவு செய்யப்பட்ட பாடங்களைக் கொண்ட கற்கை நெறிகளைப் பின்பற்றுவதற்கான வட்டியல்லாத கடன் திட்டமொன்றினை ஒருவருக்கு 800,000 ரூபாவாக இசற் புள்ளியின் அடிப்படையில் 15,000 மாணவர்களுக்கு வழங்குவதற்கான திட்டத்தினை நாம் ஆரம்பிக்கவுள்ளோம். இச் செயற்றிட்டத்திற்காக 2017 இல் ரூபா 300 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

118. நாட்டில் குறிப்பாக கிராமப் பாடசாலைகளில் விஞ்ஞானம், கணிதம் மற்றும் ஆங்கில பாடங்களுக்கான சிறந்த தரமான ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுவதனை நிவர்த்தி செய்வதற்கு, பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் கணிதம், விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் ஆங்கில பாடங்களில் கல்விமாணிப் பட்டப்படிப்பினை பின்பற்றுவதற்கு விரும்புகின்ற மாணவர் ஒருவருக்கு 500,000 ரூபா வீதம் 100 சதவீத வட்டியல்லாத கடன் திட்டமொன்றினை அறிமுகப்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன். இம்மாணவர்கள், ஆகக் குறைந்தது மூன்று வருடங்கள் கிராமிய பாடசாலைகளில் கடமையாற்றுவதற்கு வேண்டப்படுவர். எவ்வாறாயினும், மூன்றுவருடம் முடிவடைவதற்குள் அத்தகைய பாடசாலைகளிலிருந்து அவர்கள் விலகவேண்டுமாயின், முழுக் கடனையும் வட்டியுடன் திருப்பிச் செலுத்துதல் வேண்டும். ஆரம்பக் கட்டமாக 5,000 மாணவர்களுக்கு கடன் வழங்கப்படுவதுடன் இந்நோக்கத்திற்காக ரூபா 100 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

119. அரசாங்க பல்கலைக்கழகங்களினால் சான்றுப்படுத்தப்பட்ட பாடநெறிகளை வழங்குகின்ற தனியார் உயர்கல்வி நிறுவனங்களை அனுமதிப்பதற்கான சாத்தியப்பாடுகளை நாம் ஆராய வேண்டியுள்ளது. அதன் மூலம் அத்தகைய தனியார் உயர்கல்வி நிறுவகங்களினால் வழங்கப்படும் பட்டங்களின் தரத்தினை உறுதிப்படுத்த முடியும்.

120. 2017 ஆம் ஆண்டிலிருந்து கொத்தலாவலை பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் பாடநெறி கட்டண கட்டமைப்பினை செலவு குறைந்ததாக அறிமுகப்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

121. திறன் விருத்தியினை ஏற்படுத்துவதற்கான கல்வியினை வழங்குகின்ற சமுதாயக் கல்லூரிகளை இலங்கையில் ஸ்தாபிப்பதற்கான சாத்தியப்பாடுகளை ஆராய்வதற்கு கல்வி, உயர்கல்வி மற்றும் தொழில் பயிற்சி அதிகார சபைகளுக்கு நான் அழைப்பு விடுக்கின்றேன்.

122. நாட்டினை அறிவுக் கேந்திரமாக மாற்றுவதற்கான சந்தர்ப்பத்தினை வழங்குவதற்காக இலங்கையில் கற்பதற்கு விரும்புகின்ற சர்வதேச மாணவர்களுக்கு 2017 ஆம் ஆண்டிலிருந்து 5 வருட பல்நுழைவு விசாக்களை வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன். இது கல்விச் சுற்றுலாவினையும் ஊக்குவிக்கும்.

123. எமது அரச பல்கலைக்கழகங்களானது பகிடிவதை மற்றும் மாணவர் வன்செயல்கள் என்பவற்றினால் சீரழிந்து போயுள்ளன என்பதனை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. எனவே, பாற் சமநிலை மற்றும் சமவாய்ப்பு, பாலியல் மற்றும் பால் அடிப்படை வன்முறைகள் மற்றும் பகிடிவதைக்கான நிலையமொன்றினை ஸ்தாபிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன். அதற்காக ரூபா 10 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கும் முன்மொழிகின்றேன்.

124. எமது பல்கலைக்கழக கல்விக்காக அசாதாரணமான நிதியினைநாம் செலவிட்டு வருகின்றோம் என்பதனை நீங்களும் இந்த சபையும் அறிந்திருப்பீர்கள். பல்கலைக்கழக அனுமதியின் போது ஒவ்வொரு மாணவருக்கும் செலவீனம் தொடர்பான விபரமொன்றினை வழங்குவதற்கு நான் சிபாரிசு செய்கின்றேன். அதன் மூலம் நாட்டிலுள்ள பொதுமக்களிடமிருந்து சேகரிக்கப்படும் வரிப்பணத்தின் மூலம் தமது கல்விக்காக ஒதுக்கீடுசெய்யப்பட்ட நிதியினை அவர்களினால் புரிந்து கொள்ள முடியுமாகவிருக்கும்.

### திறன் அபிவிருத்தி

125. பல்வேறு கைத்தொழில் துறையினருடன் நான் மேற்கொண்ட கலந்துரையாடலின் போது, சுற்றுலாத்துறையானது 100,000 பயிற்றப்பட்ட ஊழியர்களையும் ஆடைக் கைத்தொழிலுக்கு ஏறக்குறைய 60,000 ஊழியர்களும் நிர்மாணக் கைத்தொழிலுக்கு அண்ணளவாக 400,000 ஊழியர்களும் தேவைப்படுத்துவதாக எனக்கு அறிவிக்கப்பட்டது. கறுவாக் கைத்தொழிலிற்கும் இவ்வாறானதொரு தேவை முன்வைக்கப்பட்டது. இதனால் கடந்த வரவுசெலவுத்திட்டத்தில் தனியான பயிற்சி நிறுவகமொன்றை உருவாக்குவதற்கு முன்மொழியப்பட்டது. உத்தேச சுதந்திர வர்த்தக வலயங்களினால் திறமைமிக்க ஊழியர்களுக்கான கேள்வி அதிகரிக்கப்படும். திறன்களில் காணப்படும் இடைவெளியானது மிக முக்கிய பிரச்சினையாகக் காணப்படுவதனால், அது உடனடியாக தீர்க்கப்படல் வேண்டும். எனவே, அரசாங்க தொழிற்பயிற்சி நிறுவனமொன்றில் தொழிற் பயிற்சியினை பின்பற்றுவதற்கு விரும்புகின்ற எவரேனும் ஒருவருக்கு புலமைப்பரிசில்களை வழங்குவதன் மூலம், தொழிற்பயிற்சி தொடர்பான கொள்கை வேலைச் சட்டகத்தில் குறிப்பிடத்தக்களவு மாற்றத்தினை அறிமுகப்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன். இதன் மூலம் இலங்கையிலுள்ள அனைவருக்கும் தொழிற்பயிற்சியினை எவ்வித செலவுமின்றி வழங்குவதற்கு முடியுமாகவிருக்கும். இந் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வழங்கப்படவுள்ள புலமைப்பரிசில்களுக்கான செலவீனங்களை ஈடுசெய்வதற்கு ரூபா 300 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

(தொடரும்)

நம்முடைய எண்ணங்களை நாம் மறைத்தாலும் நமது செயல்கள் அவற்றை அம்பலப்படுத்தி விடும். ~ ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## இனவாதம் பேசுவதை அடியோடு கைவிடுங்கள்

புதிய அரசியல் அமைப்புச் சீர்திருத்தம் வெளிவர இருப்பதனாலோ அல்லது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ புதிய அரசியல் கட்சிக் கவசத்துடன் அரசியல் களம் இறங்குவதனாலோ என்னவோ இப்போது பேரினவாதிகள் இனவாதம் பேசுவது அதிகரித்திருப்பதைக் காணமுடிகின்றது.

அண்மையில் மட்டக்களப்பில் மக்களராமய விகாராதிபதி சுமண ரத்தின தேரர் தமிழ் மக்களை கண்டபாட்டில் ஏசியதுடன் தமிழ் மக்கள் அனைவரும் விடுதலைப் புலிகள் என்று குற்றம் சுமத்தினார்.

பிரஸ்தாப தேரரின் கீழ்த்தரமான வார்த்தைப் பிரயோகங்கள் பௌத்த துறவுக்கு தீராஇழுக்கைத் தேடிக்கொடுத்துள்ளது. எனினும் அவர் மீதான சட்ட நடவடிக்கை என்ன என்பது இன்று வரை தெரியவில்லை.

சுமணரத்ன தேரர் கொட்டித் தீர்த்த வார்த்தைகளில் ஒரு வீதத்தையேனும் நம் தமிழர் யாரேனும் சொல்லியிருந்தால் ஆகக் குறைந்தது நாலாம் மாடியில் வைத்தேனும் பூசை புண்ணியானம் முறையாக நடந்திருக்கும்.

ஆனால் தேரர் என்பதனால் சட்டத்தைப் பாதுகாக்க வேண்டிய பொலிஸார் கூட அவரை எதுவும் செய்யாமல் கை கட்டி, வாய் பொத்தி, கையில் நூல் கட்டும் போதான பௌவ்யத்தில் நின்றனர் என்பது வேறு கதை.

இது ஒரு புறம் இருக்க, வடக்கு முதலமைச்சருக்கு எதிராக சிங்கள மொழியில் பாடல்கள் இயற்றப்பட்டு அவை சிங்கள சமூக வலைத்தளங்களில் விடுக்கப்பட்டுள்ளன. இப் பாடல்கள் இனவாதத்தைத் தூண்டுவதாக இருப்பதைக் காணமுடியும்.

வடக்கின் முதலமைச்சர் மீது தமிழ் மக்கள் மிகுந்த நம்பிக்கை கொண்டிருக்கின்ற வேளையில், அவருக்கு எதிராகப் பாடல்கள் இயற்றி அவற்றை சமூக வலைத்தளங்களில் பதிவு செய்வதென்பது இனவாதத்தைத் தூண்டும் செயலே.

இத்தகைய செயல்கள் கண்டிக்கப்பட வேண்டும். தமிழ் மக்களை மீண்டும் நசுக்குகின்ற நோக்கில் இத்தகைய பரப்புரைகள் பேரினவாதிகளால் வெளியிடப்பட்டு வருவதானது எதிர்கால ஆரோக்கியத்துக்கு நல்லதல்ல.

இவை ஒரு புறம் இருக்க, புதிய கட்சியை அறிமுகப்படுத்தியுள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சகோதரர் பஷில் ராஜபக்ஷ ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றில், சிங்களவர்களை அச்சுறுத்தினால் தமிழருக்கு நிம்மதி கிடையாது என்று கூறியுள்ளார்.

சிங்களவரை அச்சுறுத்தும் அளவில் தமிழர்கள் யார் உளர் என்பது தெரியவில்லை யாயினும் பஷில் ராஜபக்ஷவின் கருத்தை உற்று நோக்கினால், தமிழர்கள் சிங்களவர்களை அச்சுறுத்துகின்றனர் என்ற பொருள் வெளிப்படும். ஆக, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் புதிய கட்சியின் அரங்கேற்றமே தமிழருக்கு எதிரானதாக இருப்பது தெரிகிறது.

அரசியல் பதவிகளுக்காக தமிழின விரோதத்தை சிங்கள மக்களிடையே தொடர்ச்சியாக விதைப்பது மிகுந்த வேதனைக்குரியது.

இந்த நாட்டில் பேசப்பட வேண்டிய விடயங்கள் எவ்வளவோ இருக்கின்றன. ஆனால் அவை பற்றியெல்லாம் எதுவும் பேசாமல் தமிழ் மக்களுக்கு எதிரான கருத்துக்களைத் தெரிவிப்பதிலும் தமிழ் மக்களின் நம்பிக்கைக்குரிய தலைவர் முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு எதிராகக் கோஷம் எழுப்புவதிலுமே தென்பகுதிப் பேரினவாதிகள் ஈடுபடுகின்றனர் எனில்,

இந்த நாட்டில் தொடர்ச்சியாக தமிழர்கள் தாக்கப்பட வேண்டும் என்பதில் அவர்கள் உறுதியாக இருப்பது உணர்தற்குரியது.

எது எப்படியாயினும் இந்த நாட்டில் இனவாதம் பேசுவது முற்றாகத் தடுக்கப்பட வேண்டும். இல்லையேல் தீராத வியாதியாக இனவாதம் இலங்கையில் நிலைக்கும்.

### யோகாப்பயிற்சி

மனவளக்கலை யோகாப் பயிற்சிகள் இன்று முதல் எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை மாலை 5 மணிக்கு இல 81, பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள அறிவுத் திருக்கோவிலில் இடம்பெறும். இவ் இலவச விரிவுரையை தமிழ் நாட்டுப் பேராசிரியர் இந்திரா நிகழ்த்தவுள்ளார். அகத்தாய்வு 1,2,3 பயிற்சியை பூர்த்தி செய்தவருக்கான அகத்தாய்வு 4 பயிற்சிகள் இன்றும் நாளையும் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை இடம்பெறும். (இ-3)

### கருத்தரங்கு முன்மொழிவுகள்

யாழ்.சர்வதேச மார்க்சிய குழுவின் 2017 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட கருத்தரங்கு முன்மொழிவுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு இல.361, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள DMI கல்வி நிறுவனத்தில் ஏ.ச.ஜோர்ஜ் தலைமையில் இடம்பெறும்.(இ-3)

## கோரவிபத்து; 73 பேர் பலி!

(மபுடா)

கிழக்கு ஆபிரிக்க நாடான மொசாம்பிக் நாட்டில் எரிபொருள் டேங்கர் லொறி வெடித்து விபத்துக்குள்ளானதில் 73 பேர் உயிரிழந்ததாக அந்நாட்டு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த பயங்கர விபத்தில் 73 பேர் பலியானதாக தகவல் வெளியாகியுள்ளது.

அந்நாட்டில் உள்ள கப்ரிட்சாங் மாகாணத்தில் உள்ள பகுதியில் உள்ள மக்கள் லொறியில் இருந்து பெற்றோல் எடுப்பதற்காக கூடியிருந்த போது இந்த லொறி வெடித்ததாக கூறப்படுகிறது.

இந்தக் கோர விபத்தில் 110 பேர் படுகாயம் அடைந்தனர்.

பெற்றோல் விற்பனை செய்யப்படும் போது எரிபொருள் டேங்கர் வெடித்துச் சிதறியதா? அல்லது அங்குள்ள கும்பலால் வெடிக்க வைக்கப்பட்டதா? என்று தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். (இ-10)

### சாலாவ மக்களுக்காக 875 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது

சாலாவ இராணுவ ஆயுதக் களஞ்சியசாலையில் ஏற்பட்ட வெடிப்பு சம்பவத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக இதுவரை 875 மில்லியன் ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சு தெரிவித்துள்ளது.

மதிப்பீட்டு திணைக்களத்தின் மதிப்பீடு படி 1279 மில்லியன் ரூபா நிதி பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு ஒதுக்கப்பட்டுள்ளதாக அந்த அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சொத்துக்கள் சேதமடைந்ததால் இடம்பெயர்ந்தவர்களுக்கு 50 ஆயிரம் ரூபா படி ஒக்டோபர் மாதம்வரை கொடுப்பனவு வழங்கல், வீடுகள் புனர்நிர்மாணத்திற்காக நிதி வழங்கல் போன்றவற்றிற்காக 860 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. (இ-10)

## தமிழ் மாணவர்கள் சார்பில் மாமன்றத்தின் அடிப்படை உரிமைமீறல் மனு விசாரணைக்கு

நுவரெலியாவில் தமிழ் மொழி மூலமாக கல்விப் பொதுத் தராதரப்பத்திர உயர்தர கணித, விஞ்ஞான கல்விப்பிரிவுகளில் கல்வி கற்று வந்த சப்ரகமுவ, ஊவா மாகாண மாணவர்களை வெளியேற்றியதற்கு எதிராக, அம்மாணவர்களின் பெற்றோர்கள்,அகில இலங்கை இந்து மான்றத்தின உதவியுடன் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கும் அடிப்படை உரிமை மீறல் மனுக்கள், எதிர்வரும் 23 ஆம் திகதி அன்று உயர்நீதிமன்றத்தில் விளக்கத்திற்கு எடுக்கப்படவுள்ளன.


பாதிக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோர்களின் சார்பில் சட்டத்தரணி கே.வி. எஸ். கணேசராஜா ஆஜராகவுள்ளார் என அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவர் கந்தையா நீலகண்டன் அறிவித்துள்ளார். (இ)

### ஏல விற்பனை

சாவகச்சேரி நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பகிரங்க ஏலவிற்பனை நடைபெறவிருப்பதால் அன்றைய தினம் ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு அரை மணித்தி யாலத்திற்கு முன்னர் அப்பொருட்களை பார்வையிட முடியும்.

பொருட்களின் விபரத்தை 28 ஆம் திகதிய வர்த்தமானிப் பத்திரிகையில் பார்வையிட முடியும் என சாவகச்சேரி நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (இ

## ஐயப்பன் வரலாறு காட்டும் தத்துவம் என்ன?



கடவுளை வணங்கு வோருக்கு வேண்டியது கிடைக்கும். அப்படிக் கிடைத்ததை தவறான செயலுக்குப் பயன்படுத்தினால் தண்டனையும் உடனே கிடைக்கும். சாகா வரம் பெற்றவர்களுக்குக் கூட ஏதோ ஒரு சக்தியால் அழிவு நிச்சயம். நிலையற்றது இந்த வாழ்க்கை. எனவே வாழும் காலத்தில் நல்லவனாய் வாழ்ந்து விட்டால் மீண்டும் இந்தப் பிறவிப் பெருங்கடலை நீந்த வேண்டாம் என்ற அரிய தத்துவங்களை உணர்த் தும் தலம் சபரிமலை.

சபரிமலை ஐயப்பனின் வரலாற்றில் முதலில் ஆடம்பரமான அரண்மனை வாழ்வு. இது நிலைத்ததா என்றால் இல்லை. தெய்வப்பிறவியான ஐயப்ப னுக்கு கூட இந்த வாழ்வு நிலைக்கவில்லை என்றால் சாதாரண மனிதர்களான நமக்கு மட்டும் நிலைத்து விடுமா என்ன? எனவே தான் ஐயப்பன் கோவிலுக்கு செல்ல எளிமையான ஏற்றத் தாழ்வற்ற சீருடை அணிந்து ஒன்று போல இருமுடி கட்டி ஒற்றுமையாய், கூட்டமாய் போய் அவனை வணங்கி விட்டு வருகிறோம்.

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து 6மெணி வரை **யாழ்.பிரதேசத்தில** இரும்புமதவடி, மனோகரா, சக்களாவத்தை, தேவரையாளி, திக்கம், மூட்டுவில், கல்வயல், முத்துமாரி அம்மன் கோவிலடி, சரசாலை வடக்கு ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில** நாச்சிக்குடா, நாகபடுவான், முழங்காவில், குமுழமுனை, பல்லவராயன் கட்டு, வெள்ளாங்குளம், மூனறாம் பிட்டி, SLLI கணேஷபுரம் வெள்ளாங்குளம், 651 வது படைப்பிரிவு முகாம், 652 வது படைப்பிரிவு முகாம், 2வது அதிரடிப்படை முகாம், நாச்சக்குடா கடற்படை முகாம், இயாஸ் ஐஸ் தொழிற்சாலை ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில** நெளுக்குளத்திலிருந்து இராசேந்திரகுளம் வரையும் **மன்னார் பிரதேசத்தில்** முருங்கனிலிருந்து தலைமன்னார் வரை, வங்காலை கடற்படை முகாம், வங்காலை நீர்ப்பாசனத் திணைக்களம், கமலாம்பிகை அரிசி ஆலை, மாந்தை உப்பு உற்பத்தி நிலையம், கீரி ஐஸ் தொழிற்சாலை, மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களம், மன்னார் தொலைத் தொடர்பு நிலையம், ஆவே மரியா ஐஸ் தொழிற்சாலை, மன்னார் வைத்தியசாலை, விசேட அதிரடிப்படை முகாம், வஙகாலைப்பாடு ஐஸ் தொழிற்சாலை, எருக்குப்பிட்டி பம் கவுஸ், மீன்பிடிசமாசம், அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, தலைமன்னார் கடற்படைமுகாம், சீனத் துறைமுகம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

### வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2016

''உலகில் உள்ள கானகங்களுக்கு நாம் இழைத்திடும் கொடும் செயல்கள் நாம் நமக்குள் ஒருவருக்கொருவர் இழைத்திடும் கொடும் செயல்களின் பிரதிபலிப்பே''

~மகாத்மா காந்தி (இந்திய தேசபிதா)


## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



❖ கொள்கைகளையோ, நம்பிக்கைகளையோ, மதப்பிரிவுகளையோ, கோயில்களையோ பொருட்படுத்தாதே. ஒவ்வொரு மனிதனது வாழ்க்கையிலும் சாரமாய் அமையும் அறிவுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் அவை என்ன? ஒரு மனிதனிடம் இந்த அறிவு முதிரும் அளவிற்கே நன்மை செய்யும் ஆற்றல் அவனிடம் மிகுகின்றது. முதலில் இதனையே தேடிப்பெறு. இதனையே அடைக. ஒருவரையும் குறை கூறாதே. ஏனெனில் எல்லாக் கொள்கைகளிலும் முடிவுகளிலும் சிறிது நன்மையுள்ளது. சமயம் என்பது மொழிகளோ, கட்சிகளோ அல்ல, மெய்யுணர்வே அதன் கருத்தாகும். இதை உனது வாழ்க்கையில் காட்டு.

❖ தெளிந்த உண்மையும் கருத்தின் தூய்மையும் வெற்றியளிப்பது நிச்சயம். இந்த இரண்டையும் படைக்கலமாகக் கொள்ளும் சிறுபான்மையோரும் எவ்வளவு பெரிய வலிமையையும் எதிர்த்து வெற்றியடைவதே மாறாத விதியாகும்.


❖ உண்மை, தூய்மை, தன்னலமின்மை இம்மூன்றும் உள்ள இடத்தில் எல்லாம் அவற்றை உடையவர்களை நசுக்கும் ஆற்றல் சூரிய மண்டலத்தின் கீழோ மேலோ இல்லை என்பதை அறிவாய். இவற்றைப் பெற்றுள்ளவன் ஒருவனே ஆனாலும் உலகம் முழுவதையும் எதிர்த்து நிற்கும் திறன் உடையவனாவான்.

















இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக் களத்தின் முப்பது ஆண்டு நிறைவையொட்டி ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மாநாடு மற்றும் குருபூசை நிகழ்வுகள் நேற்றையதினம் நல் லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் ஆரம் பமாகின. ஆரம்பநாள் நிகழ்வு நேற்றுக்காலை 9 மணிக்கு நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், யாழ்.பல்கலைக்க ழக சமஸ் கிருதத்துறை தலைவர் பிரம்மஸ்ரீ ச.பத்மநாபன் முன்னிலையில் இடம்பெற்றது. இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக் களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், கௌரவ விருந்தினர்களாக பாராளுமன்ற உறுப்பின ரும் மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவைத் தலைவருமான சீனித்தம்பி யோகேஸ் வரன், கல்வி பண்பாட்டலுவல்கள் விளை யாட்டுத்துறை இளைஞர் விவகார அமை ச்சின் செயலாளர் இ.இரவீந்திரன், சிறப்பு விரு ந்தினர்களாக நல்லூர் பிரதேச செயலாளர் ஆ.சிறி, யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா, வண்ணை நாவலர் மகா வித்தியாலய அதிபர் சு.திருநாவுக்கரசு ஆகியோர் கலந்து கொண்டனர். மங்கல இசையுடன் காலை 9 மணிக்கு நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் இருந்து ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் திருவுருவப்படம் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு 9.25 மணிக்கு நூற்கண்காட்சி ஆரம்ப நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வுகள் தொடர்ந்து 4 நாட்களுக்கு நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (படங்கள்:-உ.சாளின்)

# வைத்தியசாலையில் வோஜஸ்




அவுஸ்திரேலியத் துடுப் பாட்ட வீரரும் மேற்கு அவுஸ் திரேலிய அணித்தலைவரு மான அடம் வோஜஸ், அவ ரது தலையில் பந்துபட்டதன் காரணமாக வைத்தியசா லையில் அனுமதிக்கப்பட் டார்.

தஸ்மேனியா அணிக் கெதிரான போட்டியில் அவர் துடுப்பெடுத்தாடிக் கொண்டி ருக்கும் போது, வேகப்பந்து வீச்சாளர் கமரொன் ஸ்வன் ஸனின் பந்தை விலகத் தவ றியதாலேயே,.அவரது தலை யில் பந்து பட்டது.

அவரது தலையில் ஏற் பட்ட இந்த அடி காரணமாக இந்தப் போட்டியில் அவர் இனிமேல் பங்குபெற மாட் டார் என அறிவிக்கப்படு கிறது.

அண்மைய சில போட்டி களாக ஓட்டங்களைக் குவிக் கத் தடுமாறிய வோஜஸ், இந் தப் போட்டியில் ஓட்டங்க ளைக் குவித்தாலே தனது இடத்தைத் தக்க வைக்க முடியுமென்று கருதப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க)

# சீன ஓபன் பட்மின்டன் கால் இறுதியில் சிந்து



சீன ஓபன் பட்மின்டன் போட்டியின் கால் இறுதி சுற்றுக்கு இந்தியாவின் பி.வி.சிந்து முன்னேறினார்.

சீனாவின் புஸ்ஹொவ் நகரில் நடைபெற்று வரும் இந்த தொடரில் ஒலிம்பிக்கில் வெள்ளிப்பதக்கம் வென்ற 7 ஆம் நிலை வீராங்கனையான சிந்து தனது 2 ஆவது சுற்றில் 17 ஆம் நிலை வீராங்கனையான அமெரிக்காவின் பிவென் ஹெங்கை 8-21, 22-20, 21-17 என்ற செற்கணக்கில் வீழ்த் தினார். இந்த ஆட்டம் சுமார் ஒரு மணி நேரம் நடைபெற் றது. கால் இறுதியில் சீனா வின் ஹி பிங்ஜியோவை சந் திக்கிறார் சிந்து.

ஆடவர் பிரிவு 2 ஆவது சுற்றில் இந்தியாவின் அஜெய் ஜெயராம் 20-22,21-19,21-12 என்ற செற் கணக்கில் ஹொங் கொங்கின் வெயி நானை வீழ் த்தி கால் இறுதிக்கு முன்னே றினார்.

மற்றொரு இந்திய வீர ரான பிரணோய் 17-21,19-21 என்ற நேர் செற்றில் சீனா வின் குயோபினிடம் தோல்வி யடைந்தார். (க)

# சாதனையை தவறவிட்ட கோலி

167 ஓட்டங்களில் அவுட்டானதன் மூலம் ஒரே ஆண்டில் மூன்று இரட்டை சதம் அடித்த இந்தியர் என்ற சாதனையை விராட் கோலி தவற விட்டார்.

விராட் கோலி இந்த ஆண்டு இதுவரை 2 இரட்டை சதம் அடித்துள்ளார். மேற்கிந்தியத்தீவுக்கு எதிராக ஜூலை மாதம் நடந்த டெஸ்டில் 200 ஓட்டங்கள் எடுத்தார். இது அவரது முதல் இரட்டை சதமாகும். நியூசிலாந்துக்கு எதிரான ஒக்டோபர் மாதம் இந்தூரில் நடந்த டெஸ்டில் 211 ஓட்டங்கள் எடுத்து இருந்தார்.

இங்கிலாந்துக்கு எதிரான 2வது டெஸ்டில் நேற்று 151 ஓட்ட ங்கள் எடுத்த விராட் கோலி இன்று இரட்டை சதம் அடிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவர் 167 ஓட்டங்களில் அவுட் ஆனார். அவர் இரட்டை சதம் அடித்து இருந்தால் ஒரே ஆண்டில் 3 இரட்டை சதம் அடித்த இந்தியர் என்ற சாத னையை படைத்து இருப்பார். (க)



## வடக்கு முதலமை...



வேடமிட்ட ஒருவரும் தோன்றுகிறார்கள். இவர்கள் தோன்றும் திரையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சின்னம் போன்ற உருவம் காண்பிக்கப்படுகிறது.

குறித்த பாடலில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் புலிகளுக்கு பால் கொடுத்து வளர்கிறார் என்றும் சமாதானத்தை பேசுவதாக கூறி இனங்களிடையே பிரிவுகளை ஏற்படுத்துவதாகவும் உலகம் முழுவதும் சுற்றி தன்னை பெரியவராக காட்டுகிறார்.

இவரை நாட்டை விட்டு விரட்டி அடிப்போம என்ற வசனங்களுடன் இப்பாடல் காணொளியில் காட்சிகள் வடிவமைக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் தமது பிரதிநிதியாக பெரிதும் மதிக்கும் ஒருவரை இவ்வாறு சித்திரித்து காணொளிப் பாடல் வெளியிட்டுள்ளமை தமிழ் மக்கள் மத்தியில் பெரும் விசனத்தை உண்டு பண்ணியுள்ளது. (செ-9)

## சைவமும் தமிழு...

ஸ்ரீ துர்க்கா மணிமண்டபத்தில் நேற்று இந்து சமய கலாசார திணைக்களத்தின் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில நடைபெற்றது. இங்கு உரையாற்றிய போதே யோகேஸ்வரன் எம்.பி இவ்வாறு குறிப்பிட்டார்.

ஆறுமுகநாவலர் அன்று கண்ட கனவு, எதிர்பார்த்த கனவு இன்று நிறைவேறியிருக்கிறது எனக் கூறிப் பெருமிதப்பட்ட அவர், துரதிஷ்டவசமாக சில காலத்திற்கு முன்னர் நீங்கள் ஆறுமுகநாவலர் கண்ட கனவுக்கு மாறான அரசியல்வாதிகள் சிலரையும் அனுப்பி வைத்திருக்கிறீர்கள். ஆகவே, உங்களிடம் கேட்பது ஒன்று தான். அரசியலுக்கு ஆயிரம் பேர் வருவார்கள்.

ஆனால், எமது சைவத்தையும், தமிழையும் உண்மையாகப் பாதுகாக்க எத்தனை பேர் முன் வருகிறார்கள். பெரும்பாலும் அவ்வாறு வருவதில்லை.

ஆகவே, ஆறுமுகநாவலர் காட்டிய பாதையை நாங்கள் முன்னுதாரணமாகக் கொள்ள வேண்டும். நாங்கள் ஒவ்வொருவரும் சைவர்களாக வாழப் பழகிக் கொள்ள வேண்டும். எம்மில் எத்தனை பேர் அவ்வாறு வாழ்கிறோம். எமது மண்ணிலே சைவத்தையும், தமிழையும் வளர்த்த பெருமகன் நாவலர் பெருமான். அப்படிப்பட்ட ஆறுமுக நாவலரின் வழியை எம்மில் எத்தனை பேர் பின்பற்றி நிற்கிறோம் என்றால் அது நாயன்மார்கள் வாழ்க்கை முறையாகவிருக்கலாம்.

அவர்கள் பாடிய திருமுறைகளாகவிருக்கலாம். அவர்கள் தமிழையும், சைவத்தையும் ஒன்றித்துப் பாடியிருக்கிறார்கள். திருநாவுக்கரசு நாயனார் தமிழர்கள் யார் எனச் சுட்டிக்காட்டிப் பாடியிருக்கிறார்கள். இவ்வாறு பலவிடயங்களில் தமிழர்கள் சைவர்கள் தான எனச் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. ஏனையவர்கள் எல்லாம் தமிழ் பேசுபவர் கள். இதை நான் உரத்துச் சொல்வதற்கு எப்போதும் தயங்க மாட்டேன். தமிழர்களுக்கு மாத்திரம் தான தாம் சைவர்கள் என்று சொல்லும் உரிமையிருக்கிறது.

இதனை நாங்கள் இவ்வாறு சொல்வதால பலருக்கும் பிரச்சினை. அந்நியர் ஆட்சிக் காலத்தில் இலங்கை நாடும், இந்திய நாடும் அந்நியருக்கு அடிமைப்பட்டதால் கலாசார ரீதியாக, பண்பாட்டு ரீதியாக மற்றும் மொழி ரீதியாக நாங்கள் பல்வேறு இன்னல்களை அனுபவித்து கொண்டிருக்கும் காலகட்டத்தில் தான் அவர்களுடனிருந்து கொண்டே எமது சைவத்தையும், தமிழையும் வளர்த்தார்.

அந்நியர்கள் ஆட்சிக் காலகட்டத்தில் சைவ ஆலயங்கள் உடைக்கப்பட்டன. சைவசமயி என்றே தன்னை வெளிக்காட்ட பயந்த காலகட்டத்தில் ஆறுமுகநாவலர் ஒரு சைவ மறுமலர்ச்சியை எமது மண்ணிலே ஏற்படுத்தினார்.

நாவலரின் பணியை சமயப் பணியாக, கல்விப் பணியாக, ஆன்மீகப் பிரசாரப் பணியாக, நூல்களை அச்சிட்டு வெளியிடுகின்ற மாபெரும் பணியாகவும் மட்டுமல்லாமல் அவர் அரசியல் பணியிலும் ஈடுபட்டிருக்கிறார். நாவலர் அரசியல் ரீதியாகவும் பின்னணியாகச் செயற்பட்டிருக்கிறார் என்ற விடயத்தைப் பல நூல்கள் மறைத்திருக்கின்றன.

குறிப்பாக 1853 ஆம் ஆண்டு சைவப்பிரகாச சபை முதன்முதலாகத் தமிழர் தாயகத்தில் அமைந்த ஒரு தமிழ் அமைப்பு. இந்த அமைப்பு வடக்கு மாகாணத்திலும், கிழக்கு மாகாணத்திலும் மற்றும் தென் மாகாணத்திலுமிருந்தது. இந்தச் சபை மூலம் சைவசமய எழுச்சி இடம்பெற்றது.

இச்சபையின் நிகழ்வுகளில் ஆறுமுகநாவலர் உரையாற்றுகின்ற போது தமிழ் மறுமலர்ச்சியை அரசியல் ரீதியாக ஏற்படுத்தியிருக்கிறார். இன்று எமது மண்ணில் தமிழர் உரிமைப் புரட்சிக்கு வித்திட்டவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் என்றால் அது மிகையாகாது என குறிப்பிட்டார்.

மேலும் இன்று யாழ் மண் என்ன?, வட மாகாணம் என்ன?, கிழக்கு மாகாணம் என்ன? எல்லாம் சைவ வாழ்வியலிலிருந்து மாறிக் கொண்டிருக்கிறது மறந்து கொண்டிருக்கிறது எனவே இவ்வாறான விடயங்களில் மாற்றம் வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (செ-4)

## கடும் மழையுடன்...

கப்பட்டுள்ளது.

மேலும் சில பிரதேசங்களில் 100 மி.மீ மேற்பட்ட மழைவீழ்ச்சி பதிவாக கூடும். அத்தோடு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மாலை நேரங்களில் இடியுடன் கூடிய மழை பெய்வதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன.

கடல் சார்ந்த பகுதிகளிலும் நாடு பூராகவுமுள்ள சில பகுதிகளிலும் பலத்த காற்று வீசுவதற்கான சூழ்நிலை காணப்படுகின்றது. இதனால் தெற்கு, கிழக்கு, மற்றும் வடக்கு கடற்பிரதேசங்களிலுள்ள மக்கள் அவதானமாக இருக்க வேண்டும். குறித்த காலநிலை சில நாட்கள் தொடருவதற்கான சந்தர்ப்பங்களும் உள்ளன.

மேலும் தற்காலிகமாக நிலைகொண்டுள்ள காற்றழுத்தம் பலத்த காற்றை மாறுவதற்கான சூழல் காணப்படுகின்றது. இதனால் கடும் மின்னலும் ஏற்படலாம் எனவே மக்கள் எச்சரிக்கையுடன் செயற்படுமாறு பாதிப்புக்களை தவிர்த்துக் கொள்ளுமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மழையுடனான காலநிலையால் அதிவேக வீதிகளில் பனிமூட்டம் சூழ்ந்து காணப்படுவதால் வாகன சாரதிகள் அவதானமாக வாகனங்களை செலுத்துமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தெற்கு அதிவேக வீதியின் தொடாங்கொடையில் இருந்து, கெலனிகம வரையிலும், கஹதுடுவை மற்றும் கொட்டாவை மாற்றல்களிலும் அதிக பனிமூட்டம் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் அதிவேக வீதிகளில் பயணிக்கும் போது மணிக்கு 60 கிலோமீற்றர் என்ற வேகத்தில் பயணிக்குமாறும், வாகனத்தின் முன் - பின் விளக்கு களை ஒளிரவிடுமாறும் வேண்டு கோள் விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மலை பாங்கான பகுதிகளில் வாழும் மக்கள் தொடர் மழை பெய்யும் பட்சத்தில் மண்சரிவு குறித்து எச்சரிக்கையுடன் செயற்படுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றது. (செ-11)

## பிறந்த நாள் கொண்டாடிய மகிந்த



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று தனது 71 ஆவது பிறந்த தினத்தை கொண்டாடி யுள்ளார்.

மகிந்தவின் பிறந்த நாளை முன்னிட்டு பல மத வழிபாடுகள் மற்றும் தானம் வழங்கும் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டு விமர்சையாகக் கொண்டாடப்பட்டது.

அதற்மைய நேற்றுக்காலை வேளை மெதமுலன மகிந்த ராஜபக்ஷவின் வீட்டில் அவரது பிறந்த நாள் கொண்டாடப்பட்டுள்ளது. அத்துடன் MR என பெயரிடப்பட்ட கேக் ஒன்றை வெட்டி தனது பிறந்த நாளை மகிந்த ராஜபக்ஷ கொண்டாடியுள்ளார்.

அவரது பிறந்த நாள் கொண் டாட்டத்தில் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டு வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை தனது பிறந்த நாளில் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த சில முடிவுகளை எடுக்கப் போவதாக மகிந்த அறிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (செ)

## இரு இராணுவத்தினர் விபத்தில் காயம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதியில் இராணுவச் சிப்பாய்கள் இருவர் பயணித்த மோட்டார் சைக்கிள் நேற்று நண்பகல் வேளை வீதியில் சறுக்குண்டு விபத்துக்குள்ளானதில் இராணுவத்தினர் இருவரும் காயமடைந்துள்ளனர்

காயமடைந்த இராணுவச் சிப்பாய்களை அப்பகுதியில் நின்றிருந்த பொதுமக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து உடனடியாக முதலுதவிகளை மேற்கொண்டு அங்கிருந்து பாதுகாப்பாக அனுப்பிவைத்திருந்தனர். (செ-9)

## வீதி விபத்து; இளைஞன் காயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி சங்கத்தானையில் நேற்று முன்தினம் மாலை 3.00 மணியளவில் இடம்பெற்ற வீதி விபத்தில் இளைஞர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த இளைஞரும் யாழ்ப்பாணம் கொடிகாமம் சேவையில் ஈடுபடும் தனியார் சிற்றூர்தியும் மோதுண்டு விபத்துக்குள்ளாகின.

இவ்விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த கிளிநொச்சியை சேர்ந்த ப.பவிதரன் (வயது 24) என்பவரே காயமடைந்து சிகிச்சைக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ் விபத்து தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (செ-89)

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மாநாட்டின் முதலாம் நாள் மாலை நேர நிகழ்வுகள்







(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவலல்கள் திணைக்களத்தின் முப்பது ஆண்டு நிறைவையொட்டி நடைபெறும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மாநாட்டின் முதலாம் நாள் மாலை நேர நிகழ்வு நேற்றைய தினம் நல்லூர் ஸ்ரீ துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெற்றது.

கல்வி அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளர் எஸ்.தில்லை நடராசா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அருளுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் வழங்கியதுடன் ஆசியுரையை வீணாகான குருபீட தலைவர் சிவஸ்ரீ சபா வாசுதேவக் குருக்கள் வழங்கியிருந்தார்.

அதனை தொடர்ந்து விருந்தினர்கள் உரையும் நூல்வெளியீடும் கலைநிகழ்வுகளும்இடம்பெற்றன.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.இந்திய துணைத்தூதுவர் ஆ.நடராஜன், கௌரவ விருந்தினராக ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை தலைவர் பேராசிரியர் சி.பத்மநாதன், சிறப்பு விருந்தினர்களாக பனை அபிவிருத்தி சபை தலைவைத்தியகலாநிதி ஆர். சிவசங்கர், தமிழ் இசை குழுமம் சிங்கப்பூர் பணிப்பாளர் சோ.நிரஞ்சன் நந்தகோபன், தொழில் அதிபர் கல்விக்கருணயன் ஈ.எஸ்.பி.நாகரட்ணம் ஆகியோர் கலந்து கொண்டனர். (செ-9)

## ஐ.எஸ்.ஐ.எஸ்...

எனினும் தமது புலனாய்வுப் பிரிவினர் உசார் நிலையில் உள்ளதாகவும் குறிப்பிட்ட அமைச்சர், சுற்றுலா வீசாவில் வரும் சிலர் இலங்கையில் மத அடிப்படைவாதத்தை பரப்பி வருவதாகவும் தெரிவித்தார்.

கல்முனை, பேருவளை, குருநாகல் போன்ற பகுதிகளில் உள்ள முஸ்லிம் சர்வதேச பாடசாலைகளில் விரிவுரையாற்ற வருவோரே இவ்வாறு அடிப்படைவாதத்தைத் தூண்டும் வகையில் செயற்படுவதாகவும் அமைச்சர் குற்றம்சாட்டினார்.

ஆனால் தற்போதைய அரசாங்கம், முஸ்லிம் அடிப்படைவாதமாகவோ, சிங்கள அடிப்படைவாதமாகவோ அல்லது வேறு எந்த அடிப படைவாதமாக இருந்தாலும் அவற்றுக்கு இடமளிப்பதில்லை என்ற உறுதியான நிலைப்பாட்டில் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை இலங்கையில் தௌஹீத் ஜமாஅத், சுன்னத் வல் ஜமாஅத், ஜமாஅதே இஸ்லாம் போன்ற இஸ்லாமிய அமைப்புகள் இயங்கி வருவதாகவும் தெரிவித்த அமைச்சர், இந்தக் குழுக்களிடையேயும் மோதல்கள் இடம்பெற்று வருவதுடன், சில இடங்களில் மனித கொலையும் இடம்பெற்றுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் பாரதூரமான 15 சம்பவங்கள் தொடர்பில் அறிக்கையிடப்பட்டுள்ளதாகவும் கூறிய அமைசசர், அவர்களின் உள்ளக முரண்பாடு நாட்டிலுள்ள தேசிய முரண்பாடாக மாறி நாட்டை அராஜக நிலைமைக்குள் தள்ளிவிட இடமளிக்க மாட்டோம் என்றும் உறுதிபட தெரிவித்துள்ளார். (செ-11)

## மாணவர்களின்...

முறியடிப்பதற்காக பொலிஸாரும் மக்கள் குழுக்களும் முயற்சி செய்கின்ற போதும், மாணவர்களில் சிலரும் வேறு சதிகாரக் கும்பல்களும் இந்த நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் - உரும்பிராய் பலாலி வீதியிலுள்ள வசாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாலயத்தில் நேற்று நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய போதே வடமாகாண முதலமைச்சர சீ.வி. விக்னேஸ்வரன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மாணவ, மாணவிகள் அறிமுகம் இல்லாதவர்களுடன் பழக்கங்களை ஏற்படுத்திக்கொள்ளுதல், தெரியாதவர்களால் வழங்கப்படும் தின்பண்டங்களை வாங்கி உண்ணுதல், பரிசுப் பொருட்களை ஏற்றுக் கொள்ளல் ஆகிய விடயங்களில் தூர விலகியிருப்பது மிகவும் அவசியம் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

பெற்றோர்களும், ஆசிரியர்களும் தெரியாதவர்களிடம்இருந்து எதையும் வாங்க வேண்டாம் என்று கூறியுள்ளார்கள் என்பதால் வேண்டாம் என்று சிறார்களிடம் திடமாகச் சொல்லுங்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இன்று காலம் மாறிவிட்டது. சுயநலம் தலைவிரித்தாடுகின்றது. இன்னொருவரிடம் இருந்து எதனைப் பெறலாம், எதைப் பறிக்கலாம் என்பதே எம்முள் பலரின் சிநதனையாகப் போய்விட்டது.

அவ்வாறான சூழ்நிலையில் நாங்கள் நம்பிக்கைப் பாதையில் மிகவும் கவனமாகப் பய ணிக்க வேண்டும். இவர் எனனிடம் எதை எதிர்பார்க கின்றார்? ஏன் இவர் என்னுடன்ஒரு விதமாகப்பழகு கின்றார்? என்றெல்லாம் மாணவ, மாணவியர சிந்திக்க வேண்டியுள்ளது.

சனிமா, கணனி பத்திரிகைகள் காரணமாக இன்றைய மாணவ மாணவியர் உலக ஞானம் பெற்றவர்களாக இருக்கின்றார்கள் என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

நீங்கள் யாவரும் உங்கள்கல்விநடவடிக்கைகளில் சிறப்புற செயற்பட வேண்டும் என்றும் வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மாணவர்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார். (செ-11).

## கைதான சந்தேக நபர்...

வரும் டிசெம்பர் மாதம் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் கொக்குவில், குளப்பிட்டி பகுதியில் கடந்த 20 ஆம் திகதி இரவு பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில், பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் கொல்லப்பட்ட வழக்கு விசாரணை, நேற்றையதினம் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, சந்தேக நபர்களாக அடையாளம் காணப்பட்ட ஐந்து பொலிஸாரும் மன்றில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

விசாரணைகளை மேற்கொண்டு வரும் குற்றப்புலனாய்வு பொலிஸார் மன்றில் ஆஜராகி குறித்த வழக்கின் சான்றுப்பொருட்களான இரத்த மாதிரி, மாணவர்களது உடைகள், உடைமைகள் மற்றும் சம்பவம் நடைபெற்ற இடத்திலிருந்து மீட்கப்பட்ட துப்பாக்கி குண்டின் வெற்றுக்கோது என்பவற்றை அந்தந்த பகுப்பாய்வு திணைக்களங்களுக்கு நிபுணத்துவம் சார்ந்த பரிசோதனைக்காக அனுப்பப்பட்டுள்ளதாகவும், சம்பவம் நடைபெற்ற இடத்தில் அமைந்துள்ள கடையில் பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி கமெராவில் பதிவாகிய காட்சிகளை கொழும்பு பல்கலைக் கழகத்தின் தொழில்நுட்பப்பிரிவு பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவற்றின் அறிக்கைகள் கிடைக்கப் பெறவில்லை எனவும் தெரிவித்தனர்.

அத்துடன் சம்பவம் நடைபெற்ற அன்று கடமையில் இருந்த 5 பொலிஸாருடைய தொலைபேசிகளில் அந்தந்த நிறுவனங்களின் ஊடாக அவர்கள் மேற்கொண்ட அழைப்பு விபரங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டு மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் தெரிவித்தனர்.

மேலும் உயிரிழந்த மாணவர்களின் உறவினர்கள், நண்பர்களிடமும் வாக்குமூலங்கள் பெறப்பட்டு வருவதாகவும் தெரிவித்த பொலிஸார், பொலிஸாரின் ஒழுக்க விதிமுறை கோவையின் அடிப்படையிலான வாக்குமூலங்களை சந்தேக நபர்களிடம் இருந்து பெறுவதற்காக மன்றிடம் அனுமதி கோரியிருந்தனர்.

அதன் அடிப்படையில் எதிர்வரும் 28,29 ஆம் திகதிகளில் சந்தேக நபர்களிடம் இருந்து பொலிஸாரின ஒழுக்க விதிமுறை கோவையின் அடிப்படையிலான வாக்குமூலத்தினை பெறுவதற்கு நீதவான் அனுமதி வழங்கியதுடன், எதிர்வரும் டிசெம்பர் மாதம் 2 ஆம் திகதி வரை சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் கொக்குவில், குளப்பிட்டி பகுதியில் கடந்த 20 ஆம் திகதி உயிரிழந்த மாணவர்களில் விஜயகுமார் சுலக்ஸன் (வயது 24), துப்பாக்கிக் குண்டு பட்டு உயிரிழந்ததுடன், அவருடன் மோட்டார் சைக்கிளில் பின்னால் இருந்து பயணித்த மற்றைய மாணவரான கிளிநொச்சியைச் சேர்ந்த நடராசா கஜன் (வயது 23), விபத்தால் மோதுண்டு ஏற்பட்ட காயம் காரணமாக உயிரிழந்துள்ளதாக மன்றில் தர்ப்பளிக்கப்படடிருந்தமை குறிப்படத்தக்கது.

இதே வேளை நேற்றைய தினம் குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது பாதிக்கப்பட்ட தரப்பினர் சார்பில் சட்டத்தரணிகளான ஜெ.ரஞ்சித்குமார், கே.சயந்தன், வி.ரி.சிவலிங்கம், எம்.ஜெனகன், கே.குருபரன், திருமதி ரி.சயந்தன் ஆகியோர் ஆஜராகியிருந்தனர். (செ-9,4)

## புதையல்...

லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலய தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று அதிகாலை 4:00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவது, முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்திற்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலை அடுத்து முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகரின் நேரடி உத்தரவிற்கமைய முல்லைத தீவு மாவட்ட போதைப்பொருள் தடுப்பு பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் இ.சேந்தன் தலைமையிலான பொலிஸ் அணியினரின் நீண்ட நேர தேடுதல் முயற்சியின் பின்னராக, மேற்படி சட்ட விரோதமான முறையில் புதையல் தோண்டும் முயற்சியில் ஈடுபட்ட பத்து பேரை கைது செய்துள்ளதுடன் புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் குறித்த இடத்திலிருந்து பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இச்சம்பவத்தின் போது கைப்பறறப்பட்ட தடயப்பொருட்களுடன் கைது செய்யப்பட்ட பத்து சந்தேக நபர்களும் ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்தில் விசாரணைகளிற்காக ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளின் பின்னர் குறிதத நபர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிககைகள் துரிதப் படுத்தப்படுத்தப்பட்டு உள்ளதாகவும் முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலய தகவலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-15)

## கஞ்சா செடி...

மேலும் தெரியவருவதாவது,

யாழ்ப்பாணம் மணியம் தோட்ட பகுதியில் சட்டவிரோதமாக கஞ்சா செடி பயிரிடுவதாக யாழ்.பொலிஸாருக்கு தகவலொன்று கிடைத்திருந்தது.



இதனையடுத்து யாழ். பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பிரிவு உப பொலிஸ் பரிசோதகர் எஸ்.சிறிகஜன் தலைமையிலான குழுவினர் விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர்.

தொடர்ச்சியான விசாரணைகளின் ஊடாக 2ஆம் குறுக்கு தெரு மணியம் தோட்டம் பகுதியில் ஒருவர் கஞ்சா வளர்ப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதனையடுத்து குறித்த நபர் கைது செய்யப்பட்டிருந்தார். அத்துடன் குறித்த நபர் தமது வீட்டின் பின்புறத்தில் றப்பர் சாடியினுள் பயிரிடப்பட்டிருந்த கஞ்சா செடிகள் மூன்றினையும பொலிஸார் கைப்பற்றியிருந்தனர்.

இதன்படி கைப்பற்றப்பட்டிருந்த கஞ்சா செடிகளின் பெறுமதியானது 5 ஆயிரம் ரூபாயினைவிடவும் அதிகமானது ஒவ்வொரு கஞ்சா செடியும் 23 சென்றி மீற்றர் உயரமானவை எனவும் தெரிவித்த யாழ்.பொலிஸார் குறித்த கஞ்சா செடிகள் உட்பட கைது செய்யப்பட்ட நபரையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ் பொலிஸார் தெரிவித்தனர். (செ-4)

## 107 மேலதிக...

தொழிலாளர் காங்கிரஸ், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி ஆகியன வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்தன.

ஒன்றிணைந்த எதிர்க்கட்சி மற்றும்மக்கள் விடுதலை முன்னணி எதிராக வாக்களித்தன.

பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷ வாக்கெடுப்பின் போது நேற்றும் சபையில் பிரசன்னமாகியிருக்கவில்லை.

பாராளுமன்ற உறுப்பினர்களான சிறிபால, கம்லத், பிரேமலால் ஜயசேகர, தேனுக விதானகமமே மற்றும் எம்.எச்.எம்.சல்மான் ஆகியோர வாக்கெடுப்பில்கலந்துகொள்ளவில்லை.

அத்துடன், அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் சதுர சேனாரத்ன ஆகியோரும் வாக்கெடுப்பின் போது சபையில் பிரசன்னமாகியிருக்கவில்லை. (செ-11)


**வேலையாட்கள் தேவை**

- சமையலாளர் (உதவி-ஆண்/பெண்)
- பொதி செய்பவர் (ஆண்/பெண்)

மாலை 4மணிக்கு பின் நேரில் வரவும்

**இடியப்பக்கடை**
இல.05, மானிப்பாய் வீதி,
மருதனார்மடம்
(6593)

**அனைத்து நாடுகளுக்குமான விரைவு பொதிகள் சேவை**
விசேட விலை குறைப்பு
UK-550*/=Kg
DELIVERY IN 3 - 5 DAYS
மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்.
தொடர்புகளுக்கு: 0768226243
யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • வல்வெட்டித்துறை
V2 TRAVELS
(C-6359)

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்!
உணவே மருந்து!
SIKARAM ACADEMY, School of Hospitality
அறிமுகப்படுத்தும்
ஆயுசு 100
**யாழ்ப்பாண பாரம்பரிய ஆரோக்கிய உணவகம்**
இலைக்கஞ்சி, ஆட்டா றொட்டி, குண்டுத்தோசை
குழல் பிட்டு, கீரைப் பிட்டு, அரிசிமா இடியப்பம்
மரக்கறி, மீன், நாட்டுக்கோழி சாப்பாடு
சுறாப் பிட்டு, இறால் பிட்டு
பிட்டு / இடியப்ப கொத்து
ஆயுசு கோப்பி, பழரச பானங்கள்,
சூப் வகைகள், ஒடியல் கூழ்
பயற்றம் உருண்டை, சீனி அரியதரம்,
தட்டு வடை, முறுக்கு
யாழ் நகர எல்லைக்குள் FREE Delivery
இல.175, 1ம் குறுக்குத்தெரு
(வேம்படி பாடசாலை வீதி) யாழ்ப்பாணம்
தொ.பே.: 021 300 80 60
(C-6427)

இலங்கை வங்கி, மக்கள் வங்கி, கணக்காளா சேவை, பட்டதாரி ஆசிரியர், தொழில் அலுவலர், முகாமைத்துவ உதவியாளர் உட்பட அனைத்து அரச வேலைவாய்ப்பு விண்ணப்பங்கள் மற்றும் தனியார் துறை வேலைவாய்ப்பு பற்றி அறிய
**கோலாசிற்றி** 021 320 2787 தொழில் வங்கி
224/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (இலுப்பையடி சந்திக்கு அருகில்)
இனி நாம் இருக்கிறோம் நேரில் வரவும்

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

**வகுப்புக்கள்**

- இலங்கை கணக்காளர் சேவை பரீட்சைக்கான வகுப்புக்கள்
- இலங்கை அதிபர் சேவை தடைகாண் பரீட்சைக்கான வகுப்புக்கள்
- முகாமைத்துவ உதவியாளர், அரச பட்டதாரிகள் சேவையில் உள்ளவர்களுக்கான தடைகாண் பரீட்சை வகுப்புக்கள்.

ஆரம்பம் - 20.11.2016 காலை 9.30 AM
Beacon வெலிங்டன் சந்தி அருகாமை யாழ்ப்பாணம். 0778126101
(6642)

**வேலையாட்கள் தேவை**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு (இராமநாதன் வீதி) முன்பாக அமைந்திருக்கும் "Bright inn Fast Food" உணவகத்திற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.

- காசாளர் → (ஆண் / பெண்)
- உணவு பரிமாறுபவர்கள் → (ஆண் / பெண்)
- சமையலாளர்கள் → (ஆண் / பெண்)
- சமையல் உதவியாளர்கள் → (ஆண் / பெண்)

தொடர்புகளுக்கு :- Bright inn
51. Sivan Road, Thirunelvely, Jaffna.
Tel :- 021 222 1889 / 077 051 9406
(C-6228)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம்-என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.11.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.